ISSN-0971-8362

# திட்டம்

சிறப்பிதழ்

ஆகஸ்ட் - 2022 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 30

## இலக்கியமும் இந்திய விடுதலையும்


பிரிவினைக் கால இலக்கியம்
மனன் குமார் மண்டல்

ஆங்கில ஆட்சிக்கு எதிரான படைப்புகள்
சமன்லால்


வடகிழக்கு மாநிலங்களின் விடுதலைப் பாடல்கள்
சமுத்திரகுப்தா காஷ்யப்

இளம் கிளர்ச்சியாளர்
அனுராதாராய்

விடுதலை வேள்வியில் எழுந்த தமிழ் இலக்கியங்கள்
உ. அலிபாவா

கிராமசபை: கோட்பாடும் களமும்
க.பழனித்துரை



# தேசியக் கொடிச் சட்டம், 2002 - முக்கிய அம்சங்கள்




இந்திய மக்களின் நம்பிக்கைகளையும் விருப்பங்களையும் இந்திய தேசியக் கொடி பிரதிபலிக்கிறது. தேசியக் கொடி நமது தேசியப் பெருமிதத்தின் சின்னமாகும். தேசியக் கொடியின் மீது அனைவருக்கும் பாசமும் மரியாதையும் விசுவாசமும் உள்ளது. இந்திய மக்களின் உணர்ச்சிகளோடும் ஆன்மாவோடும் இது பின்னிப் பிணைந்திருக்கிறது. தனித்துவமான சிறப்பான இடத்தை இது பிடித்துள்ளது. இந்திய தேசியக் கொடியை ஏற்றுவதும்/பயன்படுத்துவதும் தேசியமரியாதை அவமதிப்புத் தடைச் சட்டம், 1971 மற்றும் இந்திய தேசியக்கொடிச் சட்டம், 2002 ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தியாவின் கொடிச்சட்டம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி I தேசியக்கொடியின் பொதுவான விளக்கத்தைக் கொண்டுள்ளது. பகுதி II பொதுத்துறை, தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவை தேசியக் கொடியைக் காட்சிப்படுத்துவது பற்றியது. பகுதி III மத்திய மாநில அரசுகள் அவற்றின் அமைப்புகள் முகவர்கள் தேசியக் கொடியைக் காட்சிப்படுத்துவது தொடர்பானது. இந்தியாவின் தேசியக்கொடிச் சட்டம் 2002இன் முக்கியமான சில அம்சங்கள் வருமாறு:

அ) டிசம்பர் 30, 2021 தேதியிட்ட உத்தரவின்படி இந்தியாவின் தேசியக் கொடி சட்டம், 2002 திருத்தப்பட்டது, பாலியஸ்டர் கொடிகள் அல்லது இயந்திரத்தால் செய்யப்பட்ட தேசியக் கொடிகளும் இதன் மூலம் அனுமதிக்கப்பட்டன. தேசியக் கொடியானது கைராட்டையால் நெய்யப்பட்ட, கையால் நெய்யப்பட்ட அல்லது இயந்திரத்தால் செய்யப்பட்ட, பருத்தி, பாலியஸ்டர், கம்பளி, பட்டு, காதி பந்தல் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) பொதுத்துறை, தனியார் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவை தேசியக் கொடியின் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் இசைவாக அனைத்து நாட்களிலும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேசியக் கொடியை ஏற்றலாம்/காட்சிப்படுத்தலாம்.

இ) தேசியக் கொடி செவ்வக வடிவில் இருக்க வேண்டும். கொடி எந்த அளவிலும் இருக்கலாம் ஆனால் கொடியின் அகலத்திற்கும் நீளத்திற்கும் இடையிலான விகிதம் 3:2 என்பதாக இருக்க வேண்டும். தேசியக் கொடியானது சம அகலம் கொண்ட மூன்று செவ்வகத் துண்டுகளால் ஆன மூவர்ணக் கொடியாக இருக்க வேண்டும். மேல் பகுதியில் உள்ள செவ்வகத் துண்டுப்பகுதியின் நிறம் காவி (கேசரி) கீழ்ப் பகுதியில் உள்ள செவ்வகத் துண்டுப்பகுதி பச்சை நிறமாக இருக்க வேண்டும். நடுப் பகுதி வெண்ணிறத்தில் இருக்க வேண்டும். அதன் மையத்தில் சம இடைவெளிகளுடன் கூடிய, 24 ஆரங்களைக் கொண்ட அசோக சக்கரத்தின் வடிவமைப்பு நீல நிறத்தில் அமைந்திருக்க வேண்டும். அசோக சக்கரமானது திரை அச்சீடாகவோ வேறுவிதமாக அச்சிடப்பட்டதாகவோ அல்லது ஸ்டென்சில் செய்யப்பட்டதாகவோ அல்லது பொருத்தமான எம்ப்ராய்டரியாகவோ இருக்கலாம். கொடியின் இருபுறமும் முழுமையாகத் தெரியும்படி வெள்ளைப் பட்டையின் மையத்தில் அசோக சக்கரம் அமைந்திருக்க வேண்டும்.

ஈ) வானிலை நிலவரங்களைப் பொருட்படுத்தாமல், சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை கொடி திறந்த வெளிகளில் கொடிகளை ஏற்றிப் பறக்கவிடப்படலாம். இரவிலும் கூட தேசியக் கொடியைப் பறக்கவிடலாம்.

உ) தேசியக்கொடி காட்சிப்படுத்தப்படும் போதெல்லாம் மரியாதைக்குரிய ஒரு இடத்தை அது பெற்றிருக்க வேண்டும் தனித்துத் தெரியும்படி தெளிவாக அது வைக்கப்பட வேண்டும்.

ஊ) சேதமடைந்த அல்லது சிதைந்த கொடிகளைப் பயன்படுத்தக் கூடாது.

எ) மற்ற கொடிகள் அல்லது கொடிகளுடன் சேர்த்து ஒரே நேரத்தில் ஒரே கம்பத்தில் தேசியக் கொடியைப் பறக்கவிடக்கூடாது.

ஏ) கொடிச் சட்டத்தின் பகுதி III பிரிவு IX-இல் குறிப்பிடப்பட்டுள்ள குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், ஆளுநர்கள் போன்ற குறிபிட்ட சில பிரமுகர்களைத் தவிர வேறு எவருடைய வாகனத்திலும் தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாது.

ஐ) தேசியக் கொடியை விட உயரமாகவோ அல்லது தேசியக்கொடிக்கு அருகிலோ வேறு எந்தக் கொடியும் வைக்கப்படக்கூடாது.

1971 தேசியமரியாதை அவமதிப்புத் தடைச் சட்டம் மற்றும் இந்தியாவின் கொடிச் சட்டம், 2002 ஆகியவை பற்றிய கூடுதல் விவரங்கள் உள்துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ளன.

- ஆதாரம்: mha.gov.in

## வீடுகள் தோறும் தேசியக்கொடி

இந்திய தேசியக் கொடி ஒட்டுமொத்த தேசத்தின் பெருமைக்குரிய சின்னமாகும். இந்திய சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழாவை ஒட்டி, நமது தேசியக் கொடியை மேலும் கௌரவிக்கும் வகையில், இந்தியர்கள் தங்கள் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு (ஹர் கர் திரங்கா) ஊக்கமளிக்கப்படுகிறது.

கொடியுடனான நமது உறவு தனிப்பட்டது என்பதைக் காட்டிலும் எப்போதும் முறைவழிப்பட்டது, நிறுவனமயப்பட்டது. இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டில் கொடியை வீடுகளுக்கு கொண்டு சேர்ப்பது என்பது தனிப்பட்ட தொடர்பின் அடையாளமாக மட்டுமல்லாமல், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான நமது அர்ப்பணிப்பின் உருவமாகவும் அமைந்திடும். மக்களின் இதயங்களில் தேசபக்தியைத் தூண்டி, தேசியக் கொடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் பின்னணியில் உள்ள யோசனையாகும்.

# திட்டம்

மாத இதழ்

Azadi Ka Amrit Mahotsav

மலர் 53

இதழ் 08

ஆகஸ்ட் 2022

ஷ்ரவண – பத்ரபாத 1944

ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடி – ஆவணி

முதுநிலை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**



கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

துணை இயக்குநர்

**திட்டம்**

வெளியீட்டுப்பிரிவு

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர், சென்னை -600 090

தொலைபேசி : 044 24465382, 044 24917673.

மின்னஞ்சல்: editorthittam@gmail.com

bmsechennai@gmail.com



உங்களுக்குத் தெரியுமா? : தேசியக் கொடிச் சட்டம், 2002 முக்கிய அம்சங்கள் 02

தலையங்கம் 04

பிரிவினைக்கால இலக்கியம்
- மனன் குமார் மண்டல் 06

ஆங்கில ஆட்சிக்கு எதிரான படைப்புகள்
- சமன்லால் 11

வடகிழக்கு மாநிலங்களின் விடுதலைப் பாடல்கள்
- சமுத்திரகுப்தா காஷ்யப் 16

காஜி நஜ்ருல் இஸ்லாம்: இளம் கிளர்ச்சியாளர்
- அனுராதா ராய் 22

இந்தி இலக்கியத்தின் பங்களிப்பு
- தேவேந்திர சௌபே 27

காந்தியத் தாக்கம்
- த்வானில் பரேக் 33

எமது வெளியீடு 36

இந்திய விடுதலை வேள்வியில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் - உ. அலிபாவா 37

புதிய வகை மருத்துவப் பரிசோதனைக் கருவிகள் உருவாக்கல்
- கே. விஜயேந்திரபாண்டியன் 42

காலனியப் பொது நாடக அரங்குகள்
- சுனித்ரா மித்ரா 48

பெண்களின் சமகால எழுத்துக்கள்
- கரிமா ஸ்ரீவத்சவா 54

கிராமசபை: கோட்பாடும் களமும்
- க.பழனித்துரை 57

தமிழ்நாட்டில் சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் 66

வங்கித் துறையில் தொழில்நுட்பப் புதுமை
- மஞ்சுளா வாத்வா 69

கவிதை 1857 75



Log on to **http://publicationsdivision.nic.in/**

in collaboration with **bharatkosh.gov.in**

**சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்**

இசை ரசிகரான பீகாரைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் ஒருவர், ஒரு முறை அவரது வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டார். சிறையில் இருந்தபோது, தனது குடும்பத்தினருக்கு அவர் ஒரு குறிப்பினை அனுப்பினார். அந்தக் குறிப்பு சிறை அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்ட போது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிரான சதித்திட்டமும், தேசத்துரோகமும் கொண்டதாக அது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதில், 'இஸ்ராஜ் கே தார் தீலே' என்று இந்தியில் எழுதப்பட்ட ஒரே ஒரு வரி மட்டுமே இருந்தது. 'இந்த ராஜ்யத்தின் (பிரிட்டிஷ்) பிடியைத் தளர்த்துவோம்' என அதில் எழுதப் பட்டிருப்பதாகப் புரிந்துகொள்ளப்பட்டது. அதிகாரிகள் அவரை வரவழைத்து, அந்தக் குறிப்பு பற்றி விசாரித்தனர். சிறையில் அடைக்கப்பட்டிருந்த அந்த தேசியவாதி அது தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டிருப்பதாகவும், தனது இசைக்கருவியான 'இஸ்ராஜ்' இன் (इसराज) சரங்களைத் தளர்த்திவிடுங்கள்' என்று தனது குடும்பத்தினருக்குத் தெரிவிக்க விரும்பியே தான் அவ்வாறு எழுதியதாகவும் பணிவுடன் அவர் பதிலளித்தார்.. இப்படிப்பட்ட வார்த்தைப் பிரயோகத்தின் சக்தியும் கூட அடக்குமுறையாளர்களின் அடித்தளத்தை அசைத்துப் பார்ப்பதற்குப் போதுமானதாக இருந்தது.

வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றை 'கற்பனை' செய்யும் ஆற்றலை வார்த்தைகள் தருகின்றன. எதிர்வரும் தலைமுறைகளுக்கு மதிப்புமிக்க வரலாற்றுப் பதிவுகளாக, அனுபவங்களாக அமையக்கூடிய வரலாற்று நிகழ்வுகளை 'எழுதவும் ஆவணப்படுத்தவும்' வார்த்தைகள் தான் வலிமையை வழங்குகின்றன.

தவறுகளுக்கு எதிராகக் கூட்டாக ஒன்று சேர்ந்து அவற்றை 'வெளிப்படுத்தவும் அவற்றிற்கு எதிராகச் செயல்படவும்' தைரியத்தை வார்த்தைகளே வழங்குகின்றன. இத்தகைய வார்த்தைகளின் பயணத் தையும், முழுவதும் கோடிக்கணக்கான இந்தியர்களின் குரலை எதிரொலித்தபடி சுதந்திரப் போராட்டக் காலம் அவை எவ்வாறு தொடர்ந்தி ருக்கின்றன என்பதையும் நாங்கள் மறுபரிசீலனை செய்கிறோம்.

ஆனந்தமடம் போன்ற வலுவான புனைகதை உருவாக்கங்கள் எதிர்ப்பு இயக்கத்தைத் தூண்டின. பாடல்கள், கவிதைகளையும் இது பெற்றெடுத்தது. கொடுங்கோன்மைக்கு எதிராக மக்களின் வெளிப் பாட்டிற்கு குரல் கொடுத்த முழக்கங்கள் மக்களிடம் எதிரொலித்தன. இந்த வார்த்தைகள் பெருத்த உற்சாகத்தை ஊட்டின. தாய்நாட்டின் மீதான தன்னலமற்ற அன்பையும் ஒற்றுமை உணர்வையும் இந்த வார்த்தைகள் பலப்படுத்தின. வந்தே மாதரம், சாரே ஜஹான் சே அச்சா, ஹிமாத்ரி துங் ஷ்ரிங் சே போன்ற கவிதைகளும் பாடல்களும் நமது வரலாற்றுப் பெருமிதம் பற்றியும், புவியியல் முக்கியத்துவம் பற்றியும் பெருமிதத்தை விதைத்தன. நமது நாட்டின் கலாச்சாரச் செழுமை மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தின. இந்தச் சொற்கள் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு மக்களை ஒன்றிணைத்தன.

**காசி நஸ்ருல் இஸ்லாம் எழுதிய இந்தக் கவிதை வரிகளைக் கவனியுங்கள்:**

"அவர்கள் இந்துக்களா அல்லது முஸ்லீம்களா என்று கேட்கிறார்கள்?/ தலைவரே, தயவு செய்து அவர்களிடம் சொல்லுங்கள்/ நீரில் மூழ்கி கொண்டிருக்கும் அவர்கள் மனிதர்கள், எனது தாயின் குழந்தைகள்!"

அவரது இந்த வார்த்தைகள் மக்களை ஒன்றாக பிணைத்தன.

துரதிர்ஷ்டவசமாக, புனைவுகளைக் காட்டிலும் விசித்திரமான பல நிகழ்வுகள் இந்த சகாப்தத்தில் நடந்தன. பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புவதற்காக அத்தகைய அநீதிகள், மிருகத்தனங்கள், அட்டூழியங்களைப் பற்றிப் பதிவு செய்ய வேண்டி வந்தது. செய்தித்தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் மற்றும் ஆங்கிலேயர்களை சுற்றிச் சுழன்று வந்த ஒவ்வொரு இலக்கியத்தின் மூலமும் இந்த ஆவணமாக்கல் செய்யப்பட்டது. அனைத்து இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளியான படைப்புகளும் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பின் தவறான செயல்களை அப்பட்டமாக வெளிப்படுத்தின. விஷயங்களைச் சரிசெய்வதற்கு தேசத்தின் கூட்டு மனசாட்சியை அவை உயர்த்தின.

நமது சொந்தத் தோழர்களாலேயே உண்டாக்கப் பட்ட பிரிவினையின் போது ஏற்பட்ட வலி, துன்பங்கள் பற்றிய எண்ணற்ற கதைகளையும் இத்தகைய எழுத்துக்கள் பதிவு செய்துள்ளன. இந்த வார்த்தைகள் எதையும் குறைவாக வெளிப்படுத்தவில்லை. இரத்தம் தோய்ந்த பிணங்களால் நிரம்பி வழியும் கிணறு போல, அவற்றின் துர்நாற்றம் வெகு தொலைவிற்கு உணரப்பட்டது. வெறுப்பு என்ற விஷத்தின் காரணமாக எண்ணற்ற கொடுமைகளை அவர்கள் கண்டனர்.

அந்தக் கொடுமை நமது சமுகத்தை மூழ்கடித்திருந்தது. நாம் அறிந்திருக்கும் 'பிரிவினை இலக்கியத்தை' அது தான் உருவாக்கியது. இந்த வார்த்தைகள் விவரிக்கும் விஷயங்கள் இன்னமும் நம்மை சிந்திக்க வைக்கின்றன. என்ன தவறு நடந்தது என்பதைப் பற்றி நாம் மேலும் சிந்திக்கவும், பின்னோக்கிப் பார்க்கவும் இந்த வார்த்தைகள் துணை செய்கின்றன.

'உணர்வுகளை வெளிப்படுத்தவும் தீர்வை நோக்கிச் செயல்படவும்' இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்ட போதிலும், படைப்பாற்றல், நகைச்சுவை, கலைத்தன்மை ஆகியவற்றையும் இவை சம அளவில் கொண்டிருக்கின்றன. அப்போதைய வங்காளத்தில் தேசத்துரோக செயலுக்காக நாடக நடிகர்களைக் கையும் களவுமாக பிடிப்பதற்காக தேசபக்தி நாடகத்தைக் கடமை உணர்வுடன் ஒவ்வொரு நாளும் கவனமாகப் பார்க்க வேண்டியிருந்த ஒரு பிரிட்டிஷ் போலீஸ்காரரின் அவல நிலையை எண்ணிப் பாருங்கள். பார்த்த நாடகத்தையே தினமும் பார்த்து வந்த அவரால் எந்தக் குறிப்பையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நடிகர்கள் ஒரு சில சொற்றொடர்களை முன்னறிவிப்பு இல்லாமல் எழுத்து வடிவில் இல்லாத புதிய வசனங்களை எந்த ஒரு நாளிலும் நாடகத்தில் சேர்த்துக் கொண்டுவிடுவார்கள். தேசபக்தி உணர்வால் அரங்கம் நிரம்பிவிடும். நாடகத்திற்குப் புது அர்த்தம் கிடைத்துவிடும். பின்னர், போராடுவதற்கான அறைகூவல் விடுக்கப்படும். இன்குலாப் ஜிந்தாபாத், கரோ யா மாரோ, தும் முஜே கூன் தோ, மை தும்ஹே அசாதி துங்கா, போன்ற பற்பல முழக்கங்கள் அப்போது ஒலித்தன. கூட்டு எதிர்ப்பின் அடையாளமாகவும் சக்தியாகவும் இத்தகைய முழக்கங்கள் மாறின.

சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் சாதாரண ஆண்களையும் பெண்களையும் பொது நன்மையை நோக்கி ஊக்கப்படுத்திய வார்த்தைகளை இந்த இதழ் கொண்டாடுகிறது. சுதந்திர சகாப்தத்தின் இத்தகைய வெளிப்பாடுகள், சுதந்திரப் போரட்டத்தின் அளப்பரிய முயற்சிகள் ஆகியவை பற்றிப் படிக்கவும் புரிந்து கொள்ளவும் உதவும் வகையில் எல்லாவற்றையும் இந்த இதழ் ஆவணப்படுத்தியுள்ளது. நமது முந்தைய தலைமுறையினர் அடைந்த துன்பங்கள், அவர்கள் பட்ட இன்னல்கள், அவர்களின் ஒருமித்த முயற்சிகள் ஆகிய அனைத்தையும் இந்த வார்த்தைகள் பதிவு செய்திருக்கின்றன. இத்தகைய சிந்தனைகளில் மூழ்குவதற்கு இந்த மாதத்தின் திட்டம் இதழ் உங்களுக்குத் துணை நிற்கும்.

**– ஆசிரியர்**

---

## சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு டிஜிட்டல் ஜோதியில் மரியாதை செலுத்துங்கள் - பிரதமர் வேண்டுகோள்.

விடுதலையின் அமிர்தப்பெருவிழாவை வலுப்படுத்த, டிஜிட்டல் ஜோதியில் நமது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு செலுத்தப்படும் மரியாதையைப் பகிர்ந்து கொள்ளுமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

"நமது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு சிறப்பான அஞ்சலி!

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் ஜோதி மூலம் நமது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்குமாறு உங்களை வேண்டுகிறேன்."

"தில்லியில் உள்ள மத்திய பூங்காவில் ஸ்கை பீம் விளக்கு நிறுவப்பட்டுள்ளது. செலுத்தப்படும் ஒவ்வொரு அஞ்சலியும் டிஜிட்டல் ஜோதியின் ஒளியைப் பரவச் செய்யும். தனித்துவமான இந்த முயற்சியில் பங்கேற்று விடுதலையின் அமிர்தப்பெருவிழாவை வலுப்படுத்துங்கள்" என்று பிரதமர் தனது சுட்டுரைப் பதிவில், தெரிவித்துள்ளார்.

முன்னுதாரணமும், முன்னேற்றங்களும்

# பிரிவினைக்கால இலக்கியம்

- மனன் குமார் மண்டல்

இந்தியாவின் பல மொழிகளிலும் உள்ள இலக்கியங்களில் அரசு மற்றும் விளிம்பு நிலை மக்களின் பலதரப்பட்ட சரித்திர நிகழ்வுகளைக் காணலாம். ஆதிக்க ஆட்சி, அதற்கு எதிரான நாட்டுப்பற்று சார்ந்த சிக்கலான பாதைகளால் நிரம்பியுள்ள நவீன இந்திய இலக்கியத்தில் சரித்திர நிகழ்வுகள் இலக்கியப் படைப்புகளாக வெளிவந்துள்ளன. விடுதலை பெற்ற இந்தியா பல இந்திய எழுத்தாளர்களுக்குப் புத்துணர்வூட்டி அவர்கள் பல படைப்புகளை தர இவை துணைபுரிகின்றன. மத மற்றும் சமூகப்பிளவுகள், விரிசல்கள், தெளிவற்ற நிலைமை ஆகியவை இந்திய ஆளுமையின் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பின்புலமாக இருந்து நவீன இந்திய இலக்கியத்தை வளர்த்தெடுத்துள்ளன.

இந்தியத் துணைக்கண்டம் பிரிவினைக்கு ஆட்பட்டது, மிகப் பெரிய அளவிலான சேதங்களையும் தொடர் பாதிப்புகளையும் பல தலை முறைகளுக்குக் கொடுத்துள்ளது. பல இந்திய மொழிகளின் இலக்கியத்தன்மைக்கு 20ஆம் நூற்றாண்டின் ஒரு முக்கிய நிகழ்வாக அது அமைந்துள்ளது பலப்பல பத்தாண்டுகளாக காழ்ப் புணர்ச்சிகளும் தீய எண்ணங்களும் அலை வீசின. பிரிவினைக்கால நிகழ்வுகளைக் கொண்ட 20ஆம் நூற்றாண்டின் பிரிவினைக்கால இந்தப் புதிய படைப்பிலக்கியங்கள் பேரழிவு இலக்கியம், அகதிகள் இலக்கியம் என்பவற்றுக்கு இணை யாகப் பெயர் பெற்றன.

உலகெங்கும் நடைபெற்ற நாட்டுப்பிரிவினைகளால் உந்தப் பட்டு உருப்பெற்ற இலக்கியங்களில் காலனி ஆதிக்கத்திற்குப் பிறகான உலக வாழ்க்கை நிலைமைகள் முக்கியமான பிரதிபலிப்பாக விளங்குகின்றன. உலகம் பல பிரிவினைகளைக் கண்டுள்ளது, உதாரணமாக இஸ்ரேல்பாலஸ்தீனம், அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து, இரண்டாகப் பிரிந்து மீண்டும் இணைந்த ஜெர்மனி, முன்னாள் யுகாஸ்லாவியாவின் பிளவுகள், கொரியா மற்றும் வியட்நாமின் பிரிவினைகள் என்று இருபதாம் நூற்றாண்டு நெடுக பலப்பல பிரிவினைகள் நடந்தன. ஒவ்வொரு பிரிவினையிலும் நாட்டைக் கூறு போடும் போது பிளவுபட்ட பகுதி களில் உள்ள மக்களின் வாழ்க்கை பல்லாண்டுகளாக தொடர்ந்து இன்னலுற்று வந்துள்ளன. இந்த இன்னல்களின் மனிதத்துவத்தை உலகின் பல மொழி இலக்கியங் களில் நாம் காண முடியும். ஆனாலும், ஒவ்வொரு புதிய நாட்டின் எல்லை களும் தனித்துவமும், பண்பாட்டுப் பாரம்பரியமும் மிக்கவை. ஆகவே, அவை சார்ந்த இலக்கியங்களும் பலவகைப்பட்டன. ஒவ்வொரு பிரிவினையும் வலிமைமிக்க அரசியலமைப்பு, வலிமையிழந்த நாடுகளின் வலியிலிருந்து உயர்ந்தவை. வலிமையிழந்த நாடு களில் புதிய தேசப்பற்று தோன்றி, புதிய தேசிய அடையாளங்கள் உருவாக்கியுள்ளன. ஆகவே, பிரிவினைக்கால இலக்கியங்களில் நாம் மூழ்கும் முன்னே பலதரப்பட்ட அடையாளங்களின் கோணத்தில் அவற்றை நாம் அணுகவேண்டும். காலனி ஆதிக்கத்திற்குப் பிற்பட்ட காலங்களில் வாழும் நிலையில் பிரிவினைக்கால இலக்கியங்கள், அரசு ஆளுமைகளின் எதிர்மறை நியாயங்களை வெளிப்படுத்து வதோடு, பிளவுபட்ட நாடுகளின் அருகே வாழும் மக்களின் வாழ்க்கையையும் சித்தரிக்கிறது. பல நாடுகளின் பிளவுகளுக்குப் பிறகு, நாடு பிளவுபடுவதற்காகக் கூறப்பட்ட காரணங்கள் பலகாலங் களாக கேள்விக்குறியாயின. ஆகவே, பிரிவினைக்கால இலக்கி யங்களில் எதிர்மறை நியாயங்களை கூர்ந்து கவனிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

பிரிவினைக்கால இலக்கியங் கள் தனித்துவ இலக்கியங்களாக உருவாகி 1970களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் அவை, காலனி ஆதிக்கம் ஒழிந்து புதிய நாடுகள் தோன்றும் போதே துவங்கின. உலகத்தின் பல பாகங்களிலிருந்து இவற்றிற்கான உதாரணங்களை நாம் காணலாம்.

பாலஸ்தீனிய எழுத்தாளர் கசன் கனாஃபனியின் 'மென் இன் தி சன்' (பாலஸ்தீன்-இஸ்ரேல்), ஆன்டன் 'ம்மாஸின் ஹெப்ரூ நாவல் 'அரபிக்யுஸ்' (பாலஸ்தீன் இஸ்ரேல்) ஏ.பி.யோஹோஷ்வாவின் முதல் ஹெப்ரூ நாவல் 'தி லவர்' (இஸ்ரேலிய அடையாளம் மற்றும் அந்நாட்டு வம்சாவளியினர்), ருஷ்டியின் மிட்நைட் சில்ரன் (இந்தியாவின் பிரிவினை) அய்ரிஷ் நாட்டுக் கவிஞர் மற்றும் எழுத்தாளர் சிமஸ்டேனின் முதல் நாவல் 'ரிடிங் இன் தி டார்க்' (அயர்லாந்து பிரிவினை), கொரியன் எழுத்தாளர் கிம் வான் இல் எழுதிய நாவல் 'ஸ்பிரிட் ஆஃப் டார்க்நெஸ்' (கொரியா நாட்டுப்பிரிவினை), தாக் வான் சூவின் நாவல் 'தி நேகட் ட்லீறி' (கொரியன் பிரிவினை), இஸ்ரேலிய எழுத்தாளர் ஹோரஸ் லீஷலாக்கின் 'பிக்னிக் கிரவுண்ட்ஸ் எ நாவல் இன் ஃப்ராக்மெண்ட்ஸ்' (இஸ்ரேலிய வம்சாவளியினர்), பங்களாதேஷ் எழுத்தாளர் அக்தருஜ்மான் இலியாஸின் இரண்டு பெங்காலி நாவல்கள், 'திசோல்ஜர் இன் தி ஆடிக்,' (சிலக்கொத்தார் சிப்பாய், பாகிஸ்தான் பங்களாதேஷ் பிரிவினை) மற்றும் 'தி சாகா ஆஃப் ட்லீறிம்ஸ்', (கோப்நாமா பாகிஸ்தான் பங்களாதேஷ் பிரிவினை), யுகஸ்லோவிய எழுத்தாளர் தேப்ரெளகா, உக்ரேச்சிக்கின் நாவல்கள் தி 'மியுசியம் ஆஃப் அன் கன்டி'னல் சரண்டர்', மற்றும் 'தி மினிஸ்ட்ரி ஆஃப் பெயின்' (யுகஸ்லோவியா பிரிவினை) மற்றும் இறுதியாக குறிப்பிடத்தக்கவை கீதாஞ்சலி ஸ்ரீயின் ஹிந்தி நாவல் ரேத் சமாதி 'டோம்ப் ஆஃப் சாண்ட்' (இந்தியாவின் பிரிவினை). இந்த புத்தகத்தின் ஆங்கில வடிவம் சமீபத்தில் சர்வதேச புக்கர் விருது பெற்றது. பிரிவினையின் போது பாதிக்கப்பட்ட எழுத்தாளர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரு நாடு உருவாதின் சிக்கலான போக்கு இப்படித் தொடர்கிறது. இந்தப் பிரிவினைக்கால இலக்கிய ங்கள் சமூகப் பொருளாதார எதிர்மறைக் கருத்துக்களையும், போட்டிக் கருத்துக்களையும், பண்பாட்டு வெளிப்பாடுகளையும் புலப்படுத்துகின்றன.

**பின்னணி:**

இந்தியாவில் இதுவரை மூன்று பிரிவினைகள் ஏற்பட்டு, மூன்று தனி நாடுகள் உருப்பெற்றுள்ளன. ஆண்டுக்கிரமமாக பார்த்தால் 1905, 1947 மற்றும் 1971இல் இப்போதைய நவீன தெற்காசியா மூன்று முறை பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டு, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உருப்பெற்றுள்ளன. ஆங்கிலேயர் கால இந்தியாவில் வங்க மாகாணமும் பஞ்சாப் மாகாணமும் பிரிவுபட்டதை அடுத்து, இந்தியாவில் காலனி ஆதிக்கம் முடிவு பெற்றது. இந்தச் சிக்கலான சமூக அரசியல் மற்றும் பண்பாட்டுச் செயல்பாட்டில் முக்கிய அடித்தளமாக இருந்தது மொழியே. அது இணைக்கவும், பிரிக்கவும் அடித்தளமாக அமைந்தது. இப்படி பிரிக்கப்பட்ட பகுதிகளின் மொழி களான உருது, இந்தி, பஞ்சாபி, பெங்காலி மற்றும் சிந்தி ஆகிய முக்கிய மொழிகள் தங்களுடைய மொழி அடையாளத்தாலும், ஒரு சிறு வகையிலான தேசியத்தையும் உணர்த்தி, அம்மொழி இலக்கிய இதனைப் பிரதிபலிக்கின்றன. பிரிவினைக் காலப் பேரழிவுகளைச் சந்தித்த ஒரு பரம்பரைக்கான இந்திய எழுத்தாளர்கள் கொடூர மான பிரிவினைக்கால நிகழ்வு களான கலவரங்கள், கொள்ளை, பயங்கரவாதம், உயிரிழப்பு, அகதி களாகப் புலம்பெயர்வது, எல்லா வற்றையும் இழந்து தவிப்பது, கடுமையான மன உளைச்சல் என்பவை அவர்களை முழுமையாகச் சீர்குலைத்துள்ளன. இந்தப் பிரிவினைக்கால வன்முறைகளால் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று இப்போது ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஆனால், அறிவுஜீவிகள் இந்த இழப்பு அதற்கும் மேல் என்று கருதுகிறார்கள். (2,00,000 முதல் 20,00,000 வரை பல சமூகங்களைச் சார்ந்த சுமார் 75000 பெண்கள் கற்பழிக்கப்பட்டு, அபகரிக்கப்பட்டு அல்லது காணாமல் போய் இருக் கிறார்கள் என்று கூறப்படுகிறது). சமீப காலத் தகவல்களின்படி, 1,45,00,000 மக்கள் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே புலம் பெயர்ந்துள்ளதாகக் கருதப் படுகிறது. இது அல்லாமல், 35 இலட்சம் மக்கள் காணாமல் போனவர்களாகக் கருதப் படுகிறார்கள். கிழக்குப் பகுதியில் 1971 வரை புலம் பெயர்வது தொடர்ந்து நடைபெற்றது. இது, பிரிவினையால் ஏற்படும் நிரந்தர அழிவாகவும், சோக நிகழ்வாகவும் காணப்படுகிறது. இந்தியா விடுதலை பெற்று புதிய இந்தியா உருவான போது, 1946இல் ஒரு புறம் கல்கத்தா கொலைகள், மறுபுறம் நவகாளிக் கலவரங்கள், அம்ரித்சர் முதல் லாகூர் வரை எல்லா வழிகளிலும் கற்பனை

செய்து பார்க்க முடியாத கொடூர நிகழ்வுகளைக் கண்டோம். தேவையில்லாத இந்தப் பிரிவினையால் ஒரு புதிய சுதந்திர இந்தியா உருவானது இதுவே விடுதலையின் மற்றொரு முகம். இவற்றிலிருந்து எழுந்த சரித்திரத்தின் வலிமை வாய்ந்த குரல்களை சுட்டிக்காட்டிய முஷஜீருல் ஹசன் இப்படிக் கூறினார் 'விடுதலை மற்றும் தேசப்பிரிவினைக்கான சரித்திர நிகழ்வுகளைக் காட்டிலும் புலம் பெயர்ந்தோரின் தனிப்பட்ட வாழ்க்கைகள் இந்திய தேசியம், மதச்சார்பின்மை, அஹிம்சை மற்றும் உண்மையான ஜனநாயக ஆளுமையைக் காட்டிலும் மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய அநீதியைத் தான் கதை கதையாகக் கூறியது'.

முக்கியமாக, இந்த வகையில் சிறுகதைகளையும், நாவல்களையும் கூறலாம். ஆனால், பிரிவினைக் காலத்துச் சூழ்நிலையைச் சார்ந்த சில கவிதைகளையும், நாடகங்களையும் கூறலாம். ஹிந்தி மற்றும் உருது எழுத்தாளர்கள் இந்த வகையில் முன்னோடியாக இருந்தார்கள். இந்தியப் பிரிவினையின் மிக மகத்தான எழுத்தாளராகக் கருதப்படும் சாதாத் ஹசன் மாண்டோ, தானே பிரிவினைக்கால கொடுமைகளையும், நிச்சயமற்ற தன்மைகளையும், தாக்கங்களையும் தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்தார். பிரிவினைக்கால நிகழ்வுகளில் ஒருவருக்கொருவர் தங்களின் உணர்வுகளால் தாக்கிக் கொண்டதை கதைகளாக வடித்தார். இந்தியத் துணைக் கண்டப் பிரிவினையின் மிகப்பெரிய துயர நிகழ்வுகளைக் காட்சிப் படுத்தும் கதைகளாக 'தண்டா கோஷட்' 'தோபா தேச் சிங்' 'கோல் தோ', 'டாக் ஆஃப் தித்வால்' போன்றவன்றைக் காணலாம். இந்தக் கலகச் சூழ்நிலையில் ஃபைஸ் அகமது ஃபைஸ் காலத்தால் அழிக்க முடியாத கவிதைகளை எழுதினார். அந்தக் காலத்தில் மேற்குப்பகுதி உருது மற்றும் ஹிந்தி எழுத்தாளர்கள் பலர் பிரிவினைக்கால நிலைமைகளை மிக உருக்கமாக வடித்திருக்கிறார்கள். உதாரணமாக கி'ன் சந்தர் 'பெஷாவர் எக்ஸ்பிரஸ்' கொரதொலன் ஹைதர் 'ஆக் கா தரியா', யஷ்பால்ஜூடா 'ஸச்', நஜீம் ஹிஜாஸி'காக் அவுர் கூன்', ராஹி மசூன் ரேசா'ஆதா காவ்', மனோஹர் மல்கான்கர்'எ பெண்ட் இன் தி காஞ்சஸ்', ராஜியா பட் பானோ 'இந்திஸார் ஹூசேன் பஸ்தி, அம்ரிதா ப்ரிதம்'பிஞ்சார்', பீஷம் சஹானி 'தமஸ்', மு.ளு. துக்கல்'மா பியோ லாயே', குஷ்வந்த் சிங்'டிரெயின் டு பாகிஸ்தான்', கம்லேஷ்வர்'கித்னே பாகிஸ்தான்', போன்றவை. இவற்றில் விவரிக்கப்பட்டவை பயங்கரமான அனுபவங்கள், வன்முறைகள், பெண்களைக் கடத்திக் கற்பழித்தல், அகதிகளாக வாழ்ந்த அவல நிலை மற்றும் எதிர்காலம் இல்லாத வாழ்க்கைப் பயணங்கள். 'பந்த் தர்வாஜே' என்ற தலைப்பில் கே.எஸ்.துக்கல் ஒரு கவிதைத் தொகுப்பையும் 'தோயா, ஹோயா பூஹா' என்ற தலைப்பில் கதைகள் தொகுப்பை ஒன்றையும் வெளியிட்டார். பிரிவினைக்குப்பின் அடுத்த 50 ஆண்டுகளில் வெளிவந்த தலைப்புகளைப் பற்றி அவர் இப்படி கூறுகிறார்: 'பஞ்சாபின் பிரிவினை, அதனால் ஏற்பட்ட புலப்பெயர்வுகள், துன்புறுத்தல், மக்கள் சந்தித்தத் தொல்லைகள் உட்பட்ட கவலை சூழ்ந்த அனுபவங்களை எழுதுவது இயல்பு தான். ஆனாலும், அது அவ்வளவு எளிதல்ல. எழுத்தாளர்கள் தாங்கள் நேரில் கண்ட சில காட்சிகளால் நடுநிலைமை இழந்து காட்சிப்படுத்தினர். நடந்த பேரழிவுக்கு ஒரு சாராரையே குற்றம் சாட்டினர்.

நாட்டுப் பிரிவினையைக் கண்டுணர்ந்த பல எழுத்தாளர்கள் இதைப் பற்றிக் கருத்து கூறியிருக்கிறார்கள். சமீப கால எழுத்தாளர்களில் ஒருவரான கிருஷ்ணா சோப்தி, 'இங்கொரு குஜராத்தி அங்கொரு குஜராத்தி' என்ற நாவலில் தன்னுடைய இளமைக்கால நண்பரின் கொலை தன்னை எப்படி வாழ்நாள் முழுவதும் துன்புறுத்தியது என்பதை விளக்கியிருக்கிறார். இந்த வகையில் பிரிவினையால் ஏற்பட்ட வன்முறைகளும் நிச்சயமற்ற சூழ்நிலையும், கதைகளின் கருத்தாக அமைந்தன. ஆனால், பிரிவினை ஏற்பட்ட பல ஆண்டுகளுக்குப் பின் எழுதப்படும் புனைவுகள் ஒரு புதிய தன்மையை வெளிப்படுத்துகின்றன. நிரந்தர கொடுமை அனுபவங்கள் மாறி, பிரிவினையால் ஏற்பட்ட பலவகையான தொல்லைகள் இப்போது காணப்படுகின்றன.

ஆனால், இன்னொரு வகையில் வங்க எழுத்தாளர்கள் இந்த நிலைமைகளில் சற்று தாமதமாகவே இருந்திருக்கிறார்கள். இந்த வகையில் மூன்று பந்தோபாத் யாயாக்கள்தாரா ஷங்கர், மணி மற்றும் விபூதிபூஷன் ஆகியோரின் பங்களிப்பை நாம் கூறமுடியும். மிகச்சிறந்த எழுத்தாளரான ரித்விக்

கட்டக் பிரிவினையால் ஏற்பட்ட மனித இனத்திற்கான பாதுகாப் பின்மையை மிக அழகாக விளக்கு கிறார். அவரின் படைப்புகளான 'மேகேதாகா தாரா', 'கோமல்கந்தா' மற்றும் 'ஸ்வர்ணலதா' ஆகியவை நீண்ட ஆண்டுகளுக்கு நம் நினைவில் நிற்கும். நிமாய் கோஷான் 'சின்னமுல்' அகதி களின் வாழ்க்கைகளின் உண்மை யை மையமாகக் கொண்டிருந்தது. இந்தத் தொகுப்பில் தங்களுடைய ஏராளமான படைப்பாளிகள் தங்களது பங்களிப்பைச் செய்து ள்ளனர். ஆங்கில மொழி இந்தி எழுத்தாளர்களும் வெளிநாடு வாழ் பிரபல எழுத்தாளர்களும் தங்களுடைய புனைவுகளுக்கு இந்தியாவின் பிரிவினையை மையக் கருத்தாகக் கொண்டு ள்ளனர். பாப்சி சித்வா'ஐஸ்கேண்டி மேன்', அமிதாவ் கோஷ் 'தி ஙிஷடோ லைன்ஸ்', ஜூம்ஹால் லஹிரி 'இன்டர்பிரட்டர் ஆஃப் மெலடிஸ்', ஸீஷனா சின் பால்ட்வின்'வாட் த பாடி ரிமம்பர்ஸ்', ரோஹின்டன் மிஸ்திரி 'எ ஃபைன் பாலன்ஸ்' ஆகியோரை உதாரணங் களாகக் கூறலாம். இது அல்லாமல், புனைவு அல்லாத சுயசரிதை எழுத்துக்களும், பெங்காலி, ஹிந்தி மற்றும் ஆங்கிலப் படைப்புகளாக நாம் பார்க்கலாம்.

**வரலாற்றுத் தொகுப்புகள், தொகுப்புகள் மற்றும் முனைவுகள்:**

1950கள் தொட்டே இந்தியப் பிரிவினையின் சரித்திரத் தொகுப்பு கள் சிறப்பாக அமைந்துள்ளன. முதல் 50 ஆண்டுகளில் அரசியல் அழுத்தமிக்கதாக இருந்த வெளியீடுகளில் போகப் போக பெண்களின் நிலைமை, பிரிவினை தாக்கத்தில் இருந்து உயிர் தப்பிய வர்களின் நேரடி அனுபவங்கள், ஜாதிகள் சார்ந்த நிகழ்வுகள் ஆகியவை இடம் பெற்றன. பி.ஆர். அம்பேத்கர் எழுதிய 'ஸ்டார்டிங் ஃப்ரம் பாகிஸ்தான் ஆர் பார்டி'ன் ஆஃப் இந்தியா' டாக்டர். ஷ்யாமா பிரசாத் முகர்ஜி'அவேக் ஹிந்துஸ் தான்' பெண்டரல் மூன்'டிவைட் அண்ட் க்விட்', லாரி காலின்ஸ் மற்றும் டாமினிக் லேபியர்'ஃப்ரிடம் அட் மிட்நைட்', மௌலானா அபுல் கலாம் ஆஸாத் 'இந்தியா வின்ஸ் ஃப்ரிடம்' வரையிலான புனைவு அல்லாத படைப்புகள் கருத்து மோதல்களை வெளிப்படுத்து கின்றன. வங்கமொழியில் கிரண் மொய் பந்தோபாத்யாய் எழுதிய 'உத்பத்சு' என்ற படைப்பில் புனர்வாழ்வுப் பணிகளுக்காக அரசு அலுவலராக அவர் செயல் பட்ட போது ஏற்பட்ட அனுபவங்களை விளக்கியுள்ளார். பிரஃபுல்ல சக்ரவர்த்தியின் 'தி மார்ஜினல் மென்'என்ற படைப்பு, அகதிகள் மறுவாழ்வு மற்றும் மேற்கு வங்கத்தில் அவர்களுடைய நிலைமை என்பதை மிக விரிவாக விளக்குகிறது. சரிதைத் தொகுப்பு களாக அபுல் மன்சூர் அகமதின் 'அமர் தேகா' ராஜ்நீதிர் பஞ்சாஸ் பசோல், அபுல் ஹஷாமின்'அமர் ஜுபன்' 'ஒ பிபாங்பூர்பவின 'பங்கலாலர் ராஜ்நீதி' கலிபதா பிஸ்வாசின், ஃபஜ்ரூல் ஹக் என்பவரின் வாழ்க்கையான 'ஜுக்தோ பங்களாதேழிஷர் சேஷ் ஹத்யாய்' மற்றும் தாதாகதராயின் 'பாரத் கேசரி ஜுக புருஷ் ஷ்யாமா பிரசாத்' ஆகிய படைப்புகள் இவற்றுள் அடங்கும்.

இந்தியாவில் பிரிவினை ஏற்பட்டு, 50 ஆண்டுகள் கடந்த பின் சில பெண் எழுத்தாளர்கள், பிரிவினையின் புதிய கோணத்தைப் படைத்தனர். இந்தியா பிரிவினை அடைந்து 70 ஆண்டுகள் கழித்து, புதிய அணுகுமுறையில் 'புதிய சரித்திரம்' என்ற தலைப்புகளில் விளிம்பு நிலை மக்கள், மூன்றாவது தலைமுறை மக்கள் ஆகியோரின் சரித்திரத்தை அலசி எடுப்பது புதிய பார்வையாக இருக்கிறது.

பல சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் கவிதைகள் பெங்காலி, ஆங்கிலம், ஹிந்தி மொழிகளில் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இந்த இலக்கிய வகைகளுக்கு ஆர்வமிக்க வாசகர்கள் இருந்த தைத் தெளிவுபடுத்துகிறது. வங்க மற்றும் பிறமொழிக் கவிதைகளின் மொழிபெயர்ப்புகளை, மஹாபேந்திர பந்தோப்பாத்யாய இரண்டு தொகுப்புகளாக வெளியிட்டார் - பேத் பிபேத் (1922). தேபேஸ ரெயின் ரக்தா மனிர் ஹாரே (1999, 2003) படைப்பில் பல இந்திய மொழிகளில் வெளியான 62 சிறுகதைகள் வங்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பஷீர் ஃப்ரேசர் தான் எழுதிய 40 வங்க மொழிச் சிறுகதைகளை 'பெங்கால் பார்டிஷன் ஸ்டோரி' என்ற தலைப்பில் 2008இல் வெளியிட்டார். இந்த வரிசையில் வெளியிடப்பட்ட மிக அருமையான தொகுப்பு அலோக்பல்லாவின் இந்தியப் பிரிவினை பற்றிய கதைகள் தொகுப்பு I, II, III (1994) இதில் 63 இந்திய மொழிச் சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்புகளில் பிரிவினை சார்ந்த கதைகளை எழுத்தாளர்கள் எந்த வகையில் நிகழ்வுகளை அளித்தார் களோ அந்த வகையில் நான்கு பிரிவுகளாக வகுத்தார். கோபத்தை

யும், ஏற்றுக் கொள்ளாமையையும் விளக்கும் கதைகள், வருத்தங் களையும் ஆறுதல்களையும் வெளிப்படுத்தும் கதைகள், பழைய நிகழ்வுகளை நினைவு கூறும் கதைகள் ஆகியவை நேரிலே பார்த்தவர்களின் புனைவுக் கதைகளாக அளிக்கப்பட்டுள்ளன. சமுதாய மக்களின் ஒன்றிணைந்த நினைவுகளுக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த தலைமுறைகளில் அவை நினைவற்று போனதும் விவரிக்கப் பட்டுள்ளன. சில படைப்புகளில் பிரிவினைக் கொடுமைகளை நேரில் கண்டு அனுபவித்தவர்களின் வாய்மொழிக் கூற்றுகள் இடம் பெற்றுள்ளன. இப்படிப்பட்ட நிகழ்வுகளைக் கூறிய ஹிந்து அகதிகளின் கதைகள் அம்ரித் பஜார் பத்ரிகாவில் 1950களில் வெளிவந்து பிறகு தக்ஷாண ரஞ்சன் பாசு 'சேரே ஹாசா க்ராம்'(1975) என்ற தொகுப்பில் வெளியிட்டார். இதைப் போலவே ஹோஷாயார்பூரிலிருந்து லாகூருக்கு ரயிலில் பயணித்த ஒரு காவல் அலுவலர் தாம் கண்ட பிரிவினைக்கால அனுபவங் களையும் கொடுமைகளையும் உருது மொழியில் 'ஹோஷாயாபூர் டு லாகூர்' என்ற தலைப்பில் வெளியிட்டார். இந்த இரண்டு புத்தகங்களும் சமீப காலங்களில் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது, பிரிவினைக்கால எழுத்துக்களுக்கு இன்றும் மக்களிடையே உள்ள ஆவலை தெளிவுபடுத்துகிறது.

**பின்னுரை:**

கடந்த சில பத்தாண்டுகளாக உலகெங்கும் பிரிவினைக்கால இலக்கியங்கள் மக்களிடையே பெரும் கவனம் பெற்றுள்ளன. இந்த சூழ்நிலையில் மூன்று முறை பிளவுபட்ட இந்திய துணைக் கண்டத்தின் இலக்கியங்களை நாம் மீண்டும் படிக்க வேண்டும். பிரிவினைக்கால இலக்கியங்கள் உருது மற்றும் ஹிந்தி மொழிகளில் மிகுந்துள்ளன. ஆனால், இந்தி அல்லது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படாத பல பிரிவினைக் கால வங்கமொழிப் படைப்புகள் தேசிய அளவில் கவனம் பெறாம லேயே உள்ளது. இன்று பல பதிப்பகங்கள் தெற்காசியப் பிரிவினை இலக்கியங்களை வெளியிட்டு வருகின்றன. ஆனால், இந்தியத் துணைக்கண்டம் மற்றும் அதை சார்ந்த அடுத்த நாடுகளில் ஏற்பட்ட பிரிவினைகளின் போக்கால் பல புதிய படைப்புகளாக அருகமைந்த நாடுகள், ஆய்வுகள், புலம் பெயர்வு ஆய்வுகள், தலித் ஆய்வுகள், நினைவு ஆய்வுகள் மற்றும் பிற செயல் நிலைமைகள் என்ற தலைப்புகளில் வெளியிடப் படுகின்றன. இதனால், இப்போதைய பார்வை எல்லைப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வு களைப் பற்றியும், பல நிலை வாழ்வாதாரங்களைப் பற்றிய வெளியீடுகளாக உள்ளன. சுதந்திரம் பெற்று 75 ஆண்டு களுக்குப் பிறகு பிரிவினைக்கால இலக்கியங்களை நாம் மீண்டும் படிப்பது என்பது இந்திய கண்டத்தின் ஒரு புதிய வாழ்க்கை அமைப்பைப் படிப்பது போல் ஆகும்.

– மனன் குமார் மண்டல்,
கொல்கத்தா, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திறந்த நிலைப் பல்கலைக்கழக வங்காள இலக்கியத்துறைப் பேராசிரியர்இ மானிடவியல் துறை இயக்குநர்.

## விடுதலை வீரர்கள்


சுப்பிரமணிய அய்யர்


கக்கன்


சிங்காரவேலர்


எதிர்ப்பு காட்டிய இலக்கியங்கள்

# ஆங்கில ஆட்சிக்கு எதிரான படைப்புகள்

– சமன்லால்

உலகெங்கும் பல்வேறு காலக்கட்டங்களில் ஆட்சி செய்த அடக்குமுறையாளர்கள், அரசு நிர்வாகத்திற்கு எதிரான சிந்தனைகளைச் சிதைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். ஆனாலும், இத்தகைய ஒடுக்குமுறைகளைக் கடந்து, சிந்தனைச் சுதந்திரம் மற்றும் எதிர்ப்புகளுடன் இணைந்தே மனித நாகரிகமும் கலாச்சாரமும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. அடக்குமுறையாளர்களால் தடை செய்யப்பட்ட கவிதைகள் அந்நிய ஆட்சியாளர்களிடம் இருந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற விடுதலை வேட்கையையும், இலக்கை அடைவதற்காகச் செய்யப்பட்ட தியாகங்களையும் அதற்கான நடைமுறைகளில் அனுபவித்தத் துயரங்களையும் எதிரொலிக்கின்றன.

காலனி ஆதிக்கத்தின் போது அச்சகங்களும், செய்தித்தாள்களும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி அடைந்திருந்தன. ஆசியாவின், குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால் இந்தியாவின் முதலாவது வார இதழான பெங்கால் கெசட் என்ற இதழ் பிளாசிப் போரில் நவாப் சிராஜ் உத்தௌலாவை வீழ்த்தி, 1757ஆவது ஆண்டில் இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளை கிழக்கிந்தியப் படைகள் கைப்பற்றிய பிறகு 1780ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் தேதி ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. ஆனால், கிழக்கிந்தியக் கம்பெனியால் இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரலாக 1773ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட வாரன் ஹேஸ்டிங்ஸ், பெங்கால் கெசட் இதழை அது தொடங்கப்பட்டதில் இருந்து இரு ஆண்டுகளுக்கு அதிகார பலம் கொண்டு நசுக்கினார். அதன் காரணமாக, 1782 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி வெளியிட்ட இதழுடன் பெங்கால் கெசட் அதன் பதிப்பை நிறுத்திக் கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான



எழுத்துக்களையும் இந்திய ஊடகங் களையும் ஒடுக்குவதற்காக கிழக்கிந்தியக் கம்பெனி பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தது. 1799 ஆம் ஆண்டு இந்தியாவின் முதலாவது ஊடகத் தணிக்கைச் சட்டத்தை அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரபு கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து மூன்றாவது ஊடக ஒழுங்குமுறைச் சட்டம் 1818 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தின்படி, லாலா லஜபதி ராய் கைது செய்யப்பட்டு, பர்மாவில் உள்ள மண்டலே சிறையில் அடைக்கப் பட்டார். அதனைத் தொடர்ந்து, 1823 ஆம் ஆண்டின் உரிமங்கள் ஒழுங்குமுறைச் சட்டம், 1835ஆம் ஆண்டின் அச்சகச் சட்டம் அல்லது சார்லஸ் மெட்காஃப் சட்டம், 1857 ஆம் ஆண்டு உரிமங்கள் சட்டம் போன்ற பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன.

மிர்ஸா பேதார் பக்த் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த பாயம்இஆசாதி (விடுதலை யின் செய்தி) என்ற பெயரிலான உருது இதழ், 1857 ஆம் ஆண்டு முதலாவது இந்திய விடுதலைப் போரை ஆதரித்து எழுதியது. அதனால் ஆத்திரமடைந்த ஆங்கிலேயர்கள் அந்த இதழின் ஆசிரியரைப் பொதுமக்கள் முன்னி லையில் தூக்கிலிட்டுப் படுகொலை செய்தனர். அதுமட்டுமின்றி, யார் யாருடைய வீட்டில் எல்லாம் பாயம் இஆசாதி நாளிதழ் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதோ, அவர்கள் அனைவரும் கிழக்கிந்தியக் கம்பெனியால் தூக்கிலிடப்பட்டனர். 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய விடுதலைப் போரின் போது பல்வேறு இந்திய மொழிகளில் வெளிவந்த செய்தித்தாள்கள் தடை செய்யப்பட்டன அல்லது கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

1858 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிவினைவாதச் சட்டம் 124ஏ நிறைவேற்றப்பட்டது. பாலகங்காதர திலகர் போன்ற இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்களின் சிந்தனையை ஒடுக்குவதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, பாலகங்காதர திலகருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டன. அதுமட்டுமின்றி, அவரது செய்தித்தாளான கேசரி மீது வழக்குகள் தொடரப்பட்டன. 1898 ஆம் ஆண்டில் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருந்த பிரிவினை வாதச்சட்டம் 124ஏஇல் 153ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டு, பிரிவினைவாதச் சட்டத்தின் நடவடிக்கை வரம்புகள் விரிவாக்கப் பட்டன. இந்தச் சட்டத்தின் புதிய பிரிவான 153ஏவின்படி, மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தியதாகக் கூறி, எவர் மீதும் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது. பின்னாளில் இந்தச் சட்டத்தில் 295ஏ என்ற இன்னொரு பிரிவு சேர்க்கப்பட்டது. இந்தச் சட்டங்கள் அனைத்தும் இந்திய விடுதலைப் போரை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆங்கிலேயரின் காலனி ஆதிக்க ஆட்சியால் கொண்டு வரப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க விசயம் என்ன வென்றால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த ஆங்கிலேயர்கள், அவர்களின் நாடான இங்கிலாந்தில் இந்தச் சட் த்தை ரத்து செய்து விட்டனர் என்றாலும் கூட, அவர் களின் ஆளுகைக்குள் ஒற்றை நாடாக இருந்து பிரிந்த இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் இந்தப் பிரிவினைவாதச் சட்டம் இன்னும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. 1898ஆம் ஆண்டில் அலுவல் ரகசியச் சட்டம் பின்னர் இந்திய அஞ்சலகச் சட்டம், அதன் பின்னர் இந்திய சுங்கச் சட்டம் ஆகியவை இயற்றப்பட்டன. இவை அனைத்தும் இந்தியாவில் புத்தகங்களையும், வெளியீடு களையும் கட்டுப்படுத்தின. அதன் பின் இந்தச் சட்டங்களுக்கு எல்லாம் தலைமைச் சட்டமாக இந்திய அச்சகச் சட்டம் 1910ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் அதன் பின் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்றவகையில் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

தேசிய அளவிலும், மாநில அளவிலும் செயல்பாட்டில் இருந்த இது போன்ற பல்வேறு சட்டங்களின் பிரிவுகள் மூலம் நூல்களும், பிற வெளியீடுகளும் தடை செய்யப் பட்டன. அவற்றை வெளியிட்ட வெளியீட்டாளர்களுக்குக் கடுமை யான அபராதம் விதிக்கப்பட்டது மட்டுமின்றி, சிறையிலும் அடைக்கப் பட்டனர். ஜெரால்டு என்பேரியர் என்ற வரலாற்று ஆய்வாளர், கடந்த 1974ஆம் ஆண்டு வெளியிட்ட "ஆங்கிலேயர் இந்தியாவில் 1907 முதல் 1947 வரையிலான காலத்தில் தடை செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய இலக்கியங்களும், பிரிட்டிஷ் இந்தியா மீதான அரசியல் கட்டுப் பாடுகளும்"என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையை வெளி யிட்டார். அதில், இந்தியாவில் தடை செய்யப்பட்ட வெளியீடுகள் குறித்து ஏராளமான விவரங்களை அவர் பதிவு செய்திருக்கிறார். அதன் பின்னர், பகத்சிங் மற்றும்

ஹிந்தி எழுத்தாளர்களான சந்தோஷ் பதோரியா, ரஷ்டம்ராய் போன்றவர்களின் தடை செய்யப் பட்ட இலக்கியங்கள் குறித்து குருதேவ் சிங் சித்து மேற்கொண்ட ஆய்வறிக்கைகள் இவை தொடர் பாக மேலும் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. அதே போல், மேலும் பல மொழிகளைச் சேர்ந்த அறிஞர்களும் இந்த ஆய்வுக்குப் பங்களித்திருக்கின்றனர். மேற் குறிப்பிடப்பட்ட காலத்தின் போது, தடை செய்யப்பட்ட இந்திய மொழி இதழ்கள் 66 மற்றும் 3 ஆங்கில வெளியீடுகளை ஆராய்ச்சியாளர் குருதேவ்சிங் சித்து பட்டியலிட்டு இருக்கிறார். இந்தியாவை ஆட்சி செய்த காலனி ஆதிக்க ஆட்சி யாளர்கள் இந்தியாவில் தடை செய்யப்பட்ட இதழ்களின் ஒரு நகலை லண்டனுக்கு அனுப்பி வைப்பார்கள். அங்கு அவை பாதுகாப்பாக வைக்கப்படும். அந்த வகையில் புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய ஆவணக் காப்பகம், இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் நூலகம் ஆகியவை தடை செய்யப்பட்ட இந்திய வெளியீடு களைப் பாதுகாத்து வைக்கும் இரு மிகப் பெரிய ஆவணக் காப்பகங் களாகத் திகழ்ந்தன. வரலாற்று ஆசிரியரும் பேராசிரியருமான நோர்மன் ஜெரால்டு பேரியர் இது தொடர்பாக எழுதிய ஆய்வுக் கட்டுரையில், தில்லியில் உள்ள இந்திய தேசிய ஆவணக் காப்ப கத்தில் மட்டும் இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஆங்கிலம் உள்ளிட்ட 9 மொழிகளைச் சேர்ந்த ஆயிரத் திற்கும் மேற்பட்ட இதழ்கள் சேகரித்து வைக்கப்பட்டு இருப்ப தாகவும், பிரிட்டிஷ் அருங்காட்சி யகத்தில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட இதழ்களும், லண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் 1905க்கும் மேற்பட்ட சேகரித்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. லண்டனில் செயல்பட்டு வந்த இந்திய அலுவலக நூலகம், பிரிட்டிஷ் அருங்காட்சியகம் ஆகியவை இப்போது பிரிட்டிஷ் நூலகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டன. தில்லியில் உள்ள இந்திய தேசிய ஆவணக் காப்பகம் தடை செய்யப்பட்ட நூல்களில் சில வற்றைத் தேர்வு செய்து சில தொகுப்புகளாக வெளியிட்டி ருக்கிறது. பல்வேறு மொழிகளில் தடை செய்யப்பட்ட வெளியீடுகளின் தலைப்புகளை ஆய்வு செய்த போது, அவற்றின் கருப்பொருளை விளக்கும் வகையில், சில கருப்பொருள்கள் கிடைத்தன. அவை காந்தி, பகத்சிங், விடுதலை, இன்குலாப், தேசபக்தி, கீத்தரானே, கூனி, பன்சி, தேசம், வாட்டன், சூல்ம், சலீம் உள்ளிட்டவை ஆகும். இந்த ஆவணங்களின் வேறு சில ஆதாரங்கள் லாகூரில் உள்ள பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில ஆவணக் காப்பகம், இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தின் ஆவணத் தொகுப்பகம், சிக்காகோ பல்கலைக்கழகத்தில் உள்ள தெற்காசிய ஆராய்ச்சி மையம், கலிஃபோர்னியாவில் உள்ள பெர்க்ளே பல்கலைக் கழகத்தின் கடர் இயக்கம் சார்ந்த ஆவணத் தொகுப்பகம், நியூயார்க் பொது நூலகம், கனடா, சிங்கப்பூரின் தேசிய ஆவணத் தொகுப்பகம் ஆகியவற்றிலும் கடர் இயக்கத்தின் வெளியீடுகள் அனுப்பப்பட்ட பல்வேறு நாடு களிலும் உள்ளன.

தடை செய்யப்பட்ட வெளியீடு களில் உள்ள சில தேர்ந்தெடுக்கப் பட்ட கவிதைகளை மட்டும் முதலில் 1987ஆம் ஆண்டிலும், பின்னர் 1998ஆம் ஆண்டிலும் யோஜனா/ திட்டம் இதழ்களை வெளியிடும் புதுதில்லியில் உள்ள இந்திய பப்ளிகேஷன் டிவிஷன் அச்சிட்டு வெளியிட்டது. இந்திய விடுதலை யின் 75வது ஆண்டுக் கொண்டாட் டங்களைக் குறிக்கும் வகையில் மேற்கண்ட இரு வெளியீடுகளையும், பப்ளிகேஷன் டிவிஷன் கடந்த 2021ஆம் ஆண்டில் திருத்தி மறுபதிப்பு செய்தது. அத்துடன், ஒவ்வொரு கவிதை அல்லது பாடலுக்கும் கலை நயம் மிக்க ஓவியங்களும் சேர்க்கப்பட்டன. இவ்வாறு வெளியிடப்பட்ட இரு கவிதைத் தொகுப்புகளின் தலைப்புகள் ஆசாதி கி லடாய் கே சப்த்சுடா தரானே(Azadi ki Ladai ke Zabtshuda Tarane), சப்த்சுடாகீத்: ஆசாதி அவுர்ஏக்தாகிதரானே (Zabtshuda Geet: Azadi aur Ekta ke Tarane) ஆகியவை ஆகும்.

சப்த்சுடாகீத்: ஆசாதி அவுர் ஏக்தா கி தரானே என்பதன் பொருள் "தடை செய்யப்பட்டப் பாடல்கள்: விடுதலை மற்றும் ஒற்றுமைப் பாடல்கள்"என்பதாகும். இந்த நூல் 1987ஆம் ஆண்டு ராம்ஜனம் சர்மா என்பவரால் தொகுத்து வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டில் இந்த நூல் மறுபதிப்பு செய்யப்பட்ட போது, ஒவ்வொரு பாடலுக்கும் ஏற்றவாறு பல்வேறு ஓவியக் கலைஞர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் இந்த நூலில் சேர்க்கப்பட்டன. இந்த நூலைத் தொகுத்த ராம்ஜனம் சர்மா எழுதியுள்ள ஆசிரியர் உரையில் இந்திய தேசிய ஆவணக்

காப்பகத்தில் உள்ள ஆவணங்களின்படி, 264 ஹிந்திப் பாடல்கள், 58 உருதுப் பாடல்கள், 19 தமிழ்ப் பாடல்கள், 10 தெலுங்குப் பாடல்கள், பஞ்சாப் மற்றும் குஜராத்தி மொழியில் தலா 22 பாடல்கள், 13 மராத்திப் பாடல்கள், 9 சிந்திப் பாடல்கள், 11 ஒரியாப் பாடல்கள், 4 வங்க மொழிப் பாடல்கள், 1 கன்னட மொழிப் பாடல் ஆகியவை தடை செய்யப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார். இவற்றில் பெரும்பாலானவை தேவநாகரி எழுத்து வடிவில் மூலமொழியிலோ அல்லது மொழி பெயர்க்கப்பட்ட வடிவிலோ பதிப்பிக்கப்பட்டுள்ளன. சப்த்சுடாகீத் என்பது தேவநாகரி வடிவில் எழுதப்பட்ட சில தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும். இந்நூலில் மொத்தம் 59 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 41 கவிஞர்களின் பெயர்கள் அவர்களின் பாடல்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற பாடல்களை எழுதிய கவிஞர்கள் யார் என்பது தெரியவில்லை. ரவீந்திரநாத் தாகூர், இக்பால், மக்கன்லால் சதுர்வேதி, சுபத்ரிகுமார் சௌகான், ராம்பிரசாத் பிஸ்மில் உள்ளிட்ட புகழ்பெற்ற கவிஞர்களின் பாடல்கள் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனினும், இந்தத் தொகுப்பை விட இன்னும் சிறப்பான தொகுப்பு ஆசாதி கி லடாய்கே சப்த்சுடா தரானே என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டது தான். இதன் பொருள் "விடுதலைப் போராட்டத்தின் தடை செய்யப்பட்டப் பாடல்கள்"என்பதாகும். 1998ஆம் ஆண்டு முதலில் வெளியிடப்பட்ட இந்தத் தொகுப்பின் இரண்டாம் பதிப்பு கலைநயத்துடனும், அழகியல் மிகுந்த ஓவியங்களுடனும் 2021 ஆம் ஆண்டு மறுபதிப்பு செய்யப்பட்டது. இந்தத் தொகுப்பில் மொத்தம் 112 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 100 பாடல்களின் ஆசிரியர் விவரங்கள் இடம் பெற்றுள்ளன. 12 பாடல்களை எழுதிய கவிஞர்களின் பெயர் விவரம் தெரியவில்லை. இந்த நூல் மொத்தம் 135 பக்கங்களைக் கொண்டது ஆகும். பலவகைப்பட்ட பாடல்கள் இந்தத் தொகுப்புக்காகத் தேர்வு செய்யப்பட்டாலும் கூட, அவற்றில் பல பாடல்கள் பொது வானவை ஆகும். இக்பால் எழுதிய "சாரே ஜஹான்சே அச்சா"பாடல் இந்தத் தொகுப்பில் ஓர் அங்கமாக இடம் பெற்றுள்ளது. புகழ்பெற்ற ஹிந்திக் கவிஞர்களில் ஒருவரான சுபத்ரகுமாரி சௌகானின் புகழ் பெற்ற பாடலான "ஜான்சி கி ராணி"என்ற பாடல் "ஆசாதி கி தேவி"என்ற பெயரில் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான வீரமும் துணிச்சலும் நிறைந்த போரை இந்தக் கவிதை விளக்குகிறது. போர்க்களத்தில் நடந்த போரையும், ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட்ட ஜான்சிராணி, தமது 23வது வயதில் உயிர்நீத்த போதிலும், அதற்கு முன்பாக ஏராளமான ஆங்கிலேய வீரர்களை எவ்வாறு கொன்றார் என்பதையும் இந்தக் கவிதைக்கான படக்காட்சிகள் விளக்குகின்றன. மக்கன்லால் சதுர்வேதியின் "புஷ்ப்கி அபிலாஷா" அல்லது "ஒரு மலரின் விருப்பம்"என்ற தலைப்பிலான கவிதை மிகவும் சிறியது என்றாலும் கூட, விடுதலைக்கான காரணங்களை விளக்கக்கூடிய மனதை தொடும் பாடல் ஆகும். இந்த பாடல் ஒரு மலரின் ஆசை விளக்குவது ஆகும். தாய்நாட்ட விடுவிப்பதற்காகத் தங்களி தலைகளைக் கொடுப்பதற்காக தயாரான மனநிலையுட போருக்குச் செல்லும் துணிச்ச மிகுந்தவர்கள் செல்லும் பாதையி என்னைக் கிடத்துங்கள் என் ஒரு மலர் கூறுவதாக இந்த பாடல் அமைந்துள்ளது. வழக்க மாக ஒரு மலர் மகளிரின் தலை களை அலங்கரிப்பதையே அல்லது மன்னர்கள் மீது தூவ படுவதையோ தான் விரும்பும் ஆனால் இந்தப் பாடல் ஆசிரிய அதற்கு முற்றிலும் மாறான வகையில், போர் வீரர்களைச் கௌரவிக்க மலர் விரும்புவதாகச் கற்பனை செய்திருக்கிறார். விஷ்வ விஜய் திரங்கா பியாரா என்ற வரிகளைக் கொண்ட ஷியாம்லால் குப்த் பிரசாத்தின் புகழ்பெற்ற "ஜண்டேகாகீத்" (ஒரு கொடியின் பாடல்) பாடலும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளான ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபக்குல்லாகான் ஆகிய இருவரும் புகழ்பெற்றக் கவிஞர்கள் ஆவர். சர்ஃபரோசிகித மன்னா என்ற பாடல் ராம்பிரசாத் பிஸ்மில் என்பவரால் எழுதப்பட்ட தாகப் பலராலும் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அந்தப் பாடல் பிஸ்மில் அசீமாபாதி என்பவரால் எழுதப்பட்டது ஆகும். இந்தப் பாடல் புரட்சியாளர்களின் வாழ்க்கையை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்களில் இடம்பெறும் அளவுக்குப் புகழ் பெற்றதாகும். பகத்சிங்கின்

வாழ்க்கையைத் தழுவித் தயாரிக்கப்பட்ட மனோஜ்குமாரின் ஷஹீத் என்ற திரைப்படத்தில் மெல்லிசைப் பாடலாக இது இடம் பெற்றிருக்கிறது."விடுதலைக்காக எங்களது தலையையும் கொடுப்ப தற்கான விருப்பம் தான் எங்கள் மனதில் உள்ளது. எங்களைக் கொல்லத் துடிக்கும் கொலைகாரர் களின் ஆயுதங்கள் எவ்வளவு வலிமையானவை என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்"என்பது தான் இந்தப் பாடல் வரிகளின் பொருள் ஆகும்.

விடுதலைப் போராட்ட வீரரான அஷ்ஃபக்குல்லாகான் உருது மொழியில் பாடல்களை இயற்றக் கூடியவர். அவரது உள்மனதின் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய அவரது சில பாடல் வரிகளும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. "நாங்கள் வாழ்கிறோமா இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல. மாறாக, எங்கள் நாடு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; விடுதலை அடைய வேண்டும்" என்பது தான் இவரது ஒரு பாடலின் பொருள் ஆகும்.

ரவீந்திரநாத் தாகூரின் பாரத் பிரசாத்ஸ்ரீ அல்லது பாரதத்தின் பாராட்டு என்ற தலைப்பிலான பாடல் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. 1930ஆம் ஆண்டில் கவிஞர் ஜோதிசங்கர் எழுதிய பாடலும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. "இந்தியா தொடர்ந்து அடிமையாகவே இருக்காது. அது விடுதலை அடைய வேண்டும். அதற்கான நேரம் வந்து கொண்டி ருக்கிறது"என்பது தான் இந்தப் பாடலின் பொருள் ஆகும்.இந்திக் கவிஞர் சிக்கோர் 1930ஆம் ஆண்டில் எழுதிய கிஷான் என்ற தலைப்பிலான கவிதையும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. ஆங்கிலேயரின் காலனி ஆதிக்க ஆட்சிக்கு ஆதரவாகச் செயல்படும் இந்திய நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாக ஆங்கிலேயர் ஆட்சியால் ஒடுக்கப்பட்ட இந்திய விவசாயிகளின் துயர நிலை குறித்து இந்தக் கவிதை விளக்குகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது நிலவிய இந்துமுஸ்லீம் ஒற்றுமை குறித்து பியாரா ஹிந்துஸ்தான் ஹமாரா என்ற தலைப்பிலான பாடலைப் புகழ் பெற்ற கவிஞர் ஹம்தான் இயற்றியுள்ளார். விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்துக் களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நிலவிய ஒற்றுமை உணர்வை "இந்துஹோயா முசல்மான், கேதேமுகலிஃபோன்சே / ஹிந்திஹைஹாம், வதன்ஹை ஹிந்துஸ்தான் ஹமாரா" என்ற வரிகளில் இந்தப் பாடல் விளக்கு கிறது. "நாங்கள் இந்துக்களோ அல்லது இஸ்லாமியர்களோ எங்களின் எதிர்களிடம் கூறுங்கள் நாங்கள் இந்தியர்கள் என்று எங்களின் நாடு இந்தியா என்று" என்பது தான் இந்தப் பாடலின் பொருள் ஆகும். இந்தியா அல்லது பாரதம் என்பது 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்த பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் ஆகும். ஆனால், அதற்கு முன் ஹிந்துஸ்தான் என்பது தான் இந்தியாவின் பெயராக இருந்தது. இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்ட ஆங்கிலேயப் பாடகர் எர்னஸ் ஜோன்ஸ், 1857 ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்டம் குறித்து எழுதிய கவிதைக்கு "இந்துஸ்தானின் புரட்சி"என்று தான் பெயரிட்டி ருக்கிறார்.

ஜன்நிசார் அக்தர், சாகிர் லுதியான்வி, ஹஃபீஸ்ஜலந்தாரி, ஹஸ்ரத்மோஹானி, மக்தூன் மொய்னுதீன், டிக்காராம்சுகான், சோஹன்லால்திவிதே, அலிசர்தார் ஜாஃப்ரி, பிரிஜ்நாராயன் சாக்பாஸ்ட், சுவாமி நாராயணனந்தர், பண்டிட் மேலரங்வாஃபா உள்ளிட்ட பலரது கவிதைகள் இந்தத் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன. 1857ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது இந்திய விடுதலைப் போர், 1919ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலை, 1922ஆம் ஆண்டு நடைபெற்ற சௌரி சௌரா வன்முறை, 1927ஆம் ஆண்டு கக்கோரி ரயில் கொள்ளை தியாகிகள் ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபக்குல்லாகான், நாஜ்வான் பாரத்சபா, பகத்சிங்கின் இந்துஸ் தான் சோசலிசக் குடியரசுச் சங்கம் மற்றும் பிற போராளிகள், ஜான் சவுண்டர்ஸ் மற்றும் மைக்கேல் ஓடைவரின் படுகொலைகள் 1929 ஆம் ஆண்டு சட்டசபை குண்டு வெடிப்பு வழக்கு, 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம் உள்ளிட்ட நிகழ்வுகளும் இந்திய அரசின் புத்தக வெளியீட்டுப் பிரிவின் சிறப்பு வெளியீடாக வெளியிட்ட இந்தத் தொகுப்புகளில் உள்ள கவிதை களில் இடம் பெற்றுள்ளன.

---

– **சமன்லால்,** பேராசிரியர் (ஓய்வு), மொழிகள் துறையின் முன்னாள் முதன்மையர், பஞ்சாப் பல்கலைக்கழகம், சண்டிகர் மற்றும் கௌரவ ஆலோசகர் பகத்சிங் ஆவணக் காப்பகம் மற்றும் வளமையம், புதுதில்லி

# வடகிழக்கு மாநிலங்களின் விடுதலைப் பாடல்கள்

- சமுத்திரகுப்தா காஷ்யப்

இன்றைய வடகிழக்குப் பிராந்தியத்தை 1826ஆம் ஆண்டு பர்மிய ஆக்கிரமிப்பாளர்களுடன் செய்து கொண்ட யான்டாபூ உடன்பாட்டைத் தொடர்ந்து வெள்ளையர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கினர். அதற்கு முன் 1817, 1819, 1821 ஆகிய ஆண்டுகளில், சுதந்திர நாடுகளாகத் திகழ்ந்த அஸ்ஸாம் மற்றும் மணிப்பூரை பர்மியர்கள் ஆக்கிரமித்தனர். அதன் பின்னர் பர்மியர்களை வெளியேற்றிவிட்டு, தாங்களும் திரும்பி விடுவதாகக் கூறி அஸ்ஸாம் மாநிலத்திற்குள் நுழைந்த வெள்ளையர்கள், அங்கு தேயிலைத் தோட்டங்களும், பெட்ரோலிய வளமும் இருப்பதைக் கண்டறிந்த பின்னர் அங்கேயே தங்கிவிட்டனர்.

அஸ்ஸாம் மாநிலத்திற்குள் நுழைந்த வெள்ளையர்கள், அங்கு தேயிலைத் தோட்டங்களும், பெட்ரோலிய வளமும் இருப்பதைக் கண்டறிந்த பின்னர் அங்கேயே தங்கிவிட்டனர். அஸ்ஸாம் மாநிலத்தின் மலைப்பகுதிகளிலும், தரைப் பகுதிகளிலும் வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையினர் போதிய கல்வி அறிவு இல்லாததால் வாய் மொழியாகத் தான் சமூகத் தகவல்களை அவர்களால் பரப்ப முடிந்தது. பல்வேறு வகையான நாட்டுப் புறபாடல்கள் விடுதலை உணர்வு குறித்த செய்திகளை நாடு முழுவதும் பரப்பின. விடுதலையை விரும்பக் கூடிய தேசபக்தி கொண்ட மக்கள் விடுதலைப் போராட்ட வீரர்களின் சாகசங்கள் பற்றியும், தியாகங்கள் குறித்தும் பாடத் தொடங்கினார்கள். எனினும், இந்தப் பாடல்களை எழுதி இசையமைத்துப் பாடிய மக்கள் அவற்றை ஆவணப்படுத்தாததால், பெருமளவிலான பாடல்களும், கவிதைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பயன்பாட்டில் இல்லாமல் போயின. ஆனாலும், ஒரு சில அறிஞர்களின் உதவியால் சில பாடல்களின் சில பகுதிகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பாடல், பெரிய ஆறுகளில் பெருக்கெடுத்து வந்த வெள்ளம் நெல் விளைவித்திருந்த வயல்களை மூழ்கடித்தது. ஆனாலும் கவலைப்படாதே, மேல் பகுதி நிலங்களில் குளிர் காலத்தில் நெல்லை மீண்டும் விதைப்போம். வெளிநாட்டவரை வெளியேற்றும் பணியில் ஒரு வேளை நாம் மடிந்துவிட்டாலும், நாம் என்றென்றும் இரவாமல் தான் இருப்போம் என்று சொல்கிறது.



ஆங்கிலேயர்களுக்கு எதிரான எதிர்ப்பு குறித்த செய்திகள் 1830ஆம் ஆண்டுகளிலேயே வாய்மொழிப் பாடல்கள் மூலமாக அஸ்ஸாம் மாநிலம் முழுவதும் இவ்வாறு தான் பரவின. ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்த காலம் என்பது அஸ்ஸாமியர்கள் மற்றும் மணிப்பூரியர்களிடம் எழுத்தறிவு மிகவும் குறைவாக இருந்த காலம். மற்ற சமுதாயங்களில் மொழிக்கான எழுத்துக்கள் கூட அந்தக் காலத்தில் இல்லை. அதனால், மலைப்பகுதிகளிலும், தரைப்பகுதிகளிலும் வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையினர் போதிய கல்வி அறிவு இல்லாததன் காரணமாக வாய்மொழிதான் சமூகத் தகவல்களைப் பரப்புவதற்கான அவர்களின் ஒரே தகவல் தொடர்பு முறையாக இருந்தது.

அஸ்ஸாம் மாநிலத்தில் 1828ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட முதல் எதிர்ப்பு இயக்கத்தை ஆங்கிலேயர்கள் மிகவும் எளிதாக நசுக்கிவிட்டனர். அந்த இயக்கத்தின் தலைவர் கோம்தார் கொன்வார், வங்காளத்தில் உள்ள சிறைக்கு அனுப்பப்பட்டார். அவர் அந்தச் சிறையிலேயே ஆங்கிலேயர்களின் பிடியில் அவர் உயிரிழந்தார். இரண்டாவது எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்த தலைவர்களான பியோலிபுகான், ஜியூராம், துலியா, பருவா ஆகியோர் 1830ஆம் ஆண்டு தூக்கிலிடப் பட்டனர். பல்வேறு வகையான நாட்டுப்புறப் பாடல்கள் விடுதலை உணர்வு குறித்த செய்திகளை நாடு முழுவதும் பரப்பின. விடுதலையை விரும்பக்கூடிய தேசபக்தி கொண்ட மக்கள், எதிர்ப்பு இயக்கங்கலைச் சேர்ந்த போராட்ட வீரர்களின் சாகசங்கள், தியாகங்கள் குறித்துப் பாடத் தொடங்கினார்கள்.

அஸ்ஸாமில் 1857ஆம் ஆண்டு தொடங்கிய எதிர்ப்பு இயக்கத்தின் புகழ்பெற்ற கதாநாயனான மணிராம் திவான் 1858ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தூக்கிலிடப்பட்டபோது, நாட்டுப்புறப் பாடல்களால் மக்களிடையே ஏற்பட்டிருந்த தாக்கம் மிகவும் வலிமையானதாக இருந்தது. மக்கள் அந்தப் பாடல்களைத் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தனர். அதன் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் தீவிரம் அடைந்து கொண்டிருந்த விடுதலைப் போராட்ட இயக்கத்திலிருந்து அவர்களைப் பிரிக்க முடியாத அளவுக்கு, விடுதலை இயக்கத்துடன் மக்கள் ஒன்றுபட்டனர். அஸ்ஸாம் மாநிலத்தின் புகழ்பெற்ற நாட்டுப்புறப்பாடல் வகையான பிஹு பாடல் ஒன்றில் விடுதலைப் போராட்டத் தலைவரான மணிராம் திவான் அஸ்ஸாமியர்களுக்கு பிஹு திருவிழாவுக்கு இணையான அளவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று போற்றப்படுகிறார். அதே போல், பல்லாட் எனப்படும் மற்றொரு வகையான நாட்டுப்புறப் பாடலில் மணிராம் திவானை பல்லாட் பாடலுக்கு இணையானவர் என்று குறிப்பிடும் வகையில், மணிராம் திவானர் பல்லாட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாடலில் அவரது தேசபக்திச் செயல்கள் தேயிலைத் தொழில் துறைக்கு அவரது பங்களிப்புகள், கொல்கத்தாவுக்கு அவர் மேற்கொண்ட பயணங்கள், வெள்ளையர்களை வெளியேற்றுவதற்கான அவரது உத்திகள், அவர் உயிர்த்தியாகம் செய்தது உள்ளிட்ட நிகழ்வுகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் போராட்டத்தின் போது, இவைதான் மக்களுக்கு உத்வேகத்தை அளிக்கும் பாடல்களாகத் திகழ்ந்தன. விடுதலைக்குப் பிந்தைய காலத்தில், 1963ஆம் ஆண்டில், மணிராம் திவானர் பல்லாட் பாடலின் சில வரிகளை ஓர் அஸ்ஸாமிய மொழித் திரைப்படத்திற்காக புகழ்பெற்ற அஸ்ஸாமிய இசைக்கலைஞரான பூபென்ஹ சாரிகா பாடினார்.

அதே போல், 1861ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய அஸ்ஸாமில் உள்ள நாகோவான் மாவட்டத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு எதிராக புலாகுரி பகுதியில் விவசாயிகள் மிகப் பெரிய போராட்டம், நடத்தினார்கள். இது புலாகுரி போர் என்று அழைக்கப்படுகிறது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான இந்தப் போர், விடுதலைப் போராட்ட உணர்வை ஏற்படுத்தக்கூடிய வாய்மொழிப் பாடல்களை இயற்றுவதற்கு மக்களைத் தூண்டியது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான உழவர்கள் போராட்டத்தின் போது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏராளமான உழவர்கள் கொல்லப்பட்டதாகவும், வேறு பலர் அந்தமானுக்கு நாடு கடத்தப் பட்டதாகவும் அந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. புலாகுரி பகுதியைச் சேர்ந்த பாஹுகை வர்த்தா என்ற உழவர் அந்தமானில் சிறைத்தண்டனையை அனுபவித்துவிட்டுத் திரும்பும் போது புலாகுரிப் போரைக் குறிப்பிடும் வகையில் பல்வேறு பாடல்களை இயற்றியதாக உள்ளூர் வரலாறு கூறுகிறது. அதைத் தொடர்ந்து, அஸ்ஸாம் மாநிலத்தின் தர்ராங் மாவட்டத்தில் பதார்காட் என்ற இடத்தில், 1894ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி விவசாயிகள் நடத்திய விடுதலைப் போராட்டத்தின் போது, காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உழவர்கள், பொதுமக்கள் என 36 பேர் முதல் 140 பேர் வரை படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதற்கு பதார்காட் படுகொலை என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப்




படுகொலையும், விடுதலைப் போராட்டம் குறித்த பல்வேறு வகையான நாட்டுப்புறப் பாடல்கள் எழுதப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அவ்வாறு எழுதப்பட்ட பாடல்களில் டோலி புராணம் என்ற தலைப்பிலான 132 வரிகள் கொண்ட பல்லாட் வகை நாட்டுப்புறப் பாடல் தான் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். புராணவடிவில் எழுதப்பட்ட பாடல் என்பதால், இதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டது. பதார்காட் படுகொலைகளை நேரில் பார்த்த உள்ளூர் விவசாயி நரோத்தம்தாஸ் என்பவர் கூறிய தகவலின் அடிப் படையில் இந்தப் பாடல் எழுதப் பட்டது. பதார்காட் படுகொலைகள் 'பதார்காட்டார்ரான்'என்று நினைவு கூரப்படும் நிலையில், அதுகுறித்து எழுதப்பட்ட பாடல் டோலிபுராணம் என்று அழைக்கப்படுகிறது. இதில் இடம்பெற்றுள்ள டோலி என்ற வார்த்தை காய்ந்த களிமண் உருண்டைகளைக் குறிக்கும். பதார்கோட் தாக்குதலின் போது காவல்துறையினர் துப்பாக்கியில் பொருத்தப்பட்டக் கத்திகளைக் கொண்டு விவசாயிகளைத் தாக்கிய போது, அவர்களை நோக்கி உழவர்கள் காய்ந்த களிமண் உருண்டைகளை வீசித் தாக்கி னார்கள். அதைக் குறிக்கும் வகையில் தான் அப்பாடலுக்கு டோலி புராணம் என்று பெயரிடப் பட்டிருக்கிறது. இந்தப் பாடல் பின்னாளில் நடைபெற்ற பல்வேறு கட்ட விடுதலைப் போராட்டங்களின் போதும் பாடப்பட்டது. குறிப்பாக தர்ராங் மாவட்டத்தில் இந்தப் பாடல்கள் அதிக அளவில் பாடப் பட்டன. டோலி புராணம் இப்போதும் அஸ்ஸாம் மாநிலத்தின் மிக முக்கியமான பல்லாட் பாடலாகக் கருதப்படுகிறது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அஸ்ஸாம் மாநிலத் தின் விடுதலைப் போராட்டங்கள் சார்ந்த இலக்கிய நடவடிக்கைகளில் புதிய எழுச்சி ஏற்பட்டது. 20ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் பதிவு செய்யப்பட்டப் பாடல் 1916ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும். அஸ்ஸாம் கேசரி என்று அழைக்கப் படும் அம்பிகாகிரிராய் சௌத்ரி என்பவர் ஒரு பாடலை எழுதி அதை கௌகாத்தியில் நடைபெற்ற அஸ்ஸாம் சங்கத்தின் ஆண்டு மாநாட்டில் தொடக்கப் பாடலாகப் பாடினார். அஸ்ஸாம் மாநிலத்தில் விடுதலைப் போராட்டத்திற்கான முதல் அரசியல் தளமாக உருவெடுத்தது அஸ்ஸாம் சங்கம் ஆகும். அது தான் பின்னாளில் 1921ஆம் ஆண்டில் மாகாண காங்கிரசாக மாறியது. அந்த மாநாட்டில் பாடப்பட்ட பாடலின் முதல் சில வரிகள் வருமாறு:

இதுதான் உங்களின் செய்தி, பாரதமே

இதுதான் உங்களின் பரிசு,

நாங்கள் உங்களுக்காக வாழ்கிறோம்,

உங்களுக்காக நாங்கள் எங்கள் உயிரைத் தருகிறோம்.

1917ஆம் ஆண்டில் அம்பிகாகிரிராய் சௌத்ரி, 'நெருப்பு வீணையின் மெட்டு'என்ற தலைப்

பிலான பாடல் ஒன்றை எழுதி, பார்பேட்டா நகரில் நடைபெற்ற அஸ்ஸாம் சங்கத்தின் மாநாட்டில் பாடினார். அப்போது, "இது சிரிப்பதற்கோ, மகிழ்ச்சிப்படுத்துவதற்கோ, பொழுதுபோக்குக்காகவோ எழுதப்பட்ட பாடல் அல்ல. வாழ்வையும், சாவையும் ஒன்றாக்கிக் கொண்ட நெருப்பு வீணையின் மெட்டாகும் இது என்று அம்பிகாகிரிராய் சௌத்ரி கூறினார். அம்பிகாகிரிராய் சௌத்ரியின் பாடல்கள் எந்த அளவுக்கு வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை, 1924ஆம் ஆண்டில் அவர் எழுதிய ஷடாத்தா என்ற தலைப்பிலான புத்தகத்தை அதில் புரட்சிகரமான கருத்துகள் இடம்பெற்றிருப்பதாகக் கூறி அஸ்ஸாம் அரசு பறிமுதல் செய்தது என்பதில் இருந்தே உணரமுடியும்.

1921ஆம் ஆண்டு மகாத்மா காந்தி முதன்முறையாக அஸ்ஸாம் மாநிலத்திற்கு வந்தபோது, அம்பிகாகிரிராய் சௌத்ரி, கர்மவீரர் நபின் சந்திரபர் தோலாய் ஆகியோர் அவரைச் சந்தித்து, அஸ்ஸாம் மாநிலத்தில் விடுதலைப் போராட்ட உணர்வு, அகிம்சை ஆகியவை குறித்த செய்திகளைப் பரப்புவதற்காக கடந்த சில ஆண்டுகளில் தாங்கள் இருவரும் எவ்வளவு பாடல்களை எழுதினோம் என்பது குறித்து விளக்கினர். 1926ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் 41வது மாநாடு, "அஜிபந்தோகிச் சுந்தரேச மகதவிரதா நரநாராயணரூப" என்ற பாடல் வரிகளுடன் தொடங்கியது. "நாங்கள் எப்படி உங்களை வரவேற்போம்? நீங்கள் மனித குலத்தின் மாபெரும் அவதாரம் அல்லவா?" நாங்கள் அவமானப்படுத்தப்பட்டு, சுருங்கிய மனத்துடனும் இதயத்துடனும் உங்களையே பெரிதும் சார்ந்திருக்கிறோம். எங்களிடம் மலர்கள் இல்லை, சந்தனம் இல்லை, ஊதுபத்திகள் இல்லை, அடிமைத்தனத்தின் தளைகளால் நெரிக்கப்பட்ட எங்களின் குரல்களைக் கொண்டு மெல்லிசைப் பாடல்களை இசைக்க முடியாது" என்பது தான் அப்பாடலின் பொருள் ஆகும். இந்தப் பாடல் அம்பிகாகிரிராய் சௌத்ரியால் எழுதப்பட்டதாகும்.

1920களில் தொடங்கி, 1940கள் வரையிலான காலகட்டம் தான் விடுதலை இயக்கத்தின் அங்கமாக அஸ்ஸாம் மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான பாடல்களும், கவிதைகளும் எழுதப்பட்ட காலம் ஆகும். ராய்சௌத்ரி தமது பாடல்கள் மற்றும் கவிதைகளின் மூலம் விடுதலை இயக்கத்தை வேகப்படுத்தினார். நபின்சந்திரபர் தோலாய், உமேஷ்சந்திர சௌத்ரி, பார்பதிபிரசாத் பரூவா, நளினிபாலா தேவி, பிரன்னலால் சௌத்ரி, பத்மதார்சலிஹா, அக்னிகவி, கமலகாந்த பட்டாச்சாரியா, கணேஷ் கோகாய், சங்கர் பரூவா, ஆனந்தி ராம்தாஸ், விஷ்ணுபிரசாத் ராபா, ஜோதிபிரசாத் அகர்வாலா ஆகியோரும் இதற்காகத் தங்களின் பங்கை அளித்தனர். நபின்சந்திர பர்தோலாய் எழுதிய பல பாடல்களில் மிகவும் புகழ்பெற்ற பாடல் ஆபான் (போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் பாடல்) என்பதாகும். இந்தப் பாடல், "இளைஞர்களே, இளம் பெண் குழுக்களே, துணிச்சல் மிக்க இளம் மக்கள் பட்டாளமே வாருங்கள். உங்களின் சூடான ரத்தத்தால் நமது மண்ணைச் சிவப்பாக மாற்றுங்கள்" என்பது தான் இந்தப் பாடலின் பொருளாகும்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பல இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைத் தனது பாடல்களாலும், கவிதைகளாலும் தகிக்க வைத்த கவிஞர் ஜோதிபிரசாத் அகர்வால் ஆவார். 1903 ஆம் ஆண்டு முதல் 1951ஆம் ஆண்டு வரை வாழ்ந்த அவர், அப்போது எழுதிய பாடல்கள், இந்தியா விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் ஆன பிறகும் நமது நாட்டு மக்களிடம் தொடர்ந்து விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டிருக்கின்றன. ஜோதி பிரசாத் அகர்வால், கவிஞர், பாடல் ஆசிரியர், பாடகர், இசையமைப்பாளர், நாடக ஆசிரியர், அஸ்ஸாம் மொழியின் முன்னோடித் திரைப்பட இயக்குநர் என பல முகங்களைக் கொண்டவர். அதற்கெல்லாம் மேலாக, நவீன அஸ்ஸாம் கலாச்சாரத்தின் தந்தையாகப் போற்றப்பட்டவர். அவர் விடுதலை இயக்கத்தின் துணிச்சலான தலைவர் ஆவார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கிய அங்கமாகக் கருதப்படும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது, காங்கிரஸ் தொண்டர் படைக்கு இவர் பொறுப்பேற்றிருந்தார். சிறந்த கவிஞரும், பாடலாசிரியருமான ஜோதிபிரசாத், சுமார் 400 பாடல்களையும், கவிதைகளையும் எழுதியிருக்கிறார். அவற்றில் 40க்கும் மேற்பட்டவை விடுதலை இயக்கத்துடன் நேரடியாகத் தொடர்புடையவையாகும்.

ஜோதிபிரசாத் அகர்வாலின் புகழ்பெற்ற பாடல் வரிகள் கீழ்க் கண்டவாறு அமைந்துள்ளன:

சக்தி வாய்ந்த பாரதத்தைச் சேர்ந்த, உலகை வெல்லும் திறன் கொண்ட இளம் படை வீரர்களே போராட்டக் களத்திற்கு வாருங்கள். நீங்கள் புரட்சியின் மைந்தர்கள். எச்சரிக்கை. போர் உங்களுக்கு முன்பாகத் தான் நடைபெறுகிறது. விடுதலைக்குக் கதவைத் திறந்து விடுவதன் மூலம் நீங்கள் சாவை வெல்ல வேண்டும்.

அஸ்ஸாம் மாநிலத்தில் இப்போதும் பிரபலமாக உள்ள அவரது இன்னொரு பாடலின் புகழ்பெற்ற வரிகள் வருமாறு:

நாங்கள் லூயிட் ஆற்றங்கரையில்

இருந்து வந்த இளைஞர்கள்.

எங்களுக்கு சாவைப் பற்றிய பயம் கிடையாது

நாங்கள் விடுதலையின் தியாக பீடத்தில் இருந்து

கொழுந்துவிட்டு எரியும் தீயின் ஜுவாலைகள்.

பூசாரிகள் அஞ்சலாமா? பின்னோக்கி நகர்ந்து மயங்கலாமா?

நாங்கள் எப்படியாக இருந்தாலும், தொடர்ந்து முன்னோக்கிச் செல்லப் போகிறோம்

பலிபீடத்தில் இருந்து ரத்தம் வழிய வழிய

எங்களின் தலையை பலி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்...

ஜோதிபிரசாத் அகர்வால் எழுதிய மற்றொரு பாடல் ராணுவ இசைக்குழு வாத்தியத்திற்கு ஏற்ற மெட்டில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது தான் இளைஞர்கள் ஒழுங்கான முறையில் அணிவகுத்துச் செல்வார்கள் என்ற நோக்குடன் கீழ்க்கண்ட பாடல் எழுதப்பட்டிருக்கிறது. விடுதலைப் போராட்டத்தின் போது, இந்தப் பாடல் மிகவும் பிரபலமடைந்தது. அந்தப்பாடல் வரிகள் வருமாறு:

ஓ... இளம் படை வீரர்களே தயாராகுங்கள்

நெருப்புக் குளத்தில் நீங்கள் நீராடவேண்டும்

போர்க்களத்தை உங்கள் ரத்தத்தால்

சிவப்பாக்குவதன் மூலம், உங்களின் இளமையையும் உயிரையும் தியாகம் செய்யவேண்டும்.

உங்களின் இடி போன்ற குரல் மூலம் இந்த உண்மையின் பாடலை உலகமே கேட்கும்படி செய்யுங்கள்.

பாரதத்தின் மீது குவிக்கப்பட்ட அவமானங்களை உங்கள் மார்பிலிருந்து ரத்தத்தை எடுத்துக் கழுவுங்கள்.

ஓ... இளம்படை வீரர்களே தயாராகுங்கள்.

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த மற்றொரு கலாச்சார அடையாளமான விஷ்ணுபிரசாத் ராபா பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியது கட்டாயமாகும். 1909ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டு வரை வாழ்ந்த அவர், கலாகுரு என்று அஸ்ஸாம் மாநில மக்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார். அவரது பாடல்களும், கவிதைகளும் விடுதலைப் போராட்டத்தின் போது அஸ்ஸாம் மாநில மக்களை எழுச்சி கொள்ள வைத்தன. விஸ்ணுபிரசாத் ராபாவின் அத்தகைய பாடல்களில் ஒன்று வருமாறு:

பாரதி... எனது தாய்நாடே,

வளம் நிறைந்த நாடு என்றாலும்

மக்களின் மனங்களில் குடியிருக்கும் ஏழை அரசியே

எனது வாழ்க்கை மற்றும்

எனது இதயத்தின் கடவுளே

எனது உயிரின் தாயே

ஏன் அவளைச் சிறை வைத்திருக்கிறார்கள்?

விடுதலைப் போராட்டத்தின் போது அஸ்ஸாம் மாநிலத்தில் எழுதப்பட்ட மற்றும் பாடப்பட்ட 200க்கும் மற்பட்ட பாடல்கள் ஜீவகாந்த கோகாயின், 'ஸ்வாதிநாத சங்ரமார்கீத்' மற்றும் நர்மல் பிரபா பர்தோலாயின் "ஸ்வாதிநாதசங்ரம ஆஸ்மிய கீதாருகபிதா" நூல்க ஆவணப்படுத்தியுள்ளன. அஸ்ஸ மொழியில் திருமணம் சார் பாடல்கள், எந்தவித முன் தயா பும் இல்லாமல் திருமணத்தி போது இயல்பாக வரு வார்த்தைகளைக் கொண் வடிக்கப்படும். அத்தகைய பாட களில் கூட விடுதலைப் போராட் உணர்வு எதிரொலிக்கும். ப திருமணப்பாடல்களில் மகாத்ம காந்தி, பாலகங்காதர திலக ஜவஹர்லால் நேரு, சரோஜி நாயுடு போன்ற தேசிய தலைவர்களின் பெயர்களும் நபின்சந்திரபர் தோலாய், கோபிநா பர்தோலாய் போன்ற பிராந்திய தலைவர்களின் பெயர்களும் இட பெற்றிருக்கும்.

இந்தியா விடுதலை அடைந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், பூபென்ஹசாரிகா சிறப்புப் பாடல் ஒன்றை எழுதினார். 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி தேஜ்பூரில் தேசியக் கொடியை ஏற்றி வைத்த பிறகு, அவரது இளைய சகோதரர்களில் ஒருவரால் இந்தப் பாடல் பாடப்பட்டது.10 வரிகளே கொண்ட அந்த குறுகிய பாடலை இப்போது பார்ப்போம்.

இந்தியாவின் வானத்தில் புன்னகைகள்

விடுதலையின் விடியலின் அடையாளம்

ஜொலிக்கும் விடுதலை,

மின்னும் விடுதலை

இந்தியாவின் இதயங்களில் புதிய உற்சாகம்

புதிய உறுதியுடன் முழு விடுதலை அடைவதே நமது லட்சியம்

முன்னேறிச் செல்லுங்கள் என்று நமது தியாகிகள் நம்மிடம் கூறினார்கள்

ஜொலிக்கும் விடுதலை, மின்னும் விடுதலை.

அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களில் இலக்கியங்களில் பிற வடிவங்களைப் பொறுத்தவரை, புதினம் சார்ந்த பிரிவில் பெரிய அளவில் எதுவும் செய்யப்பட வில்லை. நாடகங்களைப் பொறுத் தவரை லபிதா என்ற நாடகத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இது 1943ஆம் ஆண்டு ஜோதிபிரசாத் அகர்வால் எழுதிய நாடகமாகும். விடுதலை இயக்கத்தின் தாக்கத்தையும் பிரதிபலிப்பையும் இந்த நாடகம் வெளிப்படுத்தியது. இது நபிதா என்ற இளம் கிராமத்துப் பெண்ணின் கதையை அடிப்படை யாக வைத்துத் தயாரிக்கப்பட்ட தாகும். இரண்டாவது உலகப்போர் நாகாமலைப் பகுதி மற்றும் மணிப்பூர் வரை விரிவடைந்தது. இரண்டாம் உலகப் போராலும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தாலும் ஒரே நேரத்தில் அஸ்ஸாம் பாதிக்கப்பட்ட நிலையில், அதனால் ஏற்பட்ட சிக்கலான சூழலில் லபிதா உயிர்த் தியாகம் செய்கிறார். இதுதான் அந்த நாடகத்தின் மையக்கருவாகும். இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்து விட்ட நிலையில், இப்போதும் லபிதா நாடகம் நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர் மாநில மக்களிடம் இன்றளவும் தேசப்பற்றைத் தொடர்ந்து ஊட்டி வரும் மிக முக்கியமான பிரபலமான இலக்கியப் படைப்பு என்பது ‘கோஞ்சோம் பர்வா’என்ற பாரம்பரியமான பல்லாட் வகை நாட்டுப்புறப்பாடல் ஆகும். இது லெய்னோ என்பவரால் வாய்மொழியாக இயற்றப்பட்ட பாடலாகும். அவர் ஒரு சலவைத் தொழிலாளி ஆவார். 1891ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கிலோ மணிப்பூர் போரின் முக்கிய நிகழ்வுகள் அரங்கேறிய கோஞ் சோம் போரை நேரில் பார்த்தவர் ஆவார். இந்தப் போரில் பல நூறு மணிப்பூர் மக்கள் தங்களின் இன்னுயிரை ஈந்தனர். வாய்மொழி யாக இயற்றிய கோஞ்சோம்பர்வா என்ற பல்லாட் வகைப் பாடலில், மணிப்பூர் வீரர்களின் வீரம் மற்றும் தேசப்பற்றை லெய்னோ அற்புத மாகப் பதிவு செய்திருக்கிறார். கோஞ்சோம்பர்வா பாடல் அடுத்து வந்த ஆண்டுகளில் அதன் மையக்கருவை விரிவுபடுத்திக் கொண்டது. அதில் மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த பிற வரலாற்று நாயகர்களும், சில மகாபாரத கதாப்பாத்திரங்களும் சேர்க்கப் பட்டன.

---

– முனைவர்.சமுத்திரகுப்தா காஷ்யப், பத்திரிகையாளர், அஸ்ஸாம் மாநிலத் தகவல் ஆணையர், கௌகாத்தி.

---

## இந்தியாவில் செலுத்தப்பட்ட கோவிட் 19 தடுப்பூசிகளின் எண்ணிக்கை 202.79 கோடியைக் கடந்தது.

2022 ஜூலை 27 காலை நிலவரப்படி இந்தியாவில் 202.79 கோடிக்கும் அதிகமான (2,02,79,61,722) கோவிட்19 தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. 2,68,10,586 அமர்வுகள் மூலம் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

12 முதல் 14 வயதிற்குட்பட்டோருக்கான கோவிட்19 தடுப்பூசி, 2022 மார்ச் 16 முதல் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஏறத்தாழ 3.86 கோடிக்கும் அதிகமான (3,86,74,262) இளம் பருவத்தினருக்கு கோவிட்19 தடுப்பூசியின் முதல் தவணை செலுத்தப்பட்டுள்ளது.

18 முதல் 59 வயது உடையவர்களுக்கு கோவிட்19 முன்னெச்சரிக்கைத் தவணைத் தடுப்பூசி செலுத்தும் பணி 10 ஏப்ரல் 2022 அன்று தொடங்கியது.

இந்தியாவில் தற்போது கோவிட் நோய்க்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக (1,45,026) உள்ளது. நோய்த்தொற்று உள்ளவர்கள் தற்போது 0.33 சதவீதமாக உள்ளனர்.

# காஜி நஜ்ரூல் இஸ்லாம்: இளம் கிளர்ச்சியாளர்

- அனுராதா ராய்

முதலாவது உலகப்போருக்குப் பின் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசிய இயக்கம் இந்தியாவில் ஒரு புதிய துடிப்பான கட்டத்தை எட்டியது. அதன் புதிய தலைவராக உருப்பெற்ற திரு. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, அடித்தள மக்களை இணைத்து இதனை ஒரு பெரிய இயக்கமாக மாற்றினார். வலுவான தத்துவங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அவரது சமூக நிலைப்பாட்டுத் தொலைநோக்கைக் கொண்ட பலதரப்பட்ட அணுகுமுறைகள் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தின. செப்டம்பர் 1920 முதல் பிப்ரவரி 1922 வரையான காலகட்டத்தில் தன்னுடைய ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்ற போதும் கூட நாட்டில் மிகப்பெரிய விழிப்புணர்வு காணப்பட்டது. இந்த தேசிய இயக்கம் ஒரு வலுவான சமூக இயக்கமாகவும், உலகளாவிய இயக்கமாகவும் உருவெடுத்தது. பழமையையும், கட்டுப்படுத்தும் நிலைமைகளையும் பொறுத்துக் கொள்ளமுடியாத நிலையில் சுதந்திர உணர்வுடன் கூடிய அளவிலா நல்எதிர்பார்ப்பும் அநீதியிலிருந்தும், ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் விடுபட்டு அன்புடனும், சுதந்திரமாகவும் இயங்கும் புதிய உலக உணர்வும் மேலெழுந்தது. காஜி நஜ்ரூல் இஸ்லாம் இந்த எண்ணங்களுக்குத் தன்னுடைய இலக்கியப் படைப்புகள் மூலமாகவும், அரசியல் முயற்சிகள் மூலமாகவும் முனைப்புக் கொடுத்தார்.

இந்திய விடுதலை இயக்கம் அதன் புதிய காலகட்டத்தில் சமூக உணர்வுகள் மிக்க இயக்கமாக அகன்றதொரு தளத்தில் செயல் பட்டு வந்தது. பிரிட்டிஷ் ஆதிக்கத் திற்கு எதிரான எதிர்ப்புகள் மட்டுமல்லாமல் ஏழைகளையும், பெண்களையும் துன்புறுத்து வதையும், அடிமைப்படுத்துவதையும் எதிர்த்தும் எல்லா வகையான ஏற்றத்தாழ்வுகளையும் சுரண்டல் களையும் எதிர்த்தும் அது செயல் பட்டது. இந்த நிலையில் எல்லா வகையிலும் மனிதத்துவம் விடுதலை பெறவேண்டும் என்ற ஆழ்ந்த ஆவல் இந்தியாவின் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஊடுருவி நின்றது. சமூக மற்றும் அரசியல் புத்துணர்ச்சிக்கு இளைஞர்கள் மிகுந்த பணியாற்ற வேண்டும் என்ற ஒரு முக்கியமான செயல்பாடு காணப்பட்டது. உலகப் போரின் காரணமாக உலகெங்கும் போரில் ஈடுபட்டவர்களில் இளைஞர்களே அதிகம் என்பதால் இளைஞர்களின் ஈடுபாடு அவசிய மாகக் கருதப்பட்டது. இரு உலகப் போர்களுக்குப் பிறகான ஆண்டு களில் இந்தியாவிலும், பிற நாடுகளிலும் இளைஞர்களின் சக்தியின் மூலம் மனித நாகரிகத் திற்குப் புத்துணர்வூட்டிவிட முடியும் என்ற பரவலான நம்பிக்கை சிந்தனையாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் இருந்தது. இந்த இளைஞர் சமூகம் கிளர்ச்சிக் காரர்களாகவும், துடிப்புமிக்கவர் களாகவும், விடுதலை விரும்பி களாகவும், சுய அர்ப்பணிப்பாளர் களாகவும், சாவுக்கு அஞ்சாதவர் களாகவும், நாட்டு, பன்னாட்டு சமூக அரசியல் பிரச்சினைகளைக் களையக்கூடியவர்களாகவும் காணப்பட்டனர்.

### நஜ்ரூல்: இக்காலகட்டத்தின் உணர்வைப் பிரதிபலித்தவர்:

காஜி நஜ்ரூல் இஸ்லாம் (1899-1976) மேற்கு வங்கத்தில் தேசிய இயக்கத்தின் முக்கிய அடையாள மாக திகழ்ந்தார். விடுதலை இயக்கத்தின் முக்கிய தருணமான 1920களில் இவர் பிரபலமாக அறியப்பட்டார். அக்கால கட்டத்தில் இருந்த அரசியல் நிலைமை இவரைப் பெரிதும் பாதித்தது. தெற்கு வங்கத்தில் பர்ட்வான் மாவட்டத்தில் சுருலியா என்ற ஒரு சிறு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த துக்குமியா என்றழைக்கப்பட்ட நஜ்ரூல் இஸ்லாம் பள்ளியில் படிக்கும் போது உலகப்போர் மூண்டது. சாகச உணர்வு கொண்ட இச்சிறுவன் பள்ளிப்படிப்பை விட்டு விலகி பிரிட்டிஷ் இந்தியப்படையில் பெங்காலி பெட்டாலியனில் சேர்ந்து ஹவில்தார் பதவி பெற்றார். இவர் மட்டுமின்றி, பல நடுத்தர வர்க்க இளைஞர்களும், ஏழை இந்திய இளைஞர்களும்; இப்படிப் போரில் இணைந்து, நம்மை ஆதிக்கம் செலுத்தும் எஜமானர்களுக்குச் சாதகமாகப் போர் புரியச் சென்றனர். அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆயுதம் இல்லாத மக்கள், போர்ப் பயிற்சி களைப் பெற்று, தேசப்பற்று உணர்வினால் அவர்கள் இந்திய




சுதந்திரப் போராட்டத்திலும் வெற்றி பெற முடியும் என்று அவர்களில் பலர் உண்மையாகவே நம்பினர். நஜ்ரூலுக்கும் இதே எண்ணம் தான். அவர் கராச்சியிலிருந்து போரில் ஈடுபட்ட போது, எழுதிய 'பந்தன்ஹாரா' அடிமையிலிருந்து விடுதலை என்ற நாவலில் வெளிப்படுகிறது.

முதலாம் உலகப்போரின் தாக்கம், இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் வெளிப்பட்டு அந்தச் சூழ்நிலையில் நஜ்ரூல் எழுதிய போர் சார்ந்த கதையான 'வேதனையின் பரிசு' (பையதர் தன்) வெளிப்படுகிறது. இந்தப் போரின் தாக்கத்தினால் எழுந்த பரந்த உலகம் என்ற உணர்ச்சிமிக்க ஆர்வத்தால் தவிர்க்க இயலாத விதியில் ஓர் அங்கமாக நாம் இருப்பதை வெளிப்படுத்தியது. 1917இல் ஏற்பட்ட போல்ஷ்விக் புரட்சி தந்த சமூகப் பொருளாதார மந்திரம் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியது. நஜ்ரூலின் 'பையதர் தன்' கதையில் இந்தப் புதிய பொருளாதார அரசியல் உணர்வுக்கு வடிவம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கதையில் இரண்டு இராணுவ வீரர்கள் சோவியத் எல்லைக்குள் புகுந்து அங்கு செம் படையில் சேர்ந்து, அவர்களோடு இணைந்து போராடுவதில் மகிழ்ச்சி யையும், பெருமையையும் அடைந் தனர். உலகப் போர்களுக்குப் பிறகான ஆண்டுகளில், உலகின் பல பாகங்களில் ஏகாதிபத்தியத் திற்கு எதிரான இயக்கங்கள் துவக்கப்பட்டு, அது ஒரு உலகளா விய செயல்பாடாக விளங்கியது (இந்தச் செயல்பாடு இரண்டாவது உலகப் போருக்கு பிறகு அதன் இயல்பான இலக்கை அடைந்தது). இஸ்லாமிய உலகமும், ஏகாதி பத்தியத்திற்கு எதிரான மறு மலர்ச்சிக்கான பெரிய அலையில் மூழ்கியது. இதன் வெளிப்பாடாக இளம் இயக்கங்கள் உருப்பெற்றன. 'இளம் துருக்கியர்கள்' என்ற இயக்கம் 1908இல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முதலாம் உலகப்போருக்குப் பின் துருக்கியில் கமால்பாஷிவின் இயக்கம் 'இளம் டார்டாஸ், 'இளம் ஆஃகன்ஸ்' ஆகிய இயக்கங்கள் தோன்றின. இவை எல்லாம் பொதுவாக இந்தியாவின் மீதும், குறிப்பாக காஜிம் நஜ்ருல் இஸ்லாம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தின.

1920இல் அவர் பணியாற்றிய 49ஆவது பெட்டாலியன் கலைக்கப் பட்ட போது, நஜ்ருல் வங்கத்திற்குத் திரும்பி வந்தார். அங்கே ஒரு விடுதியில் இளம் கம்யூனிஸ்டான முஜிபூர் அஹமதோடு தங்கி எழுத்தில் கவனம் செலுத்தினார். இருவரும் இணைந்து, கடுமையாக உழைத்து பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்திற்கு எதிரான 'நவயுக்' என்ற தின நாளிதழைத் துவக்கி னார்கள் (இந்த நாளிதழ் கிருஷக் பிரஜா பார்டியின் கருத்தாக ஒலித்தது, இதனை அக்கட்சியின் தலைவர் ஏ. கே. பஸ்லூல் ஹக் துவக்கி வைத்தார்). இந்தக் கட்டத்தில் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் நஸ்ருல் மிகுந்த ஆர்வத்துடன் இணைந்தார். துவக்கத்தில் காந்திஜியின் கொள்கைகளுக்கும், தன்னுடைய கொள்கைகளுக்கும் இடையே ஒரு பாலம் அமைக்க முடியாதது அல்ல என்று நஜ்ருல் உணர்ந்தார். ஏனெனில், காந்திஜி யும் ஒரு நியாயமான சமூகத்தை வலுவோடு உருவாக்க நினைத்தார். காந்திஜியின் அஹிம்சை சத்தியா கிரகத்தை ஆதரித்த அதே சமயத்தில் நஜ்ருல் இளைஞர்களின் கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டினார். இதற்கு உதாரணமாக, அவருடைய கவிதையான 'பங்கார் கானை' கூறலாம். இந்தப் பாடலில் அவர் சிறைச்சாலையை உடைத்தெறி வதற்கு ஆதரவான பின்னிசையாக இளம் சிவன் முழக்கம் எழுப்ப வேண்டுமென்று கூறினார். இந்தப் பாடல் ஜனவரி 1922இல் அதாவது ஒத்துழையாமை இயக்கத்தின் இறுதிக் காலத்தில் இயற்றப்பட்டது. இந்த மாதத்தில் தான் நஜ்ரூலின் புகழ்பெற்ற மற்றொரு கவிதையான 'பித்ரோஹி' (கிளர்ச்சியாளர்) வெளியிடப்பட்டது. இந்தப் பாடல் ஒரு இளம் கிளர்ச்சியாளரை மைய மாகக் கொண்டிருந்தது. இந்த நெடிய பாடலில் கிளர்ச்சியாளர் தேசிய இயக்கத்தைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக போரிட உறுதி அளித்தார். இதனால் பொதுவாக இளம் கிளர்ச்சியாளர் கள் அழிவுகளையே செய்வார்கள் என்ற நிலையிலிருந்து மாறி அவர்கள் மனித இனத்திற்கு ஆக்கப்பூர்வமான செயல்களையும் செய்வார்கள் என்ற மாற்றம் ஏற்பட்டது. இது அல்லாமல் கிளர்ச்சியாளர்களின் ஆர்வமான கருத்து வெளிப்பாடுகளில் 'ரகசிய

காதலன்/காதலியின் கடைக்கண் பார்வை' என்ற பொருள் தென் படும். அரசியல் மற்றும் சமூக உணர்வுகள் மிக்க இளைஞர்கள் கருத்தியலில் காதலன்/காதலி தோன்றலும் இயற்கையானது, குறிப்பாக இலக்கியத்தில். எனினும் கிளர்ச்சிச் சூழ்நிலை தேசிய இயக்கத்திற்கு மிகுந்த சக்தி அளித்தது. நஜ்ருலின் இந்தப் பாடல் நாடெங்கிலும் பெரிய தாக்க த்தை ஏற்படுத்தியது. பிற்காலத்தில் அச்சிந்தியாகுமார் சென்குப்தா, பிரேமந்திர மித்ரா மற்றும் அரசியல் ஈடுபாடு சற்றுக் குறைவான புத்ததேவ் பாசு உள்ளிட்ட பிரபல வங்கமொழி எழுத்தாளர்கள் உள்ளிட்ட இளைஞர்களின் கருத்துக் குறிப்புகளில் இதற்கான ஆதாரத்தைக் காணலாம். 'இது வரை இதைப் போல் நான் எங்கும் படித்ததில்லை' என்றார் பாசு. பிரோதி என்ற இந்தப் பாடலால் நஜ்ருல் 'பிரோதி கவி' அதாவது 'கிளர்ச்சிக் கவிஞர்' என்றழைக்கப் பட்டார். ஒத்துழையாமை இயக்கத் திற்குப் பின் வங்க அரசியல் மாற்றுப் பாதைகளைத் தேடியது. இதற்கு நஜ்ருல் சிறந்த வழியைக் காட்டினார். உருவாகி விரைவில் மறைந்த அவரது வாரப் பத்திரிக்கை 'துமகேது' (வால் நட்சத்திரம்) – ஆகஸ்டு அக்டோபர் 1922, இளம் தலைமுறையின் அழுத்தத்தை ஓங்கி ஒலித்தது. இந்த வார இதழை 'அமைதியற்ற கிளர்ச்சி யூட்டும் இளைஞர்களின் பெருமை மிக்கக் கொடி' என்று விவரித் தார்கள். இந்தியாவின் முழு விடுதலைக்கு அது ஒரு வழியைக் காட்டியது. சற்றே குழப்பமாக இருந்தாலும் போராடும் குண மாகவே அது இருந்தது. இந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல்சாசன உறுதி மொழிகளை பெறும் பல இலக்குகளை வைத்திருந்தனர்.



ஆகவே, 1920களில் வங்கத்தில் போராட்ட தேசியம் மறுமலர்ச்சி பெறுவதற்கு நஜ்ருல் முக்கியமான காரணியாக இருந்தார். கிளர்ச்சிக் காரர்கள் தூமகேதுவால் பெரும் உற்சாகம் பெற்றனர். ஜுகாந்தர் கட்சி இந்த இதழை தங்களுடைய தாகவே கூட கருதியது. இந்தக் காலகட்டத்தில் கிளர்ச்சி தேசியத் தின் உச்சகட்டமாக 1930இல் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு சூறை யாடப்பட்டது. இதன் பிறகு, ஆங்கிலேய ஆதிக்கத்தின் நிர்வாகக் கட்டிடமாக இருந்த வங்கத்தின் ரைட்டர்ஸ் பில்டிங் தாக்குதல் உட்பட பல சிறிய வன்முறை நிகழ்வுகள் நடை பெற்றன.

தூமகேது இதழின் தலையங் கங்களை நஜ்ருல் எழுதும் போது தன்னுடைய பேனாவில் மையைத் தொடாமல் இரத்தத்தைத் தொட்டு எழுதியதாகக் கூறப்படுவதுண்டு. இவ்விதழுக்கு அவர் கவிதை களையும் எழுதியிருக்கிறார். இங்கு தான் அவர் எழுதிய ஒரு கவிதை 'அனந்தோமயிர் ஆகமனி' மகிழ்ச்சியின் தேவதை வந் போது என்ற கவிதை இயற் பட்டது துர்கையைத்தான் நா தேவதையாக கருதுகிறோம். இந் வரிகளோடு துவங்கியது.

ஓ தேவதையே! இன்னு எத்தனைக் காலம் நீ இந்த மண் உருவத்தில் ஒளிந்திருப்பாய் இங்கே பார் சொர்க்கத்தை எப்படி கொடுமைக்காரர்கள் ஈவிரக் மின்றி ஆண்டு கொண்டிரு கிறார்கள் என்று!

இந்தப் பாடல் வங்கத்தில் பூஜை காலத்தில் காளியை நோக்கி விடுக்கும் அழைப்பாக, அதாவது மகிஷிசுரனை வதம் செய்ய அழை பதாக அமைந்தாலும் உண்மையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்ட விடுக்கப்பட்ட அழைப்பாகவே பார்க்கப்பட்டது.

ஜனவரி 1923இல் இந்தப் பாடலுக்காகவே நஜ்ருல் மீது தேசத்துரோக வழக்கு போடப்பட்டு

ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறை அதிகாரிகள் அரசியல் கைதிகளைத் துன்புறுத்து வதை எதிர்த்து அவர் ஏப்ரல், மே மாதங்களில் உண்ணாவிரதம் மேற் கொண்டதை அடுத்து, பரவலாகப் போராட்டங்கள் நடைபெற்றன. அப்போது வங்க மொழியில் முன்னோடியாக இருந்த எழுத்தாளர் ரவிந்திரநாத் தாகூர், நஜ்ருல் தன்னுடைய உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று தந்தி அனுப்பினார் (ஆனால் அந்தத் தந்தி நஜ்ருலைச் சென்றடைய வில்லை). அப்போது தாகூர் தன்னுடைய இசை நாடகமான 'பசந்தா'வை நஜ்ருலுக்கு அர்ப்பணித்தார் (இளவேனிற்காலம் இளமைதானே நம் வாழ்க்கையின் வசந்த காலம்). இந்தக் கவிஞரோடு துணை நிற்கும் வண்ணம் ஹூசைன், ஷாஹித் சுகர்வார்டி மற்றும் சி.ஆர்.தாஸ் என்ற இரு பெரும் அரசியல் தலைவர்கள் மிகப்பெரிய ஊர்வலத்தை நடத்தினர். ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பின் போல்'விக் புரட்சியினால் உந்தப்பட்டு, சமதர்ம உணர்வுகள் கொண்ட இடதுசாரி கள் வங்க அரசியலில் தோன்றினர்.

சமதர்மக் கொள்கை பாட்டாளிகள் மற்றும் விவசாயிகளின் அடிப்படை உணர்வுகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதால், போராடும் குணம் கொண்ட போராளி தேசியவாதிகளும் இதனால் ஈர்க்கப்பட்டனர் (குறிப்பாக அனுஷிலான் கட்சி). வங்கத்தின் முதலாவது சமதர்ம இயக்கமான தொழிலாளர் ஸ்வராஜ் கட்சியின் ஏடுகளான 1925 டிசம்பரில் துவக்கப்பட்ட 'லங்கால்' (உழவு) மற்றும் ஆகஸ்டு 1926இல் துவக்கப் பட்ட கணபானி (பெருமக்களின் குரல்) ஆகியவற்றின் ஆசிரியரானார் நஜ்ருல். இந்த இரண்டு இதழ் களிலும் அவர் பல கவிதைகளை எழுதினார். அவை ஏழைகளைச் சுரண்டுவதையும் அவர்களின் விழிப்புணர்வை பாராட்டுவதையும், பெண்களை அடிமைப்படுத்து வதையும், எல்லா மதங்களிலும் சாமியார்களின் போலித்தன்மை யையும், ஊழலையும், சமூக, ஆன்மிக மற்றும் பொருளாதார அதிகார அமைப்புகளில் ஏற்றத்தாழ்வு களும், சுரண்டல்களும் மிகுந்திருப் பதற்கு எதிரான கருத்துக்களையும் பிரதிபலித்தன.

நஜ்ருல் எழுதிய பல கவிதைப் புத்தகங்கள் 1922இல் 'அக்னிபினா' முதல் 1930இல் வெளிவந்த ப்ரோலோஷிகா மற்றும் 1931இல் வெளிவந்த 'சந்திரபிந்து' வரை பல கவிதைகள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உணர்வுகளைப் பிரதிபலித்ததால் அரசு அவரைக் கூர்மையாகக் கண்காணித்து வந்தது. அவரின் பல புத்தகங்கள் தடைசெய்யப் பட்டன. அரசியல் மற்றும் சமூக எதிர்ப்புக் கருத்துக்களை மட்டு மல்லாமல் இராணுவ சாகசங்கள், புவியியல் கண்டுபிடிப்புகள், மலை யேற்றம் போன்ற இளைஞர்களின் ஆற்றலைப் பெருமைப்படுத்தும் கருத்துக்களையும் அவர் வெளிப் படுத்தினார். அவர் ஆண், பெண் அன்பு, காதல் உணர்வுகளையும் பிரதிபலித்தார். சில சமயங்கள் அவை திருமணம் தாண்டிய உறவு களாகவும் வெளிப்பட்டன. இந்தக் கருத்து தேக்க நிலை அடைந்த ஆண் வர்க்கத்திற்கு எதிரான இளைஞர்களின் எதிர்ப்பாக வெளிப்பட்டது. 'கலோல்'ல்'மாதபி ப்ரோலாக்' மற்றும் 'அனாமிகா' என்ற காதல் கவிதைகள் இடம் பெற்றன. இளைஞர்கள் அவர் களுடைய காலகட்டத்தின் கொடுமைகளையும், அப்போதிருந்த சமூக நிலைப்பாடுகளையும் எதிர்க்கும் குரலாக அவை அமைந்ததால் இக்கவிதைகள் புகழ்பெற்ற அதே சமயத்தில் குறை கூறவும் பட்டது. இக்காலகட்டத்தின் வங்க இலக்கியம் 'கலோல்யுக்' என்றும் குறிப்பிடப்பட்டது. கலோல் இதழ் வங்கத்தின் தொழிலாளர் களுக்கான முதல் இதழான 'சம்ஹதி'யோடு நல்லுறவு கொண்டிருந்தது. கலோல் பத்திரிக்கையை குறைந்தது இரண்டு முறையாவது காவல்துறை துன்புறுத்தியது. அதற்குக் காரணம் நஜ்ருலின் கவிதைப் புத்தகமான 'பிஷர்பான்ஷி' (நச்சுப் புல்லாங் குழல்) மற்றும் சனத்சென்னின் 'ஃபான்சின் கோபிநாத்' (ஒரு வெள்ளையனைக் கொன்ற போராளி தேசியவாதி கோபிநாத் சஹாவைப் பற்றியது) ஆகிய படைப்புகளாகும். கலோல் இதழில் ஊக்கம் கொடுக்கப்பட்ட எதிர்ப்புத் தன்மை இளைஞர்களின் முறைப் படுத்தப்பட்ட வாழ்க்கை முறை மீறல் அடையாளமாகும். அதுவே நஜ்ருலின் அடையாளமாகவும் திகழ்ந்தது.

மொத்தத்தில் இக்கால கட்டத்தின் உணர்வுகள் ஆக்கமும், அழிவும் கலந்ததாகவே இருந்தன. பழமையான மற்றும் கட்டுப்படுத்தும் கருத்துக்களுக்கு எதிரான பொறுமையின்மை இருந்த அதே நேரத்தில் அநீதியும், ஏற்றத்தாழ்வு களும் இல்லாத அன்பும், சுதந்திரம் மிகுந்த உலகுக்கான கனவை அடிப்படையாகக் கொண்ட அளவு கடந்த எதிர்பார்ப்பும் இருந்தன. இந்தக் கருத்துக்களை தன்னுடைய இலக்கியத்திலும் அரசியல் முயற்சிகளிலும் நஜ்ருல் பிரதி பலித்தார். இந்தக் காலகட்டத்தில் இலக்கியமும், அரசியலும் இணைந்து வியாபித்தன. அதனை மிகச் சிறப்பாக நஜ்ருல் வெளிப் படுத்தினார். அவர் வங்க இளைஞர்

களின் எண்ணங்களைக் கவர்ந்தது தன் கவிதையால், உணர்ச்சிமிக்க குரலால், அழகான வார்த்தைகளால். புதிய வார்த்தை வடிவங்களால் கவர்ச்சியான நடைகளால் என்று கூறலாம். இதனைப் பிரதிபலிக்கும் வண்ணம் அவர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு இலக்கிய வாதியும், அரசியல்வாதியும் கூறியது: செத்துக் கிடந்த தவளைகளை உயிர்பித்தது போல் 'கல்வானியைப் போன்றே, நஜ்ருலும் வங்கத்தில் இளைஞர்களை விழிப்புறச் செய்தார்'.

## இந்து, இஸ்லாமிய ஒற்றுமையைப் போற்றினார்

ஒத்துழையாமை இயக்கத்தில் அதுவரை காணப்படாத இந்து இஸ்லாமிய சகோதரத்துவம் காணப்பட்டது. ஆனால், இதனை அடுத்து, இரு பிரிவும் தனித்துவத்தை நாடினர், அதுவே விடுதலைப் போராட்டத்தில் ஒரு மிகப்பெரிய இடைஞ்சலாக அமைந்தது. ஆகவே, மத வெறுப்பை எதிர்க்கும் கருத்தை நஜ்ருல் முன்னெடுத்தார். இளமைக் காலம் கொண்டே அவர் இந்து மற்றும் இஸ்லாமியப் பண்பாட்டில் ஊறித் திளைத்தார். அவருடைய வாழ்க்கை முழுவதும் பல இந்து நண்பர்களைக் கொண்டிருந்தார். ஒரு இந்துப் பெண்ணையே மணந்தார். எந்தவொரு மதப் பழமைவாதத்திற்கும் எதிராகக் குரல் கொடுத்தார். இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இருவரின் மதவெறியையும், மூடநம்பிக்கையையும் சாடினார். அவர் பாடல்களில் காணப்பட்ட உவமைகளும், கருத்துக்களும் ஹிந்து புராணங்களையும், இஸ்லாமிய சரித்திரத்தையும், பாரம்பரியத்தையும் உதாரணமாகக் கொண்டவைகளாக இருந்தன. ஆனால், அவர் 'ருத்ர', 'ஈஷின்' போன்ற வார்த்தை களைப் பயன்படுத்தியபோது, அவை இந்துக் கடவுள்களைக் குறிப்பிடாமல் அழிவைக் குறிக்கும் வார்த்தைகளாகவே கருதப்பட்டன. அதைப் போலவே அவர் இஸ்லாமிய உலகத்தின் சீர்திருத்தவாதிகளான கமால் பாஷிவிற்குப் புகழஞ்சலி செலுத்திய போது அவர்களைத் தங்கள் மதத்தைக் காப்பவர்களாகக் கருதவில்லை ஆனால், தேங்கிக் கிடந்த சூழ்நிலையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களாகவே கருதினார். அவருடைய இலக்கியப் படைப்புகளில் பெங்காலி ஹிந்து மற்றும் இஸ்லாமியக் கருத்துக்கள் இரண்டும் கலந்தே வார்த்தைகளாகவும், கருத்துக்களாகவும் வெளிப்பட்டன அக்கால கட்டத்தில் ஹிந்து மற்றும் இஸ்லாமிய வங்க மக்களின் இலக்கிய மொழிகள் தனித்தவையாகக் கருதப்பட்ட நிலையிலும் தான் சார்ந்த சமூகத்திற்கு அவர் சிறப்புக் கவனம் செலுத்தினார் என்பதும் உண்மை. இரு மதத்தினரும் அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும் ஆழ்ந்து கிடப்பதை இளைஞர்கள் எதிர்க்க வேண்டும் என்ற கருத்தை அவர் பிரதிபலித்தார். அவருடைய மதச் சார்பற்ற அணுகுமுறை பல கருத்து மோதல்களை உண்டாக்கி ஹிந்து மற்றும் இஸ்லாமியர் இருவருக்குமே கவலைகளை அளித்ததாகக் கருதப்பட்டாலும் ஹிந்து மற்றும் இஸ்லாமிய வங்க மக்கள் பின்வரும் அவரின் கவிதையால் பரம்பரை பரம்பரையாகப் புத்துணர்வு பெற்றனர் என்று கூறினால் அது மிகையாகாது:

"இந்து மற்றும் இஸ்லாமியரான நாம் ஒரு மொட்டின் இரு மலர்கள்"

இதை விட மிகுந்ததாக அவரின் கவிதையான 'படகோட்டியே கவனமாயிரு' எனும் கவிதையில் அவர், நாட்டின் ஆபத்தான இந்தப் பயணத்தில் தலைமையேற்றி பவர்களே சற்றே கவனமாயிருங்க என்று கூறினார். 1926இல் மதவெ அதிகரித்திருந்த நேரத்தில் கூடி பிராந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கா இந்தக் கவிதையை அவ வடித்தார். அதில், கீழ்க்காணு பொருள்மிக்க வரியும் உள்ளது.

'இவர்கள் ஹிந்துவா இஸ்லாமியர்களா என்று கேட்பவ யார்?

ஓ படகோட்டியே சற்றே அவ களுக்குக் கூறுங்கள்.

மூழ்குபவர்கள் எல்லாம் மனித இனங்களே, என் தாயின் மக்களே!'

1929இல் அவருடைய மகன் புல்புல் இறந்ததை அடுத்து நஜ்ருலின் வாழ்க்கையும், படைப்புத் தன்மையும் ஆன்மீகத்தின் பக்கம் திரும்பியது. அவரின் கிளர்ச்சியுணர்வு சற்றே குறைந்தது. அவரின் ஆன்மீகத்தில் ஹிந்து யோகிகள் மற்றும் துறவிகளின் முறைகளும் சூஃபி இஸ்லாமியக் கருத்துக்களும் கலந்தே வெளிப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் அவர் காளி அன்னையை வழிபடும் ஷியாமா சங்கீத் என்ற பாடல்களையும் இஸ்லாமியப் பாடல்களையும் இயற்றினார். 1939இல் நஜ்ருலின் மனைவி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். அதுவே, அவருக்கு விழுந்த கடைசி அடியாக இருந்தது. விரைவில் அவரும் உடல்நலம் குன்றி, மூளை செயலிழப்பையும் சந்தித்தார். தான் வாழ்ந்த காலத்து மக்களுக்கு மட்டுமல்லாமல் பின்வரும் தலைமுறைகளுக்கும் ஊக்கமளிப்பவராக அவர் திகழ்கிறார்.

---

– **அனுராதா ராய்,** பேராசிரியர், வரலாற்றுத்துறை, ஜாதவ்பூர் பல்கலைக்கழகம், கொல்கத்தா.

# இந்தி இலக்கியத்தின் பங்களிப்பு


- தேவேந்திர சௌபே

எந்த ஒரு நாட்டைப் பற்றியும் அதன் நிகழ்காலச் சூழல் பற்றியும் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், அதற்கு நாட்டுப்புறக் கலைகளையும், ஊரகப் பகுதிகளில் உள்ள இலக்கிய ஆதாரங்களையும், வரலாற்றையும் ஆராய வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்திய தேசத்தின் உருவாக்கத்தைப் பற்றி புரிந்துகொள்வதற்கு உதவும் இலக்கியக் குறிப்புகளும், ஆதாரங்களும் எவை? அவற்றையும் அவற்றின் வரலாற்றையும் புரிந்துகொள்வதற்கான நேரம் எது? கருத்தியல் என்பது என்ன? கோட்பாடு என்பது என்ன? இவை தான் வரலாற்று அறிஞர்களுக்கு எப்போதும் சிக்கலை ஏற்படுத்தக் கூடிய வினாக்கள் ஆகும்.

இந்தியாவைப் பற்றி புகழ்பெற்ற இந்திக் கவிஞர் ஜெய்சங்கர் பிரசாத் ஒரு கவிதையில் குறிப்பிடும் போது, இந்தியா நமது இனிய நாடு என்று போற்றுகிறார். அவரே அடுத்து வரும் வரிகளில், இந்திய விடுதலைக்காக ஒட்டுமொத்த இந்தியாவின் கூட்டு உணர்வை எழுப்பும் வகையில் அழகியல் நிறைந்த வார்த்தைகளால் தேச உணர்வைத் தட்டி எழுப்பு கிறார். ஜெய்சங்கர் பிரசாத் தமது பாடல்கள் மூலம் தேச உணர்வை ஊட்டுகிறார்.

ஜெய்சங்கர் பிரசாத்தின் கவிதை மூலம் ஏற்படுத்தப்படும் உணர்வுகள் இந்தியாவில் பாரம் பரிய தேசிய உணர்வை வெளிப் படுத்துகின்றன என்றாலும் கூட, பர்தேந்த்ரு ஹரிசந்திரா, பாலகிருஷ்ண பட், மகாவீர் பிரசாத் திவிவேதி, ஆச்சாரிய ராமச்சந்திர சுக்லா, ஆச்சாரிய ஹசாரி பிரசாத் திவிவேதி, ராம்விலாஸ் சர்மா போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தேசியவாதத்தை தேசிய இலக்கியத்துடன் கலந்து மக்களுக்கு வழங்குகின்றனர். இத்தகைய படைப்புகள் தான் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு எதிராகத் திரண்டு நின்று போராட இந்திய மக்களைத் தூண்டியது என்பதும், இத்தகைய வரிகள் தான் இந்திய சமுதாயத்தில் தேசியவாதத்தை வரலாற்று வடிவத்தில் உருவாக்கித் தந்தன என்பதும் எவராலும் மறுக்க முடியாத ஒன்று. இந்திய மக்களைப் பொறுத்தவரை இந்தியாவும், அதன் மக்களும் தான் மிகவும் உயர்ந்தவர்கள் என்பது தான் இந்திய தேசிய வாதம் ஆகும்.

1757வது ஆண்டுக்கும், 1947வது ஆண்டுக்கும் இடைப் பட்டக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த தேசிய வாதத்தின் வடிவத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது தான் இங்கு எழும் வினா ஆகும். இந்த தேசிய வாதத்தை மகாத்மா காந்தி உருவாக்கிய உழவர்கள் இயக்கத் துடன் இணைத்துப் பார்ப்பதா? அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்ட தலித் குறிப்புகளுடன் சம்பந்தப் படுத்திப் பார்ப்பதா? பகத்சிங்கின் புரட்சிகர சமூகவாதத்தால் ஏற்பட்ட விளைவாகப் பார்ப்பதா? அல்லது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய புரட்சிகர தேசிய வாதப் போக்குடன் சம்பந்தப் படுத்திப் பார்ப்பதா? என்பவை தான் நம்முன் எழும் வினாக்கள் ஆகும். இவை அனைத்தும் மிகவும் சிக்கலான வினாக்கள் தான். ஆனால் அதையும் கடந்து, இதில் முக்கிய மான விஷயம் என்னவென்றால், பிரேம்சந்த், ராமச்சந்திர சுக்லா, ஹசாரி பிரசாத் திவிவேதி போன்றவர்கள் இந்த தேசியவாத உணர்வை சாதிக் கண்ணோட்டத் துடன் பார்த்தனர் என்பது தான். மேற்குவங்கத்தைச் சேர்ந்த ரபீந்திரநாத் தாகூர் போன்ற எழுத்தாளர்கள் இந்த வடிவிலான தேசியவாதத்தை யூகம் சார்ந்த உணர்வாகப் பார்த்தனர். இத்தகைய வடிவிலான தேசியவாத உணர்வில் இந்தியா மற்றும் ஆசிய கண்டத்தின் நாகரிகம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த ஆழமான புரிதல் இருப்பதை ரபீந்திரநாத் தாகூர் பார்த்தார். கோரா போன்ற தமது நாவல்கள் மூலமாகவும், கீதாஞ்சலி போன்ற உலகப் புகழ்



பெற்ற படைப்புகள் வாயிலாகவும் இதைப் புரிந்துகொள்வதற்கு அவர் முயன்றார். மற்றொரு புறம் எழுத்தாளர் பிரேம்சந்த் இத்தகைய வடிவிலான தேசியவாதத்தில் ஊரக நாகரிகத்தின் அதிர்வுகள் மறைந்திருப்பதைக் கண்டார். அந்த உணர்வை வேளாண் வாழ்க்கை முறையுடன் தொடர்பு படுத்திப் புரிந்துகொள்ள அவர் முயன்றார்.

ஆனால், 1857ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரை உருவாக்கப்பட்ட தேசியவாத உணர்வுகளைத் துல்லியமாகப் புரிந்துகொள்வதற்கு பல்வேறு வகையிலான நாட்டுப்புற நினைவுகளும், நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு வடிவங்களும் அவற்றில் பொதிந்துள்ள நினைவுகளும் நமக்கு உதவுகின்றன. உதாரணமாக, இந்த தேசியவாத வடிவம் மற்றும் அதன் வரலாற்று உணர்வுகளை இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் பல்வேறு காலகட்டங்களாக பிரித்துப் பார்க்கும் போது, இந்திய தேசியவாதத்தின் கட்டமைப்பை ஓரளவு புரிந்துகொள்ள இயலும். முதலில் 1857ஆம் ஆண்டில் ஏற்பட்ட விடுதலைப் போராட்டம் மற்றும் அதன் நினைவு; இரண்டாவதாக 1873ஆம் ஆண்டு மற்றும் இந்திய இலக்கியம், ஊடகங்கள் மற்றும் இதழியல்; 1885ஆம் ஆண்டில்

காங்கிரஸ் கட்சியின் வளர்
மற்றும் புதிய அறிவு சார்
வகுப்பின் எழுச்சி; 1905
ஆண்டில் வங்காளப் பிரிவி
மற்றும் விடுதலை இயக்க எழு
1917ஆம் ஆண்டில் மகாத்
காந்தி, அம்பேத்கர் மற்
விடுதலை இயக்கத்தின் தே
நீரோட்டம்; 1942ஆம் ஆண்
வெள்ளையனே வெளியே
இயக்கம் மற்றும் புரட்சிகர தேசி
வாதத்தின் விடுதலை வடி
ஆகிய பிரிவுகளாக இந்த தேசி
வாத வடிவத்தை நாம் பிரித்து
பார்க்க வேண்டும். இதற்கிடை
1936 ஆம் ஆண்டில் பொருளாத
அடிப்படையில் ஒடுக்கப்பட்
மக்களும், சமூக ரீதியாக சுரண்
பட்ட மக்களும் இலக்கியத்தி
மையக் கருவாக மாற்றப்பட்டிருந்
காலத்தில் தேசியவாத வடிவ
என்பது இலக்கிய உலகத்திற்
முற்றிலும் மாறுபட்ட பொருளை
கொடுத்தது. அதை ஒடுக்கப்பட்
மற்றும் புறக்கணிக்கப்பட்
மக்களின் தேசியவாதமாக
பார்க்கலாம். இதை எழுத்தாள
பிரேம்சந்த் 1936ஆம் ஆண்டி
பதிப்பித்த கோடன் என்ற தம
நாவலில் குறிப்பிட்டிருக்கிறார்
விவசாயி களின் தேசியவா
உணர்வுகளுக்கு கோடன் நாவல்
மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்
அந்த நாவலில் ஹோரி என்ற
விவசாயி, கோபர் என்ற
தொழிலாளி ஆகிய இரு
கதாப்பாத்திரங்கள் மூலம்
புறக்கணிக்கப்பட்ட மற்றும்
சுரண்டப்பட்ட மக்களுக்கான
தேசியவாதத்தின் பொருளைப்
புரிந்துகொள்ள எழுத்தாளர்
பிரேம்சந்த் முயன்றிருப்பார். தேசிய
வாதத்தையும், பல்வேறு சூழல்

களைச் சார்ந்த நிகழ்கால இந்தியாவையும், தேசியவாதத்திற்கு முக்கியத்துவம் அளித்து படைக்கப்பட்ட இலக்கியங்களையும் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமான பணி ஆகும்.

### 1873 ஆம் ஆண்டில் இந்திய இலக்கியம், ஊடகம் மற்றும் இதழியல்

1857ஆம் ஆண்டிற்குப் பிறகு, குறிப்பாக 1873ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்திய சட்டங்களும், விதிகளும் என்ன? என்பதையும், அவற்றுக்கு எதிராக வட இந்தியாவைச் சார்ந்த இந்தி மற்றும் வங்க மொழி பேசும் சமுதாய மக்களின் அறிவுசார் தேசியவாத உணர்வு எவ்வாறு பார்க்கப்பட்டது? என்பதையும், இலக்கியம் மற்றும் இதழியல் படைப்புகளின் மூலம் பார்க்க முடியும். 1857ஆம் ஆண்டிற்குப் பிறகு உருவாக்கப்பட்ட சட்டங்களில் 1858ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டு சட்டங்கள் மிகவும் முக்கியமானவை ஆகும். அவற்றில் முதலாவது பத்திரிகை சட்டம், இரண்டாவது ஆயுதச் சட்டம். இந்தச் சட்டங்களின் மூலமாகத்தான் 1878ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பல படைப்புகள், பருவ இதழ்கள், புத்தகங்கள் போன்றவை ஆங்கிலேயர்கள் ஆட்சியில் தடை செய்யப்பட்டன. அவ்வாறு தடை செய்யப்பட்ட நூல்களில் பாலகிருஷ்ண பட் எழுதிய இந்தி பிரதீப், பிரேம் சந்த் எழுதிய சோஸ்வாட்டன், சாகரம் கணேஷ் தேஷ்கர் எழுதிய தேஷர் கதார் போன்ற படைப்புகளும் அடங்கும். ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான ஆழமான எதிர்ப்பு உணர்வை இந்தப் படைப்புகளில் பார்க்க முடியும். இந்தப் படைப்புகள் உருவாக்கிய மிகப்பெரிய மாற்றம் என்பது ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகப் பொதுமக்கள் மத்தியில் மிகப்பெரிய அதிருப்தி உணர்வை ஏற்படுத்தியது தான். அத்தகைய உணர்வை ஏற்படுத்துவதில் புகழ்பெற்ற இந்தி எழுத்தாளரான பர்தேந்த்ரு ஹரிச்சந்திரா மிக முக்கியப் பங்காற்றினார். அக்காலத்தில் வாழ்ந்த மகேஷ் நாராயண் என்ற கவிஞர் எழுதிய ஸ்வப்னா என்ற பாடல் இந்திய மக்களிடையே ஆங்கிலேயர் ஆட்சியால் உருவாக்கப்பட்ட இரு சட்டங்களுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்தியதுடன், புகழ்பெற்ற சிந்தனையாளர் ஜான் பிளம்மெனாட்ஸ் குறிப்பிட்ட அதே வடிவிலான தேசியவாதத்தை முன்வைத்தது. மகேஷ் நாராயண் எழுதிய ஸ்வப்னா பாடலில் வரும் மகாதேவ் யே ராஜ் ஸ்வாதிங்கர்டே (மகாதேவ் இந்த ராஜ்ஜியத்திற்கு விடுதலை பெற்றுத் தந்திருப்பார்) என்ற வரிகளில் அறிவுசார்ந்த தேசியவாத உணர்வை ஒருவரால் உணர முடியும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இயற்றப்பட்ட பிரிட்டிஷ் பிரஸ் சட்டத்தின் பிரிவுகளின் அடிப்படையில் தம் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக கவிஞர் மகேஷ் நாராயண் எந்தத் தலைவரின் பெயரையும் குறிப்பிடாமல் மகாதேவ் என்ற ஒரு கற்பனை பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார். அந்தக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய பாலகிருஷ்ண பட், பிரதாப் நாராயண் மிஸ்ரா போன்ற பல புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர்கள் கற்பனையான அம்சங்களின் மூலம் இந்திய உணர்வைப் புரிந்துகொள்வதற்கு முயற்சி செய்தார்கள். பல தருணங்களில் இத்தகைய கற்பனையை சில விமர்சகர்கள் ஒரு குறிப்பிட்ட மதத்துடன் இணைத்துப் பார்த்தார்கள். இவ்வாறு எழுத்தாளர்கள் கற்பனையான அம்சங்களைப் பயன்படுத்தி யதற்குக் காரணங்கள் இருந்தன. மதம் சார்ந்த விஷயங்களைக் குறிப்பிடுவது ஆங்கிலேயர் சட்டத்தில் தடை செய்யப்பட்டு இருந்ததால், தாங்கள் சொல்ல வந்த விசயத்தை மக்களுக்குத் தெளிவாக விளங்க வைப்பதற்காகவும், அதே நேரத்தில் ஆங்கிலேயர்கள் சட்டத்தின் மூலம் தங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் இத்தகைய கற்பனையான அம்சங்களை இந்தி எழுத்தாளர்கள் பயன்படுத்தினார்கள்.

### 1885ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியும் புதிய அறிஞர்களின் தோற்றமும்

மகேஷ் நாராயண் போன்ற கவிஞர்களும், பாலகிருஷ்ண பட், பிரதாப் நாராயண் மிஸ்ரா போன்ற எழுத்தாளர்களும் ஒரு குறிப்பிட்ட வகையிலான இந்திய தேசியவாதத்தை உருவாக்கியதற்குக் காரணம் 1885ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டதும், ஆங்கில வழியிலான கல்வியும் ஆகும். இதற்கான எதிர் நடவடிக்கையாக இந்திய மக்களிடையே தாய்நாடு மற்றும் தாய்மொழி மீதான பற்று ஆழமாக உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட நடவடிக்கை

யின் பயனாகத்தான் இந்திய அறிஞர்களுக்கு அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆங்கில வழியில் கல்வி பெற்றதன் பின்னர் தான் இத்தகைய தாக்கம் ஏற்படுத்தப்பட்டது. அம்ரித்லால் நாகத் எழுதிய கர்வாக், பீடியான் போன்ற நாவல்களில் வருவதைப் போன்று இந்திய அறிஞர் உறுப்பினர் இந்திய விடுதலை இயக்கத்தில் மிக முக்கியமாக பங்களிப்பு செய்தனர். அதே காலகட்டத்தில் மராட்டிய மாநிலத்தில் சாவித்ரி பாய் பூலே, ஜோதிபா பூலே ஆகியோர் மேற்கொண்ட பணிகளால் தலித் மறுமலர்ச்சி ஏற்பட்டது. 1920 ஆம் ஆண்டு அம்பேத்கரின் வருகைக்குப் பிறகு இந்திய விடுதலை மற்றும் சமூக இயக்கங்களில் தலித் மக்களின் மறுமலர்ச்சி மிகப்பெரிய ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. 1890ஆம் ஆண்டுகளை ஒட்டிய காலத்தில் புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் ராதா மோகன் கோகுல், தலித் மக்கள் குறித்தும் பெண்கள் குறித்தும் எவ்வளவு தீவிரமாக எழுதினார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவரது படைப்புகளில் ஒன்றான அங்ரேஸ்தாக்கு என்ற நூல் 1910ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட போது, அதை ஆங்கிலேயர் ஆட்சி தடை செய்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவரது படைப்புகள் எதுவுமே இந்தி இலக்கிய வரலாற்றில் இடம்பெறவில்லை. இந்தி மொழி விமர்சகர்களில் மிகவும் முக்கியமானவர்களாகக் கருதப்படும் ராம் விலாஸ் சர்மா, கர்மெண்டு ஷிசிர் ஆகியோர் இந்தி மறுமலர்ச்சியின் மிக முக்கிய அங்கமாக ராதா மோகன் கோகுலின் படைப்புகளைக் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆங்கிலேயர்களின் கொள்கைகளைப் புரிந்துகொண்ட இந்தி எழுத்தாளர்கள் தங்களது படைப்புகள் மூலம் இந்திய மக்களிடம் மிகவும் ஆழமான தேசபக்தி உணர்வை உருவாக்கினார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள படித்தவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட உணர்வைப் பின்னாளில் படைக்கப்பட்ட இந்திய இலக்கியங்களில் காண முடியும் என்பதை எவரும் துணிச்சலாகக் கூற முடியும்.

### 1905 வங்கப் பிரிவினை மற்றும் விடுதலை இயக்கத்தின் எழுச்சி

1905ஆம் ஆண்டு வங்கப் பிரிவினைக்குப் பிறகு இந்திய விடுதலை இயக்கம் எழுச்சி பெற்றது என்பதற்கு சிறந்த உதாரணம் அந்த ஆண்டுக்குப் பிறகு ரவீந்திரநாத் தாகூர் எழுதிய படைப்புகள் தான். கீதாஞ்சலி மற்றும் பிற படைப்புகளில் ரவீந்திரநாத் தாகூர் உருவாக்கிய இந்திய தேசம் குறித்த பார்வை இந்தியா மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கீதாஞ்சலி நூலில் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய பாடல் ஒன்று இந்திய தேசியவாதம் என்பது விவசாயிகளை மையப்படுத்திய கலாச்சார தேசியவாதம் என்பதை விளக்குகிறது. இதை பிரேம்சந்த் போன்ற புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர்கள் 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு உருவாக்கிய படைப்புகளில் பார்க்க முடியும். உழவர்களிடம் இருந்து நிலங்கள் பறிக்கப்பட்டதால் வேளாண் குடிமக்களுக்கு ஏற்பட்ட வலியை அந்தப் பாடல் விவரிக்கிறது. உழவர்களிடம் இருந்து நிலங்க பறிக்கப்பட்டது தான் இந்தியாவி புதிய வடிவிலான தேசியவா உணர்வை ஏற்படுத்தியது. கீதா சலி நூலில் வங்காளத்தி சோகத்தை அழகான வார்த்தை களால் ரவீந்திரநாத் தாகூ வர்ணித்திருப்பது அனைவரி மனதையும் தொடும் வகையி அமைந்துள்ளது. கீதாஞ்சலி நூலி வரும் அந்தப் பாடலில் வங்காள பிரிக்கப்பட்டதால் அம்மாநி மக்களுக்கு ஏற்பட்ட சோகம் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, வங்காள மக்களுக்கு சிறப்பான எதிர்காலம் அமையவும், ஆங்கிலேயர்களால் பறிக்கப்பட்ட வளங்கள் மீண்டும் வங்க மக்களுக்கே கிடைக்கவும் பிரார்த்திப்பதாக அந்தப் பாடலில் ரவீந்திரநாத் தாகூர் குறிப்பிட்டிருக்கிறார். இது தொடர்பான ரவீந்திரநாத் தாகூரின் வரிகள் வருமாறு, “பங்களார்மதி, பங்களார் ஜோல், பங்களார்பாயு, பங்களார் பால்; புண்யோஹாக், புன்யோஹாக், புண்யோஹாக், ஏய் பாகோபன்! பங்களார்கர், பங்களார்ஹாத், பங்களார் பான், பங்களா மாத். பூர்னோஹாக், பூர்ணோஹாக், பூர்ணோஹாக், ஏ பாகோபன்!”.

இந்தியாவில் வேளாண் தேசியவாதத்தை பொதுமக்கள் தான் உருவாக்கினார்கள் என்பது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பதியப்பட வேண்டிய அம்சம் ஆகும். தேசியவாதத்தை வலியுறுத்திய தலைவர்களில் இதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் மகாத்மா காந்தி ஆவார். ஆனாலும் இதற்கான அடித்தளம் அதற்கு முன்பே 1905ஆம்

ஆண்டின் மேற்குவங்கம் உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மாநிலங் களையும் சேர்ந்த மக்கள் ஆங்கிலே யரின் ஆட்சிக்கு எதிரான தங்களின் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் காரணமாக பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகுலே போன்ற தலைவர்கள் 1905ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டத்தில் இணைந்தனர். அது மட்டுமின்றி, அவர்களின் வருகையால் நாட்டு மக்களிடம் புதிய உணர்வு ஏற்படுத்தப்பட்டது. 1917ஆம் ஆண்டு மகாத்மா காந்தி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகு இந்த உணர்வு மேலும் வலுப்பெற்றது.

**1917 காந்தி இயக்கத்தின் செல்வாக்கு**

முதலாவது உலகப்போர் முடிவடைந்த பின்னர், 1917ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தி, பீகார் மாநிலத்தில் உள்ள சம்பரான் கிராமத்திற்குச் சென்று ஊரக மக்களையும், உழவர்களையும் சந்தித்தார். செம்பரான் கிராமத்தில் உழவர்களை மகாத்மா காந்தி சந்தித்தது தேசிய நிகழ்வாகும். மகாத்மா காந்தி கிராமப்பகுதி களுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்தால் ஏற்பட்ட தாக்கம் மிகப் பெரியது ஆகும். ஆங்கிலேயர்களுக்கு எதிரான அகிம்சை வழியிலான போராட்டங் களில் பங்கேற்க வேண்டும் என்றும், அச்சம் இல்லாத சுதந்திர மான நாட்டைக் கட்டியெழுப்பத் துணை நிற்கும்படியும் விவசாயி களை மகாத்மா காந்தி கேட்டுக் கொண்டார். மகாத்மா காந்தியின் இந்தச் சுற்றுப்பயணம் குறித்த நிகழ்வுகளை கரிபோலி என்ற உள்ளூர் மொழி நாட்டுப்புறக் கவிஞர் கவிதையாக வடித்துள்ளார். ஆங்கிலேயர்களை எதிர்ப்பதிலும், சுதந்திரமான நாட்டைக் கட்டி எழுப்புவதிலும் மகாத்மா காந்தி எவ்வளவு தீவிரமாகச் செயல்பட்டார் என்பதை கீழ்க்கண்ட வழிகளில் அந்தக் கவிஞர் வர்ணித் திருக்கிறார். “சபர்மதி சே சலசந்த், ஏகாஹிம்சாதாரி; ஜக்தி மீன்ஸ்ன்னதச் சயகுமிப்ரித் விசாரி; கம்பேகா மரியாஹாத்மீன் லதி எக்லாங்கோடிதாரி...; கர்மேயின் ஜா ஜலக்ஜகயா, ஆசாதி கா பத் பதயர் காதிதாரிஹேமின்பனாய பாரத தேரா பூஜாரி”.

மகாத்மா காந்தியின் சுற்றுப்பயணத்தால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட உணர்வுகளை போஜ்பூரி மொழியைச் சேர்ந்த கவிஞர் ஒருவரும் அவரது கவிதையில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். “மான் காந்தி கேபசன்வடுக்வா ஹோ ஜாஹியேச பன்வர் டான் பே உதார்கப்தவிதேஷி, கதர் கேகைல்தரன்வா”.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தை மகாத்மா காந்தி முன்னெடுத்ததன் விளைவாக, பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட தாக்கங்கள் என்னென்ன என்பதை, 1927ஆம் ஆண்டு சில்ச்சார் பகுதிக்கு மகாத்மா காந்தி மேற்கொண்ட பயணத்தைச் சுட்டிக்காட்டி, கச்சா நாகா இனத்தைச் சேர்ந்தவரும், வடகிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட காமூய் புரட்சியுடன் சம்பந்தப்பட்ட வருமான ஹைபோ ஜடோனாங்கு கீழ்க்கண்டவாறு பதிவு செய்தி ருக்கிறார். “மகாத்மா காந்தியே! ஹமாரே ராஜா பன் ஜெயியே; ஐயே ஜி ஐயே!”.

**1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம், புரட்சிகர தேசியவாதத்தின் விடுதலை வடிவம்**

1942ஆம் ஆண்டில் “செய் அல்லது செத்து மடி” என்ற முழக்கத்தை மகாத்மா காந்தி உருவாக்கினார். அத்தகைய சூழலுக்கு அவரைத் தள்ளிய நிகழ்வு என்ன? என்பதை புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளரான ஷாகித் அமிர், சௌரி சௌரா இதழில் ஸ்மிருதி அவ்ரிதிஹாஸ்: சௌரி சௌரா என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டி ருக்கிறார். அந்தக் காலக்கட்டத்தில் மகாத்மா காந்தியைச் சந்தித்த வேளாண் பெருமக்கள், மகாத்மா காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தை ஒருங்கிணைப் பவராக மட்டும் இருக்கக் கூடாது; தேவை ஏற்பட்டால் ஆயுதங்களை ஏந்தி எதிரிகளை எதிர்கொள்ளும் வீரராகவும் மாற வேண்டும் என்று வலியுறுத்தியதாக ஷாகித் அமிர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான குறிப்புகள் சில நாட்டுப்புறப் பாடல்களிலும் உள்ளன. “மகாத்மா காந்தியடிகள் ஆயுதம் தாங்கிப் போராடினால் என்ன ஆகும்? என்பது குறித்த தமது எண்ணத்தை ஒரு நாட்டுப்புற கலைஞர் இந்த வரிகளில் வெளிப்படுத்தி இருக்கிறார். “பத்தாயிரம் முதல் 20 ஆயிரம் வரை வீரர்கள் அடங்கிய போர்ப்படை ஒன்றிற்கு மகாத்மா காந்தி தளபதியாகப் பொறுப்பேற்று, ஆங்கிலேயர்கள் மீது படையெடு த்துச் சென்று தாக்குகிறார். அதன் மூலம் நாட்டில் முற்றிலும் வேறுபட்ட மாபெரும் தேசியவாத உணர்வு

ஏற்படுகிறது.` மகாத்மா காந்தி விடுதலைக்காக போர்க்குணம் கொண்டவராக மாறுகிறார். உள்ளூர் மக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட படைகளுடன் முன்னேறிச் சென்று ஆங்கிலேயர்களைத் தாக்கி, அவர்களின் தலைகளைத் துண்டாடுகிறார். இது குறித்தத் தகவல்களைக் கேட்டதும் ஆங்கிலேயர் படைகள் பதற்றமடைகின்றன. ஆங்கிலேயப் படையில் உள்ள ஒவ்வொரு வீரரும் இருக்கும் இடத்தில் இருந்து அப்படியே தப்பி ஓடுகின்றனர்" என்று மேற்கண்ட வரிகளில் நாட்டுப்புறக் கவிஞர் குறிப்பிட்டிருக்கிறார். மகாத்மா காந்தியை இப்படியொரு கோணத்தில் வர்ணிப்பது மிகவும் அரிதான ஒன்றாகும். ஆனாலும், மகாத்மா காந்தி நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய திறன் படைத்தவர் என்ற மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் அவரை மிகப்பெரிய போர்ப்படைத் தளபதியாக நாட்டுப்புறக் கவிஞர் வர்ணித்திருக்கிறார்.

1857ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையிலான இந்திய தேசியவாதத்தின் தன்மை என்பது பொதுமக்கள் சார்ந்த தேசியவாதமாகும். இத்தகைய தேசியவாத உணர்வு நாட்டின் விடுதலையை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதாகும். இது தொடர்பாக இந்தி இலக்கியங்களிலும், நாட்டுப்புற நினைவுகளிலும் எழுதப்பட்ட விசயங்கள் அனைத்தும் அரசியல் விடுதலையையும், அதைச் சார்ந்த சமூக விடுதலையையும் மையப்படுத்தியுள்ளன. சமூக விடுதலை என்பதில் பெண் விடுதலையும், தலித் விடுதலையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்திய விடுதலை இயக்கத்தின் போது உருவான இந்திய தேசியவாதத்தின் அம்சங்கள் குறித்து பல்துறைகளைச் சார்ந்த அறிஞர்களும், வரலாற் ஆய்வாளர்களும் மிகவும் ஆழமா விவாதித்திருக்கின்றனர். அதனா தான் இந்திய வரலாற்றில் இந்த காலம் இந்திய தேசத்தி அடித்தளமாகப் பார்க்கப்படுகிறது. அந்த அடித்தளத்தின் மீது தான் 1947ஆம் ஆண்டுக்குப் பிந்தைய சுதந்திர இந்தியா கட்டி எழுப்ப பட்டு இருக்கிறது. விடுதலைக்கு பிந்தைய இந்தியா, உலக அரங்கில் எவ்வாறு இருக்க வேண்டுமோ அதற்கு ஏற்ற வகையில் ஜனநாயகமும், மதச்சார்ப்பின்மையும் கொண்ட ஒன்றாகும். இந்தியாவின் கூட்டு உணர்வு என்பது அறிவு மற்றும் சிந்தனை நடைமுறை சார்ந்த இந்தியப் பாரம்பரியத்தை மையமாகக் கொண்டு இருக்கிறது.

– தேவேந்திர சௌபே,
பேராசிரியர், இந்திய மொழிகள் மையம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

## விடுதலை வீரர்கள்


அம்புஜாம்மாள்


அஞ்சலை அம்மாள்


கேப்டன் லட்சுமி



கோதைநாயகி

சுதேசியப் பெருமை

# காந்தியத் தாக்கம்

– த்வானில் பரேக்


1857ஆம் ஆண்டின் புரட்சிதான் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. ஆகவே 1857 முதல் 1947 வரை இருக்கும் 90 ஆண்டுகள் நிறைந்த காலகட்டத்தைத்தான் இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் காலகட்டமாக எடுத்துக் கொள்ளவேண்டும். இந்தக் குறிப்பிட்ட காலகட்டம் மற்றும் அந்தக் காலகட்டத்தின் உணர்ச்சிப் போக்குகளை குஜராத்தி எழுத்தாளர்கள் தங்களது இலக்கியப்படைப்புகளில் எடுத்துக்காட்டியுள்ளனர், பிரதிபலித்துள்ளனர். காந்தியின் இந்திய வருகைக்குப் பிறகு சுதந்திரத்திற்கான வேட்கை மேலும் வளர்ந்தது. காந்தியின் தாக்கத்திற்கு ஆட்பட்ட எழுத்தாளர்களின் படைப்பில் ஒப்பீட்டு ரீதியில் இவை அதிக அளவில் பிரதிபலித்தன.



சீர்திருத்தக் காலகட்டத்தில் (சுதாரக் யுக்) டல்பத்ராம் என்ற எழுத்தாளர் சுதந்திரத்துக்கான தனது வேட்கையை வெளிப்படுத்தும் வகையில் ஹுன்னர்கானின் ஊடுருவல் (Hunnarkhan ni Chadai) என்பதை எழுதினார். நர்மத் என்பவர் தேசத்திற்கான பெருமை (Swadesh-abhiman) என்ற சொற் சேர்க்கையைப் பயன்படுத்தினார். மேலும் முன்னேறிச் செல்லுங்கள்! வெற்றி உங்களுக்கே என்றெழுதி மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை அதிகரித்தார். அறிவாளர் காலகட்டம் (Pandit Yug) என்பது சுதந்திரப் போராட்ட த்தைப் பொறுத்தவரையில் சற்றே மந்தமான காலகட்டம் ஆகும். இந்தக் காலகட்டம் கல்வியின் புதிய அலையால் பெரிதும் தாக்கம் பெற்ற காலகட்டமும் ஆகும்.

தென்னாப்பிரிக்காவில் இருந்து 1915இல் இந்தியா திரும்பிய மகாத்மா காந்தி 1917இல் சபர்மதி ஆஸ்ரமத்தை ஏற்படுத்தினார். அதைத் தொடர்ந்து 1920இல் குஜராத் வித்யாபீடத்தை நிறுவினார். இந்த இரண்டு நிறுவனங்களும் குஜராத்தில் சுதந்திரப் போராட்டம் தொடங்கப்பட்டதில் மிக முக்கிய மான பங்கினை ஆற்றியிருந்தன. உமாசங்கர் ஜோஷி, சுந்தரம், பண்டிட் சுக்லாஜி, முனி ஜின்விஜய், காக்காசாஹேப் கலேல்கர் போன்ற அறிஞர்களும் எழுத்தாளர்களும் குஜராத் வித்யாபீடத்தோடு தொடர்புடையவர்களாக இருந்தனர். இவர்கள் குஜராத்தி இலக்கியத்திற்கு அளப்பரிய பங்கினை ஆற்றி யிருந்தனர். இவர்கள் மட்டுமல்லாமல், ஜாவர்சந்த் மேகானி, கிரிஷ்ணலால் ஸ்ரீதரணி, ராமன்லால் வி.தேசாய் முதலானோரும் தங்களது இலக்கியப் படைப்புகளில் சுதந்திரப் போராட்டத் திற்கான ஆன்மாவைப் பிரதிபலித்தனர்.

காந்தியச் சிந்தனைகளின் தாக்கத்தாலும் காகாசாஹேப் கலேல்கரின் தாக்கத்தாலும் உமா சங்கர் ஜோஷி பல கவிதைகளை எழுதியுள்ளார். அவற்றில் பல கவிதைகள் சுதந்திரத்திற்கான அவரின் தாகத்தைப் பிரதிபலிக் கின்றன. சில கவிதைகள் வேதனையை வெளிப்படுத்து பவையாக உள்ளன. அடிமை




(Gulam) என்ற கவிதையில் கவிஞர் இப்படிக் கேள்வி எழுப்புகின்றார்:

நான் ஒரு அடிமையா?

ஒட்டு மொத்த இயற்கையும் சுதந்திரமாக இருக்கிறது

இயற்கையின் விலைமதிப்பற்ற மலரான

மனிதன் மட்டும் அடிமையா!

உமாசங்கர் ஜோஷி, காகாசாஹேப் கலேல்கர், சுந்தரம் முதலானவர்கள் தங்களது படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விடுதலைக்கான இந்தப் பயணத்தில் அவர்கள் சிறைப்படவும் நேரிட்டது. விசாப்பூர் சிறையில் உமாசங்கர் ஜோஷி பாம்புகளின் குவியல் (சப்னா பாரா) என்ற ஓரங்க நாடகங்களின் தொகுப்பை எழுதினார்.

"ஏக் சுசாயெலா கோட்டலா னெ ஜோயி" என்ற கவிதையில் சுதந்திரத்தின் மரமாக ஆக வேண்டும் என்ற தனது ஆசையை கவிஞர் அறிமுகப்படுத்துகின்றார்.

காந்திய காலகட்டம் (காந்தி யுக்) என்பது உமாசங்கர் ஜோஷி மற்றும் சுந்தரம் ஆகிய எழுத்தாளர் களுக்கான காலகட்டம் ஆகும். எழுத்தாளர் சுந்தரம் ஒரு செய்யுளில் தனது சீற்றத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்:

"பல விஷயங்கள் இங்கே அழிக்கப்பட்டாக வேண்டும்

நீங்கள் சுத்தியல்களைப் உயர்த்திப் பிடியுங்கள்,

எனது கைகளையும் உயர்த்திப் பிடியுங்கள்

பல விஷயங்கள் தகர்த்தெறியப்பட வேண்டியிருக்கின்றன

சுத்தியலையும் எனது கரங்களையும் நீங்கள் உயர்த்திப் பிடியுங்கள்."

"ராஷ்ட்ரிய சஹாயர்" என காந்திஜியால் அங்கீகரிக்கப்பட்ட ஜாவர்சந்த் மெஹானியின் கவிதைத் தொகுப்பான "சிந்துடோ" என்பதை பிரிட்டிஷ் அரசு பறிமுதல் செய்தது. உணர்ச்சிகளை முன்னிறுத்துவதில் "சிந்துடோ" குஜராத்தி இலக்கியத்தின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அவர் தனது குரலை ஆர்ப்பாட்டமாக இவ்வாறு முன்வைக்கிறார்:

கால காலமாக எங்களின் துயரங்கள்

வலி நிறைந்தவை! எங்களைத் தடுமாறச் செய்பவை"


கவிதைகள் என்று மட்டு மல்லாமல், நாவல்கள், நாடகங் களிலும் கூட சுதந்திரப் போராட்டச் சிந்தனைகள் இடம்பெற்றன. இது தொடர்பான குறிப்பிடத்தக்க ஒரு நாவல் என்றால் அது ராமன்லால் வி தேசாய் எழுதிய உள்ளுக்குள் கனலும் தீ (Bharelo Agni) என்பதாகும். இந்த நாவலானது 1857இல் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஆனால் நாவலின் முதன்மைப் பாத்திரமான ருத்ரதத்தா காந்தியச் சிந்தனைகளால் தாக்கம் பெற்ற வராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இந்த நாவலின் தலைப்பே குறிப்பால் பொருளை உணர்த்தி விடுகிறது. பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு எதிராக இந்தியர்களிடம் மறைந்துள்ள கோபம் என்பதையே தலைப்பு மறை பொருளாகச் சுட்டிக் காட்டுகின்றது. மக்கள் மனதில் இருந்த சுதந்திரம் என்ற சிறுபொறி காந்தியச் சிந்தனைகளால் பற்றி எரிந்தது.


இறுதியாக இது சுதந்திரப் போராட்ட இயக்கம் என்ற வடிவத்தை அடைந்தது. மற்றொரு முக்கியமான நாவலாக ஜயந்தி தலால் எழுதிய கிராமத்தின் எல்லைப் பகுதிகளில் புனிதத் தலங்கள் (Padar na Tirath) நாவலைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து நடைபெறும் போராட்ட சுற்றி நாவல் நிகழ்கின்றது. வன்முறையை நாவல் சித்தரித்து இருந்தாலும் கூட, அரசுக்கு எதிரான மக்களின் போராட்டத்தை மறைமுகமாகச் சித்திரித்தது. எனவே படார் நா தீரத் என்ற இந்த நாவல், குஜராத்தி இலக்கியத்தில் மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு நாவலாக இடம் பெற்றது. மனுபாய் பாஞ்சோலி தர்ஷக் என்பவரின் ''ஜெர் டோ பிதா ச்சே ஜனி ஜனி'' என்ற நாவலின் மையப் பாத்திரமான கோபால், காந்தியின் சாயலில் சித்தரிக்கப்பட்டுள்ளார். தர்ஷக்கே தன்னளவில் சுதந்திரப் போராட்டத்தில் செயலூக்கமாக பங்கேற்ற நபராவார்.

கிரிஷ்ணலால் ஸ்ரீதரணியின் “ஜபக் ஜ்யோத்” நாடகம், சி.சி.மேத்தாவின் ரெயில் (Aaggadi) என்ற நாடகம் ஆகிய இரண்டும் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுங் கோன்மையைச் சித்தரித்துள்ளன. ரெயில் நாடகமானது பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட சுரண்டலைக் குறியீட்டு ரீதியில் எடுத்துக் காட்டியது. ஜயந்த் காத்ரியின் நாடகமான மங்கள் பாண்டே என்ற நாடகம் 1857 சிப்பாய்க்கலகத்தைச் சித்தரித்தது. குஜராத்தி இலக்கிய த்தில் மங்கள் பாண்டேவை கதாநாயகனாகச் சித்தரித்த குறிப்பிடத்தக்க நாடகங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான சிப்பாய்க் கலகத்திற்காகத் திட்ட மிடுதலிலும் தந்திரோபாயங்களிலும் மங்கள்பாண்டே, நானே சாஹிப் பேஷ்வா மற்றும் பலர் ஈடுபட்டதை இந்த நாடகம் சித்தரிக்கிறது. இந்தக் காலகட்டத்தில், குஜராத்தின் பழங்குடியினரும் கூட பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகப் போராடத் தொடங்கினர். பழங்குடியினரின் எழுச்சியானது “மங்கார் விக்ரா” என்று அழைக்கப்படுகிறது. இந்தப் புரட்சி குறித்து “மங்காத்” என்ற நாடகம் எழுதப்பட்டதோடு அது மேடையில் நிகழ்த்தவும்பட்டது.

கிரிஷ்ணலால் ஸ்ரீதரணியின் எட்டாவது டில்லி (Aathamu Delhi) என்ற கவிதைபிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தைச் சித்தரிக்கிறது. ஏழு பேரரசுகள் தில்லியை ஆட்சி செய்தன. எட்டாவது பேரரசின் போது டில்லிக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று கவிஞர் வாழ்த்துகிறார். பன்னால் பட்டேலின் ''நேஷனல் சேவிங்ஸ்'' என்ற சிறுகதையில் உள்ளூர் கிராம மக்கள் பிரிட்டிஷாரால் பொருளாதார ரீதியாகச் சுரண்டப்படுவதும் கதையின் நாயகனான ராவாஜி அநீதியை எதிர்த்துப் பிரத்யேக முறையில் போராடுவதும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

காந்திஜி, சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் ஏனைய சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து பல கலைப்படைப்புகளும் சித்தரித் துள்ளன. ஆனால் இத்தகைய நாடகங்கள் பல கதாபாத்திரங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். குஜராத்தி இலக்கியத்தின் மூன்று தொடக்கநிலைக் காலகட்டங்களான சீர்திருத்தக் காலகட்டம் (Sudharak Yug), அறிஞர்கள் காலகட்டம் (Scholar Era) மற்றும் காந்தியக் காலகட்டம் (Gandhi Era) ஆகியன இந்திய சுதந்திரப் போராட்டத்தின் இயல்பைச் சித்தரித்தன. காந்தியின் வருகைக்குப் பிறகு இலக்கியத்தில் சுதந்திரத்தின் வேட்கை மேலும் மலர்ச்சி பெற்றது. காந்தியால் தாக்கம் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளில் ஒப்பீட்டு அளவில் அதிகமாக இது பிரதிபலித்தது.




– டாக்டர் த்வானில் பரேக், அகமதாபத்தில் உள்ள குஜராத் வித்யாபீடத்தின் குஜராத்தித் துறையில் இணைப்பேராசிரியர்.


# எமது வெளியீடு

# பிரிவினையின் கதை - ஆங்கில நூல்

**ராகவேந்திர தன்வ**

**விலை: ரூ.475/-**

இந்தியப் பிரிவினை என்பது அதுவரை காணப்படாத மனித இடப்பெயர்வு, கட்டாயப் புலம்பெயர்வு பற்றிய கதையாகும், தேசப் பிரிவினையின் போது, அந்நியமான சூழலிலும், எதிர்ப்புகள் நிறைந்திருந்த சூழலிலும் கோடிக்கணக்கான மக்கள் புதிய இருப்பிடங்களைத் தேடினர். நம்பிக்கைகள், மதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வலிந்து உருவாக்கப்பட்ட பிளவுகளின் கதை இது என்பதையும் தாண்டி, வாழ்க்கை முறையும், அமைதியான சகவாழ்வும் திடீரென நிலைமாற்றம் அடைந்து இப்படியொரு நிலைமை எப்படி நேர்ந்தது என்பதையும் இந்த நூல் தெரிவிக்கிறது., வகுப்புவாதக் கலவரத்தினால் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வாழ்ந்த சமூகத்தினர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் அளவுக்கு சாதாரண மக்களின் வாழ்க்கை சீர்குலைந்ததாக பிரிவினை இலக்கியத்தின் பெருந்தொகுப்பு குறிப்பிடுகிறது. பத்மஸ்ரீ விருது பெற்ற ரகுவேந்திர தன்வார் 'இந்தியப் பிரிவினையின் கதை' என்ற தனது புத்தகத்தில் பிரிவினைக்கு முந்தைய சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் புகைப்படங்கள், விளக்கப்படங்கள், அறிக்கைகள் போன்ற வடிவங்களில் சோகமான நிகழ்வுகளை காலநிரல்படி வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறார். விரிவான குறிப்புகளும் தொன்மக் கதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன..




புத்தகம் கடந்த காலத்தை மறுபரிசீலனை செய்து, அரிய காட்சிகளின் மூலம் நம் நினைவைப் புதுப்பிக்கிறது, கடந்த காலம் எவ்வாறு நமது கண்களைத் திறக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறது. அதே நேரத்தில், முன்னேறுவதற்கான உறுதியையும் அளிக்கிறது. நூல் 104 தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரிவினை நிகழ்வின் பெயரில் தலைப்பிடப்பட்டுள்ளது. இரு தேசக் கோட்பாட்டுடன் நூல் தொடங்குகிறது. ஆங்கிலேயரிடம் இருந்து இந்தியாவிற்கு அதிகாரம் மாற்றப்பட்டதன் அடிப்படையில், மார்ச் 1947இல் பஞ்சாபின் ராவல்பிண்டி மாவட்டத்தில் நடந்த கலவரம் இறுதியில் பீகாருக்கும் வங்காளத்திற்கும் பரவியது. சமஸ்தான நாடுகளின் கோரிக்கைகள், பிரிவினையைத் தடுப்பதற்கான காந்தி செய்த முயற்சிகள், ஹிந்துஸ்தான் டைம்ஸ், தி ட்ரிப்யூன், டான் போன்ற செய்தித்தாள்களில் வெளிவந்த செய்திகள், பிரிவினைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது பிரிவினை குறித்த முஸ்லிம் லீக்கின் தீர்மானம் என்று விரியும் இந்த நூல் இறுதியில் மேற்கு பஞ்சாபிலும், கிழக்கு வங்காளத்திலும் வெடித்த வன்முறை மோதல்களின் உச்சக்கட்ட நிகழ்வுகளை அரிய படங்களுடன் விளக்குகிறது. சிறுபான்மையினருக்கு ஏற்பட்ட பாதிப்புகள், அகதிகள் முகாம்கள், பெண்களுக்கான மறுவாழ்வுத்திட்டங்கள், வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புதல், பொருளாதார நெருக்கடி, அரசியல் ஊழல் ஆகியவை குறித்தும் ஆசிரியர் விரிவாகச் செல்கிறார். நூலின் பின்னுரைப் பகுதி இந்தியாவிற்கு இது நல்லதா கெட்டதா என்ற கேள்வியை எழுப்பி வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பதன் தாக்கத்தைப் பற்றித் தெரிவித்து முடிவடைகிறது.

சாதாரண வாசகருக்கும் நிபுணருக்கும் ஒரு சேர ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இந்த நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரிவினை ஏன் நடந்தது என்பதை விளக்க நூல் முற்படவில்லை. ஆனால், பிரிவினை எப்படி ஏற்பட்டது என்பதை விளக்க முயல்கிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளுக்குப் போதுமான கவனம் செலுத்தப்பட்டாலும், பஞ்சாப் மற்றும் டெல்லிக்கு நூலில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டில் வெளிவந்திருக்கும் இந்தப் புத்தகம், மனிதகுல வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரிய துயரங்களில் ஒன்றின் விரிவான விளக்கமாகும்.

சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா சார்ந்த புத்தகங்களுக்கு அணுகவும்: www.publicationsdivision.nic.in

# இந்திய விடுதலை வேள்வியில் எழுந்த தமிழ் இலக்கியங்கள்

- உ. அலிபாவா


விடுதலைப் போராட்டக் காலத்து இலக்கியப் படைப்பாளர்கள் நாட்டுப்பற்றைத் தூண்டும் வகையில் இலக்கியங்களைப் படைத்தனர். அடிமைச் சிறுமையை மக்களிடமிருந்து போக்குவதற்கு முனைந்தனர். உரிமையின் பெருமையை நிலைநாட்ட முயன்றனர். விடுதலை வேட்கையைத் தூண்டினர். இந்திய தேசியத்தின் பெருமையையும் காந்தியத்தின் தூய தன்மையையும் தாய்மொழிப்படைப்புகளின் வாயிலாக உணர்த்த முற்பட்டனர்.

பாருலகில் இந்தியத் திருநாடு தனிப்பெருஞ் சிறப்புமிக்க நாடாகத் திகழ்ந்து வருகிறது. பழம்பெருமையும் இலக்கியச் செழுமையும் தத்துவ வளமும் நிறைந்த நாடுகளுள் ஒப்ப வைத்து எண்ணத்தக்க நாடான இந்தியத் திருநாடு இறுதியில் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது.

1858இல் இங்கிலாந்து பார்லிமெண்டின் நேரடி ஆட்சிக்கு இந்தியா கொண்டுவரப்பட்டது. இலார்டு கானிங் பிரபு இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இதற்கு ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேய வாணிகர்களின் போக்கை எதிர்த்து சிப்பாய்க் கலகம் நடைபெற்றது.

உள்நாட்டு மக்களிடையே ஒற்றுமையில்லை. இந்தியத் திருநாடு பல்வேறு சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஏராளமான பேதங்களால் மக்கள் பிரிந்து கிடந்தனர். ஒற்றுமை என்பது சிறிதளவும் இல்லை. ஆங்கிலேயர்கள் இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டனர்; மேலும் மேலும் பேதங்களை உருவாக்கிப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டனர். இதனையுணர்ந்த பகதூர்ஷா போன்றவர்கள் மக்களை ஒன்று திரட்ட முயன்றனர். மேனாட்டாரின் சீர்திருத்தங்களும் புகுத்திய புதிய கல்வி முறையும் அவர்கள் செய்த மதப்பிரச்சாரங்களும் அவர்கள் மேல் வெறுப்புணர்வு தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன. பன்றிக் கொழுப்பைத் துப்பாக்கியில் தடவியும் வாணிபச் சுரண்டலால் இந்தியர்களின் கைத்தொழிலை நசித்தும் வந்த ஆங்கிலேயர்களின் அற்பச் செயல்பாடுகளால் 1857இல் சிப்பாய்க்கலகம் உருவெடுத்தது. ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பல்வேறு பகுதிகளிலும் சிறு அளவில் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்திருந்தாலும் சிப்பாய்க் கலகமே முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என இந்திய வரலாற்றாசிரியர்கள் கணிக்கின்றனர்.

இதற்கு முன்பேயே தமிழகத்தில் ஆங்கிலேயே எதிர்ப்புக் கிளம்பி விட்டது. 1791க்கும் 1801க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் ஆங்கிலேயே எதிர்ப்புணர்வை விதைத்த வீரபாண்டிய கட்டபொம்மனும் அவன் காலத்தவரும் அவனுக்கு முந்தைய காலத்தினரும் கொடுத்த குரல்களையும் நடத்திய போராட்டங்களையும் அடைந்த இன்னல்களையும் இந்திய வரலாறு வலுவாகப் பதிவு செய்யவில்லை. 1750க்கும் 1947க்கும் இடையிலான இருநூறு ஆண்டுகளைத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்திய விடுதலை இயக்கக் காலகட்டமாகக் கொள்ளலாம். இந்தக் காலகட்டத்து இலக்கியப் படைப்பாளர்கள் நாட்டுப்பற்றைத்



வள்ளலார்

தூண்டும் வகையில் பாடினர். அடிமைச் சிறுமையை மக்களிடம் போக்க முனைந்தனர். உரிமையின் பெருமையை நிலைநாட்ட முயன்றனர். விடுதலை வேட்கையைத் தூண்டினர். தாய்மொழி வாயிலாக இந்திய தேசியத்தின் பெருமையையும் காந்தியத்தின் தூய தன்மையையும் உணர்த்த முயன்றனர்.

வடலூர் வள்ளல் என்றும் இராமலிங்க அடிகள் (1823 1874) என்றும் எல்லோராலும் அழைக்கப் பட்ட வடலூராரின் பாடல்களில் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி கடிந்துரைக்கப்பட்டுள்ள பதிவுகள் காணப்படுகின்றன. இக்காலத் தமிழ்க் கவிதையுலகில் பாரதிக்கு முன்னோடியாகத் திகழ்ந்த அடிகளார் “கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக” எனக் குரல் கொடுக்கிறார். “ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகு நடத்த வேண்டும்” என்ற சிந்தனையை விதைக்கிறார்.

“சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்”

என உலக மக்களை அழைத்து அவர்கள் குறைகளை உணர்த்துகிறார். “அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே” என அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

மனோன்மணீயம் இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை (1855 –1897) “தாயினும் சிறந்த தயைபூண்டிருந்ததும் தேயமாம் தேவிக்கு தீவினையிழைக்கத் துணிந்தஇவ் வஞ்சரை எணுந்தொறும் எணுந் தொறும்” எனக் கலங்குகிறார்.



எஸ்.டி.சுந்தரம்

“புதிய யுகத்தை நாவாறக் கூவியழைத்த நவயுகக் கவிஞரான மகாகவி பாரதி எட்டையபுரத்து இளஞ்சூரியன். தேசத்தையும் தேசப்பற்றையும் இந்திய நாட்டு மக்களின் உள்ளங்களில் ஊன்றிய பெருங்கவிஞன். ‘எனது தாய் நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்’ எனத் தலைப்பிட்டுப் பாடிய பாரதி “வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்” எனத் தேசப்பற்றை மக்கள் மனங்களில் விதைக்கிறான். நம்மிடையே நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்த ஆங்கிலேயனைப் பார்த்து “ஆயிர முண்டிங்கு ஜாதி எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி” என வினாத்தொடுக்கிறார். ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தோர் தம்முட் சண்டை செய்தாலும் சகோதரரன்றோ” என்று விடையும் இறுக்கிறார்.

“எப்பதம் வாய்த்திடு மேனும் – நம்மில்

யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்

முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்

முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

என்று ஒற்றுமையை ஊட்டுகிறான்.

“தில்லை வெளியிலே கலந்து விட்டவர் திரும்பியும் வருவாரோ” எனும் வர்ண மெட்டில் “வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ என்றும் ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ” என்றும் பாரதி சுதந்திரத்தின் பெருமையை உணர்த்துகிறான்.

“தண்ணீர் விட்டோ வளர்த்தோம்

சர்வேசா இப்பயிரைக் கண்ணீரால்

காத்தோம்; கருகத் திருவுளமோ” எனக் கேட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறான்.

பாரத ஜனங்களின் தற்கால நிலைமையைப் பார்த்த பாரதி



பாரதி

“நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்” என்று வருந்துகிறான்.

எத்தனை இன்னல்கள் வந்தாலும் சுதந்திர தேவியைத் தொழுதிட மறக்க மாட்டேன் என சுதந்திர தேவி துதி பாடிய பாரதி சுதந்திரம் அடைந்து விடுவோம் என்று உறுதியாக நம்பினான். இதனால் தான் ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று தீர்க்க தரிசனமாகக் கூறினான். பாரத நாட்டுக்குரிய கொடியினைத் தம் மனத்தில் வடிவமைத்தான். “தாயின் மணிக் கொடி பாரீர் அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்” என மக்களை அழைத்தான்.

‘விடுதலை விடுதலை விடு தலை’ என நாட்டு விடுதலைக்கும் சமூக விடுதலைக்கும் முழக்க மிட்டான். அறியாமைத் துயிலில் துயின்று கொண்டிருந்த பாரத நாட்டு மக்களைத் தட்டி எழுப்பு வதற்காகப் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியைப் பாடிய பாரதி பள்ளி எழுச்சிப் பாடலைப் பாடினானே தவிர ஓர் இடத்திலும் அவன் பள்ளி கொள்ளப் பாடவில்லை; நாட்டு நிலை கருதித் தாலாட்டின் தடயமே இல்லாத கவிஞனாகப் பாரதி திகழ்ந்தான்.

தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் சமமாகக் கருதிய பாரதி சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்து மக்களை ஒன்று திரட்டிய மகாத்மா காந்தியை

“வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாந்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க ; வாழ்க

என வாழ்த்துகிறான். இப்படி பாரதியின் பாடல்கள் எங்கும் சுதந்திரத்தின் வீச்சும் விடுதலை வேட்கையும் காணப்பட்டன. இதனால் பாரதியின் பாடலைப் படித்தோரனைவரும் உணர்வு பெற்று எழுந்தனர்.



பாஸ்கரதாஸ்

மதுரகவி பாஸ்கர தாஸ்(1892 –1952) மகாத்மா காந்தி 1915 இல் தமிழகம் வந்த போது “காந்தியோ பரம ஏழை சன்யாசி” என்று பாடி காந்தியைச் சிரிக்க வைத்த பெருமைக்குரிய தேசியக்கவிஞர். இவர் பாடல்கள் தேசியக் கூட்டங் களிலும் நாடகங்களிலும் தெருக் கூத்துகளிலும் பாடப்பட்டன. அவற்றைக் கேட்டுத் தேசப்பற்று மிக்கோரானோர் பலர்.

1919இல் நடைபெற்ற பஞ்சாப் படுகொலையைப் பற்றிய மதுரகவி பாஸ்கரதாஸின் பாடல் விடுதலை முழக்கமிட்டுத் திரண்ட பஞ்சாப் மக்களை ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொன்ற ஆங்கிலத் தளபதி ஜெனரல் டயர் என்பவனை எதிர்த்துப் பாடப்பெற்றது. பாரதி பாடல்களுக்கு முன்பே இப்பாடல் மக்களைச் சென்றடைந்த பாடலாகும். இதனைக் கேட்ட மக்களின் மனங்களில் ஆங்கிலேயர்களின் மீதான எதிர்ப்புணர்வு பெருகியது.

“கொக்குப் பறக்குதடி பாப்பா – அதைக்
கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா
மக்களை ஏமாற்றும் கொக்கு – அதன்
மமதை அழியவேண்டும் பாப்பா
தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு அங்குத்
தின்ன வழியில்லாத கொக்கு – மது
மாமிச வெறிபிடித்த கொக்கு – நம்
மக்களை ஏமாற்ற வந்த கொக்கு”

என்ற பாடல் ஆங்கிலேயரை மறைமுகமாகக் கேலி செய்வதற்குப் பயன்பட்ட பாடல். குழந்தைக்குக் கொக்கு பற்றிக் கூறுவது போல ஆங்கிலேயரின் வஞ்சகத்தை எடுத்துரைத்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்காகப் பாடப்பெற்ற இப்பாடல் அன்றைக்குப் பல இடங்களில் இளைஞர்களால் மகிழ்வோடு பாடப்பெற்ற பாடலாகத் திகழ்ந்த பெருமைக்குரியது.

‘சத்யம் என்றுமே தளராத நாடு’ எனப் பாரத நாட்டின் சிறப்பைப் பாடிய பாஸ்கரதாஸ் ஆங்கிலேயரின் சுயநலத்தைச் சாடினார். சாதி பேதத்தாலும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளாலும் எழும் சச்சரவுகளை நீக்கி விடுதலை உணர்வுடையோர னைவரும் மகாத்மா காந்தியடி களின் தலைமையில் ஒன்றிணைந்து

போரிட்டால் சுதந்திரம் வரும்; சுயாட்சி மலரும் எனத் தம் பாடல்களில் பதிவு செய்தார் பாஸ்கரதாஸ்.



பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நாட்டு விடுதலை இயக்கத்துத் தொண்டர் பலர் சேர வேண்டுமென அறை கூவி அழைப்பதற்காக குணங்குடி மஸ்தான் சாகிபின் 'போவோம் குணங்குடிக் கெல்லோரும் புறப்படுங்கள்' எனும் பாடல் மெட்டில் "சேர்வீர் தொண்டர் படைக்கெல்லோரும் அரை நொடியில் பாரீர் நமக்கு வந்த கேடு,பொறுக்கவில்லை வாரீர் இதனை அடியோடு கல்ல எம்மோடு" எனப் பாடித் தொண்டர்கள் மற்றும் பாரத நாட்டு மக்களைத் தொண்டர் படையில் சேரக் கேட்கிறார். "தேசத்திலே இந்த நேரத்திலே நல்ல தீரரை ஆக்கிடுவாய் இன்றே அச்சப் பேய்தன்னைப் போக்கிடுவாய்" என வேண்டுகிறார்.

"அன்னியர் நூலைத் தொடோம்" என்ற சேதி அறைந் திடடா புவி முற்றும் எங்கள் அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம் சுற்றும் சுற்றும் சுற்றும்" எனக் கதர்ராட்டினப் பாடலைக் காந்தியடிகள் குறித்தும் கதர் குறித்தும் பாவேந்தர் பாடுகிறார்.

காந்தியத்தையும் தேசியத் தையும் தம் இரு கண்களாகக் கொண்டு திகழ்ந்த காந்தியக் கவிஞர் நாமக்கல் வெ. இராம லிங்கம் பிள்ளை "சிந்தையினால் வாக்கதனால் செய்கை தன்னால் தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்" எனக் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையால் பாராட்டப் பெற்றவர். வடநாட்டில் காந்தியடிகள் தலைமையில் உப்பு சத்தியாக்கிரகம் தண்டி யாத்திரையைத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் மூதறிஞர் இராஜாஜி வேதாரண்யத்தை நோக்கிப் புறப்பட்டு உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தலானார். அப்போது வழிநடைப் பாட்டாக எழுதப் பெற்ற நாமக்கல்லாரின்,

"கத்தி யின்றி ரத்த மின்றி

யுத்த மொன்று வருகுது

சத்தி யத்தின் நித்தி யத்தை

நம்பும் யாரும் சேருவீர்"

"காந்தி யென்ற சாந்த மூர்த்தி



நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

தேர்ந்து காட்டும் செந்நெறி

மாந்தருக்குள் தீமை குன்ற

வாய்ந்த தெய்வ மார்க்கமே"

என்ற பாடல் புகழ்பெற்ற பாடலாகும். இப்பாடலைப் பாடிக் கொண்டே உணர்வு பெற்ற மக்கள் வேதாரண்யம் நோக்கிப் பயணித் தனர்.



பாபநாசம் சிவன்

நாமக்கல் கவிஞர் 'விடுதலை நம் பிறப்புரிமை' என்று பாடினார். 'பாரதநாடு நம் பாட்டன் சொத்து – நமக்கே உரியது' என்றார். 'கன்னியாகுமரி தொட்டு இமயம் மட்டும் ஒரே அமைப்பாக இறைவன் படைத்தளித்தது இந்தப் பாரதம். 'அஞ்சற்க விடுதலை திண்ணமாய்



ஜீவானந்தம்



சுத்தானந்த பாரதி

அடைவோம்' எனும் நம்பிக்கை விதையை ஊன்றினார்.

கவிஞர்கள் இயற்றிய கவிதைகளேயன்றி மேடை நாடகப் பாடல்களும் இந்திய விடுதலை இயக்கத்திற்கும் விடுதலையுணர் விற்கும் உரமூட்டின.

பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவானந்தம், பாபநாசம் சிவன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, திரைப்படக் கவிஞர் வி.ஏ. செல்லப்பா, கவியோகி சுத்தானந்த பாரதி, விடுதலைப் போரில்



கொத்தமங்கலம் சுப்பு

ஈடுபட்டுக் களம் கண்ட கவிஞர் எஸ்.டி. சுந்தரம், “வெள்ளைக்காரா வெளியே போ வென்று வீரப்போர் புரிவேன்” எனப் பாடிய கொத்த மங்கலம் சுப்பு ஆகியோரின் பாடல்கள் விடுதலைப் போரில் முக்கியப் பங்களித்தன.

இவையேயன்றி நாட்டுப் புறப்பாடல்களும் விடுதலைப் போரில் மக்களின் உணர்வுகளைத் தூண்டுவதற்காகப் பாடப்பட்டன. அப்பாடல்களுள் குறிப்பிடத்தக்க பாடலாக

“ஊரான் ஊரான் தோட்டத்திலே

ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்காய்

காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி

காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்

வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம் அது

வேடிக்கை செய்யுதாம் வெள்ளிப்பணம்

வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டு நீ

வேஷங் குலைந்தாயே வீராயி”

எனும் பாடல் திகழ்கிறது. இப்பாடல் பின்னாளிலும் பேசப் படுகிற பாடலாகவும் விளங்குகிறது.

“வானம் பொழியுது பூமி விளையுது

மன்னவன் கும்பினிக்கேன் கொடுப்பேன்”

என்ற கட்டபொம்மனின் முழக்கம் நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும் கும்மிப்பாடல்களிலும் வில்லுப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. பின்னாளில் வெளிவந்த திரைப்படத்திலும் வசனமாக இது இடம்பெற்றுள்ளது.

இந்திய விடுதலையுணர்வை இந்திய நாட்டு மக்களிடையே ஊட்டும் வகையிலும் ஆங்கிலேயர் களை எதிர்க்கும் வகையிலும் எழுந்த பாடல்கள் அங்கொன்றும் இங்கொன்றும் கொய்த சிறுசிறு மலர்களாக மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. எத்தனையோ பெயர் அறியா மனிதர்களும் தியாக சீலர்களும் இந்திய விடுதலை வேள்வியில் தம் பங்களிப்பைச் செலுத்தியதுடன் தங்களின் இன்னுயிரையும் இழந்தனர். அவர்களைப் போன்று சிறு சிறு ஊர்களிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்திய விடுதலை யுணர்வையூட்டிப் பாடிய பாவலர் களும் பலர் உண்டு. அவர்களின் சீரிய வரலாறுகளும் பாடல்களும் பதிவு செய்யப்படவில்லை. அவையும் பதிவு செய்யப்பட்டி ருந்தால் தமிழகம் சார்ந்த இந்திய விடுதலையைப் பாடும் இலக்கிய ங்கள் நிறையக் கிடைத்திருக்கும். இருந்தபோதும் பதிவாகியுள்ள இலக்கியங்களே இந்திய விடுதலை வேள்வியில் தமிழகத்தின் பங்களிப்பினை நிலைநிறுத்து வதற்குப் போதிய சான்றாதாரங் களாக இருக்கின்றன. இவற்றினை நீள நெடுக நினைந்து இலக்கியம் படைத்த தியாகிகளையும் அவர்களது தியாகங்களையும் நாளும் நாளும் நினைந்து போற்ற வேண்டும்.

---


**– பேராசிரியர் உ. அலிபாவா,**
தலைவர், தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி 620 024.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்

# புதிய வகை மருத்துவப் பரிசோதனைக் கருவிகள் உருவாக்கல்

– கே. விஜயேந்திரபாண்டியன்

இப்போது வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பல தொழில்;துறைகளில் பெருமளவுக்கு ஆற்றலை உயர்த்தக் கூடியதாக உள்ளது. செயற்கை நுண்ணறிவு மருத்துவ சிகிச்சைத் துறையில் பெரும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளது. இதனால் மருத்துவர்களும், பிற பணியாளர்களும் நோய் நிலைமைகளைத் துல்லியமாகக் கண்டறிந்து நோயாளிகளுக்கு மிகச்சிறந்த சேவையளிக்க முடியும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்;நுட்பத்தில் பல பயன்கள் இருந்தாலும் கூடவே சவால்களும் உள்ளன.



**செயற்கை நுண்ணறிவு சார்ந்த மருத்துவக் கருவிகளின் தற்போதைய உருவாக்கல் நிலை:**

தொழில்நுட்பம் மேம்பட்டு வரும் நிலையில் மருத்துவக் கருவிகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதால் மூன்று முக்கியமான விளைவுகள் ஏற்படுகின்றன.

**1. நீடித்துவரும் நோய்கள் மேலாண்மை:**

இந்த வகையில் செயற்கை நுண்ணறிவு கொண்ட மருத்துவக் கருவிகள் நோயாளிகளின் நோய் அறிகுறிகளைத் தொடர்ந்து பதிவு செய்து அதற்குண்டான சிகிச்சைகளையும், மருந்துகளையும் பரிந்துரைக்க முடியும். இவற்றில் முக்கியமானவை மூட்டுவீக்கம், ஆஸ்த்மா, இரத்த அழுத்தம், புற்று நோய், இரத்தநாள நோய், நீரிழிவு நோய், வலிப்பு நோய் மற்றும் முதியோர்களுக்கான நோய்களாகும்.

2. மருத்துவம் சார் படப்பிடிப்புக் கருவிகளைத் தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள் தற்போது அவற்றுடன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி உடற்கூறு நிலைமைகளை மிகத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்ட உதவுகின்றன. இந்தக் கருவிகளில் சில தகவல்களை உள் செலுத்தினால் அவற்றைப் பயன்படுத்தி உறுப்புக்களின் நிழற்படங்கள் மிகத் துல்லியமாக வெளிப்படும்.

3. இண்டர்நெட் ஆஃப் திங்க்ஸ் எனப்படும் கருவிகளின் இணையத்தை மருத்துவர்கள் பயன்படுத்தி, தகவல்களை ஆராய்ந்து நோயாளிகளுக்கு அவ்வப்போது நோய் சார்ந்த தகவல்களை தெரிவிப்பதற்கும், செலவினங்களைக் குறைப்பதற்கும், நோயாளிகளின் நோய்த்தன்மை[illegible]களைத் தொடர்ந்து கண்காணி[illegible]கவும், சிறப்பாகச் செயல்படவு[illegible] ஏதுவாகிறது. மருத்துவக் கருவிக[illegible] தயாரிக்கும் தொழில்நிறுவனங்க[illegible] இந்தத் தகவல்கள் இணைய[illegible] தொழில்நுட்பத்தை மருத்துவ[illegible] கருவிகள் மற்றும் செயற்[illegible] நுண்ணறிவோடு இணைத்[illegible] நோயாளிகளின் சிகிச்சைக[illegible] மேம்படுத்துகின்றனர்.

**மருத்துவக் கருவிகளின் செயற்[illegible] நுண்ணறிவுப் பயன்பாடு:**

மருத்துவக் கருவிகளில் [illegible] வழிகளில் செயற்கை நுண்ண[illegible]வைப் பயன்படுத்தமுடியும். அப்ப[illegible]

பயன்படுத்தப்படக் கூடிய எட்டு வகைகளைக் காணலாம்.


1. இதய நோய்களைக் கண்டறிதல்
2. மேமோகிராஃபி கருவி மூலம் மார்பகப் புற்றுநோயைக் கண்டறிதல்
3. மூளைச்சிதைவு நோய்களைக் கண்டறிதல்
4. விழித்திரை பாதிப்புகளைக் கண்டுபிடித்தல்
5. திசுக்களின் வகைப்பிரித்துக் கண்டறிதல்
6. கல்லீரல் நோய் அறிகுறிகளைப் படம்பிடித்தல்
7. ஆய்வுக்கூட சோதனைக் கருவிகள்
8. நோயாளியின் முக்கிய மருத்துவக் குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகள்.


**மருத்துவக் கருவிகள் செயற்கை நுண்ணறிவு முதலீட்டுச் சுற்றுசூழல்**

மருத்துவக் கருவிகள் தொழில்நுட்பத்துறை அதிக நெறி முறைக் கட்டுப்பாடுகள் உள்ள துறை என்பதால் அதில் முதலீடு செய்வது மிகவும் ஆபத்தானது. ஆனால், மருத்துவக் கருவிகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் சாத்தியத்தால் இதில் முதலீடுகள் செய்ய புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. சந்தை மதிப்பீடுகளின்படி மருத்துவக் கருவிகளின் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் துறையில் சந்தை அளவு 2025 வாக்கில் உலகளவில் 3130 கோடி அமெரிக்க டாலராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறையின் ஆண்டு வளர்ச்சிக் கூட்டு அதிகரிப்பு விகிதம் 41.5 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் துறையில் மிக அதிக அளவிலான முதலீட்டாளர் களைச் ஈர்த்திருப் பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

**முதலீடுகளுக்கான சவால்கள்:**

1. மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு அதிகரித்து வந்தாலும் முதலிடுவோருக்கு மற்ற துறைகளை விட இது குறைந்த நிலையில்தான் காணப்படுகிறது.
2. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதால் தற்போது உள்ள சாதாரண தொழில் நுட்பங்களை விட எந்த அளவிற்கு அது பயன் தரும் என்பதும் ஒரு முக்கிய சவாலாக உள்ளது.
3. இதுவரை செயற்கை நுண்ணறிவால் மிகப்பெரிய அளவில் நல்ல விளைவுகள் ஏற்படும் என்பதை இன்னும் யாரும் உறுதியாக வெளிப் படுத்தவில்லை.
4. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் மருத்துவத் தகவல் களில் அதிக அளவு இடைவெளிகள் காணப்பட்டன.
5. சில நாடுகளில் மட்டுமே உரிய நேரத்தில் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு உடனடி முடிவுகளை மேற் கொள்ள இயலும்.
6. தகவல்களைப் பெறுவது, பகிர்ந்து கொள்வது, இணைப்பது ஆகியவற்றில் உள்ள சட்ட ரீதியான மற்றும் கொள்கைகள் ரீதியான தடங்கல்களால் கோவிட் பெருந்தொற்று மேலாண்மை மிகவும் பாதிக்கப்பட்டது.
7. மருத்துவம் சார்ந்த தகவல்கள் ஒரே சீராக இல்லாமல் இருப்ப தால் அவற்றைப் பயன்படுத்திக் கண்காணிப்பதற்கும், ஆய்வுகள் செய்வதற்கும், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்து வதற்கும் வாய்ப்புகள் குறைவே.
8. மருத்துவத்துறையில் தரம் பிரித்தல் போதுமான அளவு இல்லாததால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மருத்துவ அமைப்புகளுக் கிடையே தகவல்கள் பரிமாறிக்





கொள்ள செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது ஏதுவாக இல்லை.

9. மருத்துவ சிகிச்சைகளுக்காகச் செலவிடப்படுவதில் ஐந்தில் ஒரு பாகம் வீணாகச் செயல் படுத்தப்படுவதாலும், பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவைகளாகவும் உள்ளதால் இந்த நிலைமையைச் சீர் செய்வது நல்லது. மத்திம காலகட்டத்தில் இதற்கு முதலிடப்படுவது நன்மை பயக்கும்.


**செயற்கை நுண்ணறிவு ஏதுவான மருத்துவ அமைப்புகளின் முக்கியப் பண்புகள்:**

மருத்துவ சிகிச்சைச் சூழலில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதால் படிப்படியாக மாறும் நிலைமை கீழே விளக்கப்பட்டுள்ளது. இவை சார்ந்த பின்வரும் துறைகளில் தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பத்துறை ஈடுபட்டு வருகிறது.

1. தனிப்பட்ட கணித வழிமுறை
2. மருத்துவம்சார் படப்பிடிப்புகள் மற்றும் நோய் கண்டறிதல் கருவிகளில் கணிணி உதவியுடன் பார்வையிடுதல்
3. குறிப்பெழுதும் கருவிகள்
4. பொதுத் தகவல் தளங்களையும் மருத்துவத் தகவல் தளங்களையும் ஒன்றிணைத்தல்

**மருத்துவத் தேவைகளில் செயற்கை நுண்ணறிவு அணுகுமுறை:**

1. **பொதுவான மின்மயக் கட்டமைப்பு அணுகுமுறை:** பல நாடுகளில் செயல்படும் திட்டங்களில் எல்லாவற்றையும் இணைத்து முழுமையான ஒரு செயல் திட்டத்திற்கான திட்ட வடிவோ, கொள்கை வடிவமைப்போ இல்லை.
2. **மருத்துவம் சார்ந்த தகவல்களின் ஆளுமையை வலுப்படுத்தல்:** ஆளுமை என்பது தகவல்களையும், மின் தொழில் நுட்பங்களையும் பயனுள்ள பணிகளில் ஈடுபடுத்துவதாகும். அதே சமயம் பாதுகாப்பாகவும் தனிநபர் ரகசியங்களைக் காப்பதாகவும் அது இருக்க வேண்டும்.
3. நாட்டிற்குள்ளும், நாடுகளுக்கிடையேயும் மருத்துவத்
தகவல்களைப் பரிமாற்
செய்து கொள்வதில் தக
குறியீடுகள் மற்றும் பகி
சார்ந்த போதிய ஒப்பந்தங்
இல்லாமை மற்றும் சட்
சார்ந்த இடையூறுக
நோயாளிகள், பொதுமக்
தகவல் காப்பாளர்கள் மற்
பிற பங்காளர்கள் ஆகியோ
கிடையே தகவல்களைப் ப
படுத்துதல், காப்பாற்று
ஆகியவை சார்ந்த நம்பிக்
இல்லாமை.
4. **நிறுவனம் சார்ந்த மற்
செயல்பாடு சார்ந்த தி
வளர்த்தல்:** தகவல்க
திறம்பட இணைத்து ஆ
செய்வதற்கான செயல்மு
களையும், நிறுவன வசதிக
யும் உருவாக்கல். இதற்க
தகுந்த கொள்கைச் சூ
உருவாக்கப்பட வேண்
அப்போது தான் இத்த
சூழலில் ஈடுபட்டுள்ள அ
வரும் தகவல்களைப் ப
படுத்தி அதிலிருந்து செ
களைச் சேகரித்து கொள்
இலக்குகளை மேம்பட
மட்டுமே பயன்படுத்த இய



## தற்போதைய முன்னுரிமைகள்:

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான ஆறு முன்னுரிமைகளாவன: நோயாளி சார்பு, வருங்கால சிகிச்சை முறைகளை உறுதிபடுத்துதல், சிகிச்சை நடவடிக்கைகளில் ஆய்வுக்கான சூழலை ஏற்படுத்துதல், துரிதமாகவும் எல்லோருக்கும் பயன்படும் வண்ணமும் புதிய கண்டுபிடிப்புகள் உருவாகும் சூழலை ஏற்படுத்துதல், புதியன கண்டுபிடிக்கும் பண்பாட்டை மேம்படுத்துதல், தொழில் நிறுவனங்களோடு குறிப்பான கூட்டு முயற்சிகள் ஆகியன.

## மருத்துவக் கருவிகள் செயற்கை நுண்ணறிவுசார் ஒழுங்குமுறை நடவடிக்கைத் தேவைகள்:

### அடிப்படை ஒழுங்குமுறை அமைப்புகள்:

ஒரு முழுமையான செயற்கை நுண்ணறிவு ஒழுங்குமுறை அமைப்பில் தகவல் சேகரிப்பதிலிருந்து செயற்கை நுண்ணறிவு செறிவூட்டப்பட்ட ஒரு அமைப்பை முழுமையாக உருவாக்கி அதற்கான அங்கீகாரம் பெற்று செயல்படுத்தப்பட்டு, கண்காணிக்கும் வகையில் அனைத்துச் செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். ஆனால், மருத்துவ சிகிச்சைத் துறையில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு இன்னும் உருப்பெற்று வளர்ந்து வருவதால் அது முதிர்ச்சி பெறும் வரை இது மாறிவரும் சூழ்நிலையாகவே இருக்கும். நாம் ஆரம்ப சுகாதார நிலைமைகளை மேம்படுத்த வேண்டிய உடனடி அவசியம் உள்ளதால் நம்முடைய பார்வை இந்தச் செயற்கை நுண்ணறிவைப் பொது மருத்துவச் செயல்பாடுகளுக்கு முதலில் பயன்படுத்த வேண்டுமே அல்லாமல் கணிணி பார்வை உள்ள கதிரி யக்கக் கருவிசார்ந்த மருத்துவச் சிகிச்சைக்காக இருக்கக்கூடாது.

ஆகவே, செயற்கை நுண்ணறிவுச் சூழல் மேம்பாட்டில் முதற்கட்டமாக அரசின் பார்வை மிகவும் அடிப்படையான செயல்பாட்டிற்காக இருக்க வேண்டும்: தகவல்கள், தகவல்களைப் பயன்படுத்துவதில் நன்னெறி நிலைமைகள், பயனாளிகளின் தனிப்பட்டத் தகவல்கள் இரகசியமாக இருத்தல் ஆகியவை பல அரசுகள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்த பங்கேற்பாளர்களின் முக்கியமான கருத்தாக உள்ளது.

மருத்துவ சிகிச்சைத் துறையில் தகவல் ஆளுகைக்கு மிக முழுமை யான பரந்த அளவிலான ஒழுங்குமுறை செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, மிக அத்தியாவசியமான ஒரு சிறு முனைவான சுற்றுசூழலில் துவக்கக் கட்டத்தில் இரண்டு தன்மைகள் முதன்மையாக கவனிக்கப்பட வேண்டும்:

1. தகவல் சேகரிப்பு மற்றும் மேலாண்மை (தரமான தகவல்கள், அவற்றைத் தகுந்தவர்கள் பயன்படுத்துமாறு அமைத்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் கருவிகள் புரிந்து கொள்ளும் தன்மை) மற்றும்

2. தகவல்கள் பரிமாற்றம் (தனிப்பட்ட நோயாளிகளின் தகவல்களின் இரகசியக் காப்பு)

## நன்நெறிகள், விதிகள் மற்றும் ஆளுகை:

உலக சுகாதார அமைப்பின்படி செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளின் ஆறு முக்கிய குறிக்கோள்களாவன:

1. மனித சுய செயல்பாட்டைப் பாதுகாத்தல்
2. மனிதர்களின் நலத்தையும் பாதுகாப்பையும், பொது நலன்களையும் உருவாக்குதல்
3. வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தி விளக்கமளிக்கும் தன்மை
4. பொறுப்புணர்வையும் விளக்கங்கள் அளிப்பதையும் போற்றுதல்
5. சேவைகளை எல்லோருக்குமானதாகவும், சமத்துவமாகவும் வழங்குதல்.
6. பொறுப்பான மற்றும் நிலைத்து நிற்கும் செயற்கை நுண்ணறிவை உருவாக்குதல்.

செயற்கை நுண்ணறிவின் நன்நெறி அடிப்படைகளை

உருவாக்க நிபுணர்கள் கொண்ட நிலைக் குழுக்கள் உதவ வேண்டும்.

**உயிரி நன்நெறிச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வலுப் படுத்தல்:**

உயிரி நன்நெறிச் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டை ஒழுங்காகச் செயல்படுத்த பெரிதும் உதவுகின்றன. சமீப காலங்களில் அறிவியல், மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்துகள் ஆகியவற்றின் செயற்கை நுண்ணறிவு அதிக மாகப் பயன்படுத்தப்படுவதைக் கருத்தில் கொண்டு பல உயிரி நன்நெறிச் சட்டங்கள் திருத்தி யமைக்கப்பட்டுள்ளன.

**ஒழுங்குமுறைத் தேவைகள்:**


புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஆராயும் போது இதில் சம்மந்தப் பட்ட அனைத்துப் பங்குதாரர்களும் உருவாக்குபவர்களும், ஒழுங்கு முறை அமைப்புகளும் ஒன்றாகச் செயல்பட வேண்டும். இந்தச் செயலில் தகவல்களைப் பதிவு செய்தல், அவற்றின் வெளிப்படைத் தன்மை, ஆபத்துகள் மேலாண்மை, இந்த புதிய செயற்கை நுண்ணறிவு எத்தனைக் காலத்திற்குச் செயல்படும், தகவல்களின் தரம், அவற்றை ஆய்வு செய்யும் மருத்துவச் செயலாக்கத்திற்கான உறுதி அளித்தல், சம்மந்தப் பட்டவர்களோடு இணைந்து செயல்படுதல், தகவல்கள் காப்பு ஆகியன முக்கியமாகும்.

**எல்லோரையும் உள்ளடக்கிய சமத்துவத்தை உறுதி செய்தல்:**

உலகெங்கிலுமுள்ள பலதரப் பட்ட மொழிகள் அவற்றை செயற்கை நுண்ணறிவு மூலம் செயல்படுத்தக்கூடிய தன்மைகள், தொடர்பு வடிவமைப்பு ஆகியவை தடங்கலாக அமையாத வண்ணம் இருக்க வேண்டும். புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பங்கள் ஏற்கனவே நாட்டிற் குள்ளும், நாடுகளுக்கிடையேயும் உள்ள மின்மய இடைவெளியை மேலும் விரிவாக்காமல் பார்த்துக் கொள்வது இந்தத்துறை மற்றும் அரசுகளின் பொறுப்பாகும். செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பங்கள் எவற்றையும் சாராமல் பொதுவாக இருக்க வேண்டு ஒரு குறிப்பிட்ட நிலை சார் தொழில்நுட்பம் பெரிய பாதி களை ஏற்படுத்தும். எல்லோரை உள்ளடக்கிய சமத்துவத்திற் எதிர் வினைகளை உருவாக்கு ஏனெனில் அது இயல்பா நடவடிக்கை அல்ல, தன்னிச் யாகச் செயல்படுவது. சமத்துவ தைப் பேணுவது அல்ல.

**சூழ்நிலைகளுக்கேற் பதிலளிக்கவும், நிலைத்து நிற்கு தன்மையும்:**

செயற்கை நுண்ணறிவ தொழில்நுட்பத்தைப் பயன்படுத் ஒரு பொருளை உற்பத்தி செ பவர்கள் எந்த இலக்கிற்கா இந்தச் செயற்கை நுண்ணறி பயன்படுத்தப்படுகிறதோ அ இலக்குகளுக்கு ஏற்ற பயன்கள தருகிறதா என்று தொடர்ந் கண்காணிக்க வேண்டு இந்தியாவும், பிரிட்டனும் இணை ஒரு செயற்கை நுண்ணறிவு சார் மருத்துவக்கருவி உருவாக்கினால் அது மக்களுக் மருத்துவ சிகிச்சை அளிப்பதி பொது நலத்தை உறுதி செ வேண்டும்.



மருத்துவ சிகிச்சை அமைப்பு முறையில் முழுமையாக இணைக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட முடியும் என்ற நிலைமையிலேயே செயற்கை நுண்ணறிவை நாம் பயன்படுத்த முடியும்.

**நன்நெறிச் சவால்கள்:**

1. செயற்கை நுண்ணறிவு தேவையா என்பது அறியப்பட வேண்டும்.
2. செயற்கை நுண்ணறிவும் மின்மய இடைவெளியும்.
3. தகவல் சேகரிப்பு மற்றும் பயன்பாடு தகவல் ஆதிக்கத்தைத் தவிர்த்தல்.
4. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி முடிவுகளை மேற்கொள்வதில் விளக்கும் தன்மையும், பொறுப்புணர்வும்.
5. நோயாளி சிகிச்சையில் மனிதர்களின் அறிவுசார் அணுகுமுறையை விலக்கி வைக்கும் முறையில் செயற்கை நுண்ணறிவுச் செயல்பாடுகள் சுயமாக பொருத்தமாக இயங்க வேண்டும்.
6. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் பாதுகாப்பு மற்றும் வலைதளப் பாதுகாப்பு.
7. மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்துகள் துறையில் வேலை வாய்ப்புகள்.
8. மருத்துவ சிகிச்சையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி வணிகமயமாக்குவதில் உள்ள சவால்கள்.
9. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் ஏற்படக் கூடிய ஒருசார் நிலைமை மற்றும் பாகுபாடு.

**மருத்துவ சிகிச்சையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கான நன்நெறி அணுகுமுறையை உருவாக்கல்:**

புதிய தொழில்நுட்ப வடிவமைப்புகளில் நன்னெறி, வெளிப்படைத் தன்மை நன்நெறி மற்றும் மனித உரிமைத் தரங்களை ஒருங்கிணைப்பதில் ஒரு அணுகுமுறையாக வடிவமைப்புகள், நல்லுணர்வுகள், கண்ணியம், சுதந்திரம், சமத்துவம், ஒன்றிணைதல் ஆகிய தன்மைகள் இருக்கவேண்டும். மனித உரிமைகளுள் உள்ள தார்மீக மற்றும் சமூக நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் இந்தச் செயல்பாடுகள் அனைத்துப் பங்குதாரர்களிடமும் இருக்க வேண்டும்.

**எல்லோரையும் உள்ளடக்கிய தன்மையை உருவாக்க மூன்று அணுகுமுறைகள்:**

1. குடிமக்கள் அறிவியல் – ஆலன் டியுரிங் கழகம் அளித்துள்ள விளக்கத்தின்படி, தொழில்முறையற்ற அறிவியலாளர்கள் அறிவியல் ஆய்வுகளுக்குத் தகவல்கள் அளிப்பதையும், செயல்படுவதையும் உதாரணமாகக் கூறலாம்.

2. இதற்கான மென்பொருள் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் பலதரப்பட்ட நிலைகளில் இருக்க வேண்டும்.

3. விளைவுகளை மதிப்பிடுதல் – வணிகத் திட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் உள்ள தீய விளைவுகளை கண்டறிந்து, புரிந்துகொண்டு, மதிப்பீடு செய்து அவற்றைக் குறைக்க நடவடிக்கை. மருத்துவ சிகிச்சையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் போது தவறான கணித வழிச் செயல்பாடுகளில் (Algorithms) ஏற்படும் தவறுகள், குறைபாடுகள், பாகுபாடுகள் ஆகியவை மக்களை பாதிக்காத வண்ணம் தடுப்பதற்கு கணித வழிப் பொறுப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களை மேற்கொள்ளலாம்.

**கூட்டு முயற்சி:**

மருத்துவ சிகிச்சையில் நல்ல பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூட்டு முயற்சிகள், புதியனவற்றை உருவாக்கி ஏற்கனவே உள்ள தடைகளை நீக்க உதவும்.

**இறுதியாக:**

மருத்துக்கருவிகளில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மேலும் மேம்பட்டு நோய்நிலை கண்டறிதல், நோய் நிலைப் படப்பிடிப்பு, கைப்பேசி கணிணிமயம் மற்றும் உடம்பில் அணியக்கூடிய கருவிகளிலிருந்து மருத்துவக் கணிப்புப் பயன்பாடுகள் ஆகிய புதிய கண்டுபிடிப்புகள் வெகுவாக ஏற்படும். செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதால் மருத்துவக் கருவிகளின் நம்பகத்தன்மை மேலும் பலப்படும். ஆவை கணிப்புகளைத் துல்லியமாகவும், விரைவாகவும் வழங்கும்.

தற்போது வெளியிடப்படும் மிக அதிக எண்ணிக்கையிலான ஆய்வுக் கட்டுரைகளும், வளர்ந்து வரும் மருத்துவப் பயன்பாடுகளும், மருத்துவக் கருவிகளில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மிக நல்ல பலன்களை வழங்கி வருகிறது என்பதை ஒழுங்குமுறையாளர்கள் உணர்ந்து வருகிறார்கள். அரசுகளும், தனியார் நிறுவனங்களும் மருத்துவச் சிகிச்சைகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கு மிகுந்த ஆதரவைக் காட்டி வருவதால் மேலும் பல நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி புதிய மருத்துவக் கருவிகளை உருவாக்குவார்கள்.

**– கே.விஜயேந்திரபாண்டியன்,**
இயக்குநர் தமிழ்நாடு மின் ஆளுகை முகமை, சென்னை.

எதிர்ப்புப் போராட்டக் கலை

# காலனியப் பொது நாடக அரங்குகள்

- சுனித்ரா மித்ரா

நாடகக் கலைஞர்கள் இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க கடந்த காலத்தைச் சித்தரித்ததன் வாயிலாக தேசபக்தி உணர்வை மக்களிடையே ஊட்டியதோடு சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கவும் அவர்களை ஊக்கப்படுத்தினர். கலாச்சார காலனியாக்கம் திணிக்கப்படுவதற்கு மாற்று நடவடிக்கையாக இது இருந்தது. இந்த வகையில் காலனிய பொது நாடக அரங்குகள் தேசிய குணாம்சத்தை பிரதிபலிப்பவையாக மாறின. ஒரு வகையில் பார்த்தால் தேசிய நடத்தையை வடிவமைக்கக் கூடிய நிறுவன மற்றும் நுகர்வு அமைப்பாகவும் அவை இருந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகிய இரண்டு காலனிய தலைநகரங்களில் இந்தியாவின் புரோசீனியம் நாடக அரங்குகள் துவங்கப்பட்டன. 1850களுக்கு முன்பு வரை வங்காள மொழியில் எழுதப்பட்ட நாடகங்கள் கல்கத்தாவின் வசதி நிறைந்த தனியார் நாடக அரங்குகளில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் முன்பு அரங்கேறி வந்தன. 1860கள் முழுவதும் இந்த மேட்டுக்குடியினரின் கட்டுப்பாட்டில் இருந்த நாடக அரங்குகள் சிறந்த நாடகங்கள் பலவற்றை மேடையேற்றின. விதவை மறுமணம், பலதாரமணம், வர்த்தக மற்றும் இன ஒடுக்குமுறை போன்ற தற்கால சமூகப் பிரச்சினைகளை அதிகத் துணிவுடன் இந்த நாடகங்கள் பேசின. இந்த நாடக அரங்குகள் பொதுமக்களின் ஆர்வத்தைத் தூண்டின. இத்தகைய அரங்குகளில் இருந்த கட்டுப்பாட்டு அம்சங்கள் பொது மக்களுக்கான அரங்குகள் உருவாக வழிவகுத்தன. மத்தியதர வர்க்கத்தின் படித்த இளைஞர்களின் உற்சாகத்தாலும், மன



உறுதிப்பாட்டினாலும் இத்தகைய பொது அரங்குகள் கிளைத்து எழுந்தன. இந்தப் புதிய ஊடக மானது இவர்களுக்கு பொழுது போக்கிற்கான நிறைய வாய்ப்புகளை வழங்கியதோடு தங்களது கருத்து களை எடுத்துக் கூறும் வாய்ப்பு களையும் வழங்கின. இந்தப் புதிய பொது அரங்குகள் பரவலான பார்வையாளர்களை உற்சாகப் படுத்தியதோடு தனது உள்ளடக்க மாக பல கருத்துகளுக்கும் முன்னுரிமை அளித்திருந்தன. மதிக்கத்தக்க கலை / நிகழ்த்துக் கலைச் செயலாக சொந்த தன்னாட்சி அந்தஸ்தை இந்தப் பொது அரங்குகள் பெற்ற பிறகு அவை சமூகஅரசியல் சூழலுக்கு எதிர்வினை புரியத் தொடங்கின.

காலனிய அரசு இந்த நாடக அரங்கு போன்ற அமைப்புகளைக் கட்டுப்படுத்த பலவிதமான தந்திரங் களைப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது. "பிரிட்டிஷ் இந்தியாவில் சட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட அரசு மீது எந்தவிதமான அதிருப்தி யையும் ஏற்படுத்தக் கூடிய உணர்வுகள்" எழுகின்ற போக்கைத் தடை செய்வதுவே இந்தக் கட்டுப் பாடுகளின் நோக்கமாகும் அல்லது "நிகழ்த்துக்கலை நடைபெறும் சமயத்தில் பங்கேற்பாளர்களைச் சீர்கெடுக்கும் அல்லது அவர்களது மனநிலையை மாற்றும் வாய்ப்பைத் தடுத்தலும் நோக்கமாகும். நாடகங்களுக்குக் கிடைத்து வரும் புகழானது அரசை அதன் கருத்துச் சித்தரிப்பில் கவனம் செலுத்தச் செய்தது. இந்தச் சித்தரிப்புகள் "ஆபாசம் நிறைந்தவை", "ஒழுக்கநெறி இல்லாதவை" என்று அரசு கூறியதோடு இவை "பொது நலன்களுக்கு மாறானவை" என்று கூறி பொது விருப்பத்திற்கு மாறாக அரசு செயல்பட்டது. இத்தகைய நிலைமைகளைப் பழித்துரைக்கும் நாடகங்களின் நடிகர் அல்லது நாடக அரங்க உரிமையாளர் தண்டனைக்குள்ளாவார் என்றும் அரசு அறிவித்தது "ஒரு மேஜிஸ்ட் ரேட்டிடம் வழக்காகச் சமர்ப்பித்து மூன்று மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது தண்டம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்" என்று அறிவிக்கப் பட்டது. இத்தகைய நிபந்தனைகளை மீறியதாக பாபு பூபன்மோகன் நியோகியின் கிரேட் நேஷனல் நாடகக்குழுவின் மீது குற்றம் சாட்டப்பட்டது. நகைச்சுவை நாடகமான 'காஜாதானந்த் யுவராஜ்' தணிக்கை முறைக்கு ஆட்படுத்தப்பட்டு அந்த நாடகம் நிகழ்த்துவதற்குத் தடைவிதிக்கப் பட்டது ஆட்சிக்கு அளவுக்கதிக மான விசுவாசத்துடன் இருப்பதாக உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஜனதானந்த் முகோபாத்யாய் என்ப வரை ஏளனம் செய்வதாகக் கூறி நாடக அரங்கிற்கு காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கப் படையெடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து சுரேந்திர பினோதினி நாடகம் வக்கிரமும் கொச்சைத்தனமும் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டு அதைக் கட்டுப்படுத்த தணிக்கை முறை கொண்டுவரப்பட்டது. உண்மையில் அந்த நாடகம் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியை வன்புணர் வாளராக சித்தரித்திருந்தது. நடிகர்களில் பெரும்பாலோர் காவல்துறை விசாரணைக்கும், கண்காணிப்புக்கும் ஆளாக்கப் பட்டனர். அந்த ஆண்டின் இறுதி யில் நாடக நிகழ்த்துதல்கள் சட்டம் (1876) கொண்டு வரப்பட்டது. உள்ளார்ந்த அரசியல் செய்திகளை வெளிப்படையாக பொது நாடக அரங்குகளில் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. இந்தச் சட்டம் இந்தியா முழுமை க்கும் நீட்டிக்கப்பட்டது. உள்ளூர் அரசாங்கங்களுக்கு இந்தச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்களின்படி, எந்த ஒரு நாடக நிகழ்வையும் நிறுத்த முடியும்; அதே போன்று எந்த நாடகத்தையும் நிகழ்த்தக் கூடாது என்று தடுக்கவும் பொருள் களைப் பறிமுதல் செய்யவும் முடியும். ஆட்சிக்கு எதிரான கருத்து, ஆபாசம் அல்லது அவதூறு உள்ளது என்று எந்த ஒரு நாடகத்தின் மீதும் குற்றம் சாட்ட முடியும். அடுத்த மூன்று மாதங்களுக்குள்ளேயே, அதே அரசாங்கம் நவம்பர் 1877இல் லார்ட் லிட்டன் மூலம் பிராந்திய மொழி பத்திரிகைச் சட்டம் என்பதைக் கொண்டு வந்தது. இதன் மூலம் நாடக மேடையும் பத்திரிகையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன பின்னர் பத்திரிகைச் சட்டத்தை லார்ட் ரிப்பன் நீக்கிவிட்ட போதிலும் அடுத்த 75 ஆண்டு களுக்கு நாடக நிகழ்த்துதல் சட்டம் தொடர்ந்து அமலில் இருந்தது.

நாடகம் நிகழ்த்துதல் சட்டமானது நேரடி அரசியல் பங்கேற்பை முடிவுக்குக் கொண்டு வந்தது. பெங்காலி பொது நாடக அரங்கில் சிறிதளவே வெளிப்பட்ட அரசியலும் தடுக்கப்பட்டது. அரசியல் எதிர்ப்பு மறைமுகமாக இருந்ததற்காகப் பல நாடகங்கள் தொடர்ச்சியாகத் தடை செய்யப்பட்டன. இதற்குப் பிறகு வர்த்தக ரீதியிலான கம்பெனிகள் தயாரித்து வழங்கிய பெரும்பாலான நாடகங்கள் பெரிதும் பணம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டு இருந்தன நாடகத்தைப்

பார்க்க வரும் பார்வையாளர்களைக் கவரும் வகையில் பொது இடங்களில் விளம்பரங்கள் வைக்கப் பட்டன. கிரிஷ் சந்திரகோஷ் போன்ற இயக்குநர்கள் - தயாரிப் பாளர்களுக்குக் கூட நாடகங்களை வர்த்தக ரீதியில் இலாபம் ஈட்டித் தருபவையாக நடத்துவது மிகப் பெரும் சவாலாக இருந்தது. கோஷின் நாடகங்களில் சமூக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்கள் அதிகம் இருந்தன. உதாரணமாக, ஸ்ரீபாட்சா சிந்தா நாடகத்தில் தீவிர அரசியல் எழுச்சி வேண்டும் என்று கோஷ் வலியுறுத்தி இருந்தார். ஸ்ரீபாட்சா சிந்தா நாடகத்தில் பிரெஞ்ச் புரட்சி குறித்து தான் பேசப்பட்டுள்ளது என நடிகர் உத்பல் தத் கூறினார். இந்த நாடகத்தில் கடவுள்களின் அகிலம் மனித உலகத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. 1890களில் சந்தா என்ற நாடகத்தை எழுதி கோஷ் இயக்கிய போது, அதில் அவர் மீண்டும் புரட்சி மற்றும் அரசியல் சூழ்ச்சியின் கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுதியிருந்தார். இந்த நாடகத்தில், கொடுங்கோல் ஆட்சியை விமர்சிக்கும் தனது திறனை கோஷ் வெளிப்படுத்தினார். இது தான் இந்தியாவின் சூழலைக் கூர்ந்து கவனித்ததில் இருந்து அவர் கற்றுக்கொண்ட பாடமாகும். இவ்வாறு ஒரு வரலாற்று நாடகம் என்ற முறையில் தடைசெய்யப் படுவதில் இருந்து சந்தா தப்பிப் பிழைத்தது.

சுதேசிய இயக்கத்தின் அரசியல் மற்றும் சமூகக் கரிசனங் கள் மிகப் பொருத்தமாக அந்தக் காலகட்டத்தின் நாடகங்களில் பிரதிபலித்தன. நாடகங்கள் அரசியல் இலாபத்துக்காக அந்தக் காலகட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. தணிக்கை முறைச் சட்டங்கள் சொல்வது போன்று நாடகங்களில் வெளிப் படையாக எதிர்ப்புக் கருத்தியல் இல்லை. ஏனைய உட்கருத்துகளில் தேசியவாதமும் தேசபக்தியும் மாறுவேடத்தில் வெளிப்படுத்தப் பட்டன. நாடக ஆசிரியர்கள் வரலாறு மற்றும் தொன்மங்களுக்கு அரசியல் ரீதியான விளக்கங்களை எடுத்துரைத்தனர் சுதேசிய வாழ்க்கை முறையை ஏற்றுக் கொள்ளுமாறு மக்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. வங்காள நாடக அரங்கில் 1905ஆம் ஆண்டு "வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டு" என்று அபரேஷ்சந்திர முகோபாத்யாய் குறிப்பிடுகிறார். இலக்கியத்தில் பங்கிம் சந்திர சட்டோபாத்யாய் மற்றும் நாடகத்தில் கிரிஷ் கோஷ் ஆகியோரின் பங்களிப்புகளை அவர் முக்கியமாக எடுத்துக் காட்டுகிறார். தேசியவாதத்தின் ஆன்மாவை இவர்கள் வலிமை மிக்கப் பொதுக் கருத்தாக மாற்றினார்கள். சிராஜ் உத்தௌலா போன்ற கிரீஷ் கோஷின் நாடகங்கள் 1905இல் மேடையேறுவதற்கு முன்பு காவல்துறையின் அனுமதியைப் பெறுவதற்கு நீளமான மற்றும் கடுமையான தணிக்கை முறைக்கு ஆளாகின. அதே போன்று மீர் காசிம் (1906) மற்றும் சத்ரபதி சிவாஜி (1907), அதே போன்று ஷிரோதி பிரசாத் வித்யாபினோத்தின் பாலாஷிர் பிரயாஷிட்டர் மற்றும் நந்தகுமார் ஆகிய நாடகங்கள் 1905-1907 காலகட்டத்தில் அதிகாரப்பூர்வமாக அனுமதிக்கப் பட்ட வடிவில் முதல் சுற்றாக மேடையேற்றப்பட்டன. இவை ஒவ்வொன்றும் வழக்கமாக இருபத்தைந்து வாரங்கள் நிகழ்த்தப் பட்டன. இந்தக் காலகட்டம் சுதேசிய இயக்கத்தின் ஆரம்ப ஆண்டுகள் ஆகும். சந்தா மற்றும் சத்ரபதி நாடகங்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு முந்தைய கால கட்டத்தில் நடப்பதாக சித்தரிக்கப் பட்டிருந்தன. சிராஜ் உத்தௌலா மற்றும் மீர் காசிம் ஆகிய நாடகங்கள் வங்கத்தில் பிரிட்டிஷ் எவ்வாறு ஆட்சிக்கு வந்தது என நேரடியாகப் பேசின. இந்த நாடகங் கள் அரசால் தடைசெய்யப்படுவதற்கு இந்த வெளிப்படைத் தன்மையே சரியான காரணமாக இருந்தது. கடைசி இரண்டு நாடகங்களில், கோஷ் உருவக உத்தியைப் பயன்படுத்தியிருக்கவில்லை. மாறாக நாடகத்தின் கருத்தே உருவகமாக இருந்தது. வங்கத்தின் கடைசி ஆட்சியாளரான சிராஜ் பிளாசி யுத்தத்தில் எதிரிகளின் வீரத்தால் அல்லாமல் துரோகத்தால் தோல்வியைத் தழுவினார். இதற்கு மாறாக மீர் காசிம் நாடகத்தின் கதையானது கௌரவப் பட்டம் மூலம் அரசாளும் தலைவர் தனது அரசாட்சி அழிக்கப்படுவதைத் தடுத்துக் காப்பதைக் குறித்துப் பேசுகின்றது. இரண்டு நாடகங் களும் வரலாற்றை மிகத் துல்லிய மாகவும் தேசபக்தி உணர்வுடனும் சித்தரித்தன. பிரிட்டிஷ் நிர்வாகத் தால் இவற்றை எளிதில் புறக்கணித்து விட முடியவில்லை. ஒரு புதிய தேசிய பிரபலமான நாடகக் கதைச்சொல்லல் மரபின் தயாரிப் பாளர் நாடக ஆசிரியராக கிரீஷ் கோஷ் உருவானார். கிரீஷ் கோஷ் மற்றும் அவரது காலத்திய நாடக ஆசிரியர்கள், மக்களின் உணர்வு களைத் தட்டி எழுப்பும் வகையில் நாடகப் பிரதியில் புகழ்வாய்ந்த சொல் அலங்காரங்களைப் பயன் படுத்தினர். இந்த வகையில்,

இவர்கள் பாரம்பரியமான ஜாத்ரா வகைமையில் இருந்து உத்திகளை கவனமுடன் கடன் வாங்கிப் பயன்படுத்தினர்.

சிராஜ் உத்தௌலா நாடகத்தின் வெற்றியானது மினர்வா நாடக அரங்கின் தொய்வான நிலையை தலைகீழாக மாற்றியது. நாடக அரங்க நிர்வாகத்தினர் அத்தகைய நாடகக் கருத்துகளின் பிரபல்யத்தைப் பாராட்டினர். கூடுதலான வருவாய் ஈட்டுவதற்காக இதே விதமான உள்ளடக்கத்துடன் நாடகங்களை அரங்கேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர்கள். ஸ்டார், எமரால்டு, கிளாஸிக் போன்ற நகரத்தின் முன்னணி நாடகக் கம்பெனிகள் இத்தகைய நாடகங்கள் உருவாக்கிய பிரபல் யமான மற்றும் சாதகமான சூழலை தங்களுக்குச் சாதகமாக முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டன. இதன் தொடர்ச்சியாக, அத்தகைய நாடகங்கள் அதிக அளவில் நிகழ்த்தப்பட்டன. தொன்மக் கதை அடிப்படையிலான நாடகங்களுக்குப் பதிலாக வரலாற்றின் பாத்திரங்கள் மூலம் தெளிவான வரலாற்றுச் சம்பவங் களைச் சித்தரி க்கும் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. இத்தகைய நாடகங்கள் நாடகக் கம்பெனி களின் நிதி ஆதாரத்தை நிச்சய மாக வலுப்படுத்திய அதே சமயத்தில், இந்த நாடகங்களின் நம்பகத்தன்மை மற்றும் தரம் ஆகியன தொடர்ச்சியாக சீர்கேடு அடைந்தன. வரலாற்று நாடகங் களின் முக்கிய அம்சங்களாக கிளர்ச்சி ஊட்டுதல் மற்றும் கவன ஈர்ப்பு உத்திகளைப் பயன்படுத்துதல் ஆகியன மாறின. மலிவான இயக்குநர்கள் மற்றும் நாடக அரங்க நிர்வாகிகளும் இத்தகைய நாடகங்களில் நாடு முழுவதும் பரவி இருந்த இந்த உணர்ச்சிமயக் கருத்தை பயன்படுத்தி இலாபம் ஈட்டின. அதன் மூலம் தேசியவாதம் என்ற ஈர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். அதாவது உணர்ச்சி மயமாதலை விற்கக்கூடிய சரக்குப் பண்டமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்று விமர்ச்சிக் கிறார் அபரேஷ்சந்திரா.

விரைவில் வெற்றி காணவும், பிரபலமாகவும் எளிய பாதையாக நாடகக் கம்பெனிகள் வரலாற்றுக் கதைக்கருக்களை அப்படியே தழுவி நாடகங்களைத் தயாரித்தன. மேபர்பாடன் அல்லது மேவாரின் வீழ்ச்சி போன்ற திவிஜேந்திரலால் ரேயின் பிற்கால நாடகங்கள் முகலாயர் ராஜபுத்திரர் மோதல்கள் தொடர்ந்து இருந்து வந்த சூழலி லும் அனைவருக்கும் பொதுவான சகோதரத்துவம் என்ற கருத்தை முன்வைத்தன. மற்றொரு நாடக மான ராணா பிரதாப் சிங் என்பதுவும் கூட இதே கருத்தையே தொட்டுக்காட்டியது வர்த்தக ரீதியாகவும் இந்த நாடகங்கள் வெற்றி பெற்றவையாக அமைந்தன. பார்வையாளர்களின் ரசனை மற்றும் முன்னுரிமைகளைக் கருத்தில் கொண்டு இந்த நாடகங் களில் பல சமரசங்கள் செய்யப் பட்டிருந்தன என்பதையும் மறுக்க இயலாது.

கிஷோர் பிரசாத் வித்யா பினோத்தின் புரோட்டாபடிட்யா என்ற நாடகத்தைச் சுட்டிக்காட்டா விட்டால் வரலாற்று நாடகங்களைச் சித்தரிப்பதில் எழுந்த போட்டியை குறித்து எடுத்துரைப்பது நிறைவு பெறாது. இந்த நாடகத்தை முதன் முதலில் சனிக்கிழமை 15 ஆகஸ்ட் 1803 அன்று ஸ்டார் தியேட்டர் அரங்கேற்றியது இந்த வகைமை யில் அமைந்த மற்றொரு நாடக மான சத்ரபதி என்ற நாடகம் தொடர்ந்து மேடையேற்றப்பட்டது இவை மக்களின் ஆர்வத்தைத் தூண்டியதோடு நாடகக் குழுக் களுக்கு இடையில் போட்டி மனப்பான்மையையும் ஏற்படுத்தின. சத்ரபதி நாடகத்தை கிரீஷ் கோஷ் எழுதி இயக்கியிருந்தார். இந்த நாடகம் 15 செப்டம்பர் 1907இல் மேடையேறியது. இந்த நாடகத்தில் டானிபாபு என்ற நடிகர் சத்ரபதியாக நடித்து இருந்தார். முதன்மைப் பாத்திரத்தில் அமரேந்திரநாத் தானே நடித்து மினர்வாவில் நாடக த்தை அரங்கேற்றினார். ஒரே கதாபாத்திரத்தை மிக முக்கியமான இரண்டு நடிகர்கள் பங்கேற்று தனித்தனியாக நடித்தது என்பது பார்வையாளர்களிடம் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

பார்வையாளர்களை ஈர்ப் பதற்கு தேசியவாதம் திறன்மிக்க வழிமுறையாகப் பயன்பட்டது. உள்ளூர் கால்பந்தாட்டக் குழு வானது அடிமைப்படுத்திய குழுவை போட்டியில் வெற்றி பெற்ற சம்பவத்தை, நாடகம் வெற்றிகரமாக நிகழ்ந்து கொண்டி ருப்பதை அறிவிப்பதற்கு விளம்பர மாகப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டது. இதன் மூலம் நாடகத்து க்கான ஈர்ப்பு அதிகரித்தது. இந்த நாடகம் கிரேட் நேஷனல் தியேட்டரில் மேடையேறிய "பாஜிராவ்" ஆகும். பாஜிராவ் மராத்தா பேஷ்வா ஆவார். இந்தத் தியேட்டர் கம்பெனி பிறகு அமரேந் திரநாத் தத்தா அரவணைப்பில் இயங்கி வந்தது.

தொன்மக் கதைகளை உள்ளடக்கமாகக் கொண்ட நாடகங்கள் பெருவழக்காக இருந்த போது, இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் பத்தாண்டில் இருந்து சமூகத்தைப் படிப்படியாகத் தன்னுள் இணைத்து வந்த தீவிர சமயப்பற்றானது நாடக மேடையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 1930களின் ஊசலாட்ட வளர்ச்சியானது நாடக ஆசிரியர்களுக்குப் புதிய காலகட்டத்தின் ஆரம்பமாக அமைந்தது. அவர்கள் சமூகபொருளாதார கதைக்கருக்களுக்குத் திரும்ப ஆரம்பித்துவிட்டனர். தொன்மக்கதைகளில் இருந்து ஆழமான நிதர்சனமான கதைகளுக்கு மாறுகின்ற இடைமாற்றமானது வெற்றிபெற சிறிது காலம் பிடித்தது. புராணக் கதைகளைத் தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றுவதற்கு மேற்கொண்ட திருப்பத்துக்கான அங்கீகாரம் மன்மத ரேவுக்குச் சென்று சேரும். திவிஜேந்திரலால் ராய் மற்றும் க்ஷிரோத் பிரசாத் வித்யாபினோத் ஆகியோரின் நாடகங்களில் வெளிப்பட்ட மனிதநேயம், பகுத்தறிவு ஆகிய சிந்தனைகள் மன்மத ரேயின் நாடகங்களில் புதிய வெளிப்பாட்டைப் பெற்றன. இதனோடு இணைந்த மற்றொரு முக்கிய அம்சம் எதுவெனில் அவர் உளவியல் பரிமாணத்திற்குக் கொடுத்த அழுத்தமே ஆகும். பல்வேறு வகையான ஏமாற்றங்களில் இருந்து எழுந்த காலகட்டத்தை அதிதீவிரமான முரண்களும் குழப்பங்களும் சித்தரித்தன. அத்தகைய நாடகங்கில் தேபாசூர் என்பதும் ஒன்று. வலுவான தொன்மம் சார்ந்த கதையை இது அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் தற்போதைய சூழலுக்குப் பொருத்தமான மையக் கருத்தையும் பிரத்யேகமாக வெளிப்படுத்தியது. பாதிக்கப்பட்டவர்களின் எதிர்ப்புக் குரல் நாடகத்தில் ஒலிக்க இடம் இருந்தது. பாதிக்கப்பட்ட நபரான தேபாசூர் என்ற கதாபாத்திரம் அதிகப்படியான அரசியல் கீழ்ப்படிதலை எதிர்க்கும் குரலும் நாடகத்தில் இருந்தது. வழக்கமாக ஒரு தொன்மக் கதையைச் சித்தரிக்கும் நாடகம் எப்படிக் கதையைச் சொல்லுமோ அதற்கு எதிராக இந்த நாடகம் இருந்தது. இந்த மாற்றமானது கரஹார் (சிறை) என்ற நாடகத்தில் தெளிவாக வெளிப்பட்டது. இந்த நாடகம் அரசன் சன்சாவின் சிறையில் கிருஷ்ணர் பிறந்ததை பற்றிப் பேசுகிறது. ஒட்டுமொத்த நாடே ஒத்துழையாமை இயக்கத் தின் கொந்தளிப்பில் இருந்த 1930இல் இந்த நாடகம் மேடை யேற்றப்பட்டது. ஒடுக்குகின்ற பிரிட்டிஷ் அரசாக கன்சாவும் அகிம்சை வழியில் மக்களின் போராட்டத்தை வழிநடத்துபவராக வாசுதேவரும் நாடகத்தில் சித்தரிக்கப்பட்டனர்.

கதாபாத்திரங்களை தேசியவாத உணர்ச்சி உள்ளவர்களாகச் சித்தரிப்பது என்பதை சச்சிந்திரநாத் சென்னின் கைரிக்பட்டக (காவிக் கொடி) என்ற நாடகத்தில் பார்க்கலாம். மனோமோகன் தியேட்டரின் பிரபோத்சந்திர குஹா காவல்துறையுடன் தனக்குள்ள உறவு மற்றும் தொடர்பால் சில இரவுகளுக்கு அந்த நாடகத்தை அரங்கேற்றாமல் தடுத்தார். சில வாரங்களுக்குப் பிறகு, அரசுடன் நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் நாடகத்தின் மீதான தடை நீக்கப்பட்டு இருப்பதாகவும் ஒரு விளம்பரம் அறிவிப்பு செய்து இருந்தது. நாடகம் நடப்பது மீண்டும் தொடங்கியது. நாடகத்தைப் பார்க்க இதுவரையில் இல்லாத அளவிற்கு கூட்டம் கூடியது. தற்கால அரசியல் சம்பவங்கள் மற்றும் காந்திய அரசியல் குறித்த நாடகங்கள் மேலும் பல தயாரிக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டன. பார்வையாளர்களிடம் அவை கலவையான உணர்ச்சித் தாக்கங்களை ஏற்படுத்தின. இவ்வாறாக பொது மக்களுக்கான பிரபலமான நாடகமானது இந்தியாவில் அரசியல் பரிமாணத்தைப் பெற்றது இந்தப் போக்கு 1940களிலும் அதைத் தொடர்ந்து சுதந்திரத்திற்குப் பிறகும் வலுவடைந்தது. ஒரிஜனல் நாடகத்திற்கு விதிக்கப்பட்ட தடையால் அந்த நாடகம் பரப்பிய கருத்துகளை அந்தத் தடையாணையால் தடுக்க முடியவில்லை.

பொதுமக்களுக்கான நாடக அரங்கில் நாடகத்தைத் தடை செய்தல் மற்றும் அரசின் தண்டனை ஆகியவை இருந்த போதிலும் கூட வெற்றிகரமான ஒரு நாடகத்தை அதன் அச்சுப் பிரதியில் இருந்து உள்ளூர் நாடகக்குழுக்களும் அமெச்சூர் ஆர்வலர்களும் மாவட்ட நகரங்களிலும் மற்றும் கிராமங்களிலும் கூட நடத்தினர். பொதுக் கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் நிலச்சுவான்தாரர்களின் தனியார் மாளிகைகள் என நாடகம் நிகழ்த்தும் இடங்களை கட்டிடங்கள், திறந்தவெளிகள் என மாற்றிக் கொண்டே இருந்தனர். மற்றொரு பிரச்சினை எதுவனில் பிரிட்டிஷ் அதிகாரிகள் சுட்டிக்காட்டிய "வாய்ப்பூட்டு" என்பதுவே ஆகும். நடிகர்கள் எழுதப்பட்ட உரையாடல் பிரதியில்

இல்லாத வசனங்களை இடைச் செருகலாகச் சேர்த்து தானாகவே பேசுவார்கள் நாடக நிகழ்த்துதலின் போது காவல்துறையினர் திடீர் வருகை புரிவது போதுமான தடுப்பு நடவடிக்கையாக இருக்கவில்லை. பொதுநாடக மேடையில் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு எதிரான தேசியவாத எதிர்ப்புணர்வு என்ற கருத்தை நாடகங்கள் வெற்றிகரமாக முன்வைத்தன. அவ்வாறாக தவிர்க்க இயலாமல் காலனிய இந்தியாவின் அரசியல் மேடையாக நாடக அரங்கு மாறியது.

அரங்கக் கலையின் சமூக நோக்கத்திற்காக தேசியவாதம் என்பது ஒரு மையக்கருத்தாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது அரங்கக் கலையின் பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்தியதாக இந்த நோக்கம் இருந்ததோடு மேடை நாடக ஆக்கத்துக்காக வேறுவிதமான மையக்கருத்துகள் அதிகம் கிடைக்காத அந்தக் காலகட்டத்தில் தேசியவாதத்தைப் பிரபலமாக்கவும் பயன்பட்டது. வர்த்தக நாடகக் கம்பெனிகள் தேசியவாதக் கொள்கை / கருத்தியலை அதிக அளவிலான மற்றும் அடையாளம் தெரியாத பார்வையாளர்கள் பார்க்கும்படி செய்தன. ஒரு கருத்தியலாக தேசியவாதம் உயர்குடி காங்கிரஸ் கட்சியின் மேன்மைக் கலாச்சாரத்தில் இருந்தும் கூட்டமைப்புகள் மற்றும் உயர்குடிப் பார்வையாளர்களிடம் இருந்தும் பிரித்தெடுக்கப்பட்டது. அனுமதிக் கட்டணம் செலுத்தும் எந்த ஒரு குடிமகனுக்கும் பொதுவானதாகவும் அணுக முடிந்ததாகவும் தேசியவாதம் மாற்றத்திற்கு ஆளானது. வரலாற்றுச் சாட்சியம் என்பதை விடவும் மேடை நாடகமானது வரலாற்றை தேசியவாதத்தை வளர்க்கப் பயன்படுத்திக் கொண்டது. இந்த மேடை நாடகத்தின் பொதுப் பார்வையாளர்கள் சமமானவர்களாகக் கருதப்பட்டனர். அந்தஸ்து, குடும்பம் ஆகியவற்றின் பிரத்யேக குணாம்சங்களை ஒதுக்கிவிட்டும் தனிநபர் ஆளுமை அடையாளம் இல்லாமலும் பார்வையாளர்கள் அனைவரும் சமமாகக் கருதப்பட்டனர். புதிய தொழில்நுட்பங்களின் அழகியல் புரட்சியை இந்தப் புதிய அரங்கக்கலை உருவாக்கியது. தேசியவாத புனைவுகளின் வரலாற்றை எழுதும் வரலாறாக நாடக நிகழ்வை இத்தகைய அரங்குகள் நிறுவனமயமாக்கின.

ராகேஷ் சாலமன் சுட்டிக் காட்டுவது போன்று, வரலாறு மற்றும் புராணக் கதைக் கருக்களையும் கதை மாந்தர்களையும் பார்வையாளர்கள் உணர்வுரீதியாக தெரிந்து வைத்திருந்ததால் நாடகவியலாளர்கள் இத்தகையக் கருத்துகளைப் பயன்படுத்திக் கொண்டனர். இதன் காரணமாக கூட்டு அர்த்தங்கள், இணைவுச் சேர்க்கைகள், ஒத்திசைவு ஆகியவை குறித்த விழிப்புணர்வு பார்வையாளர்களுக்கு ஏற்பட்டது. அத்தகைய சமிக்ஞை வாயிலான அர்த்த மூலங்கள், மறைமுகமான மற்றும் இரகசியமான தொடர்பியலுக்கு உதவிகரமாக இருந்தன அதே அளவு முக்கியத்துவத்துடன் பார்வையாளர்கள் வரலாறு, தொல்கதை, புராணம் அல்லது மதக் காவியங்கள் ஆகியவற்றின் நாயகப் பாத்திரங்களை விரும்பி உயர்வாக மதித்தனர். அத்தகைய அணுகுமுறை இருந்த காரணத்தால், இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் நாடக ஆசிரியர்கள் தங்களது நாயக கதாபாத்திரங்கள் மறைமுகமான அரசியல் உரைகளை நிகழ்த்தச் செய்தனர். இது மதரீதியான அனுமதி மற்றும் அவசரம் என்பதாக நிகழ்ந்தது. இத்தகைய கதைகள் எல்லாக் காலத்திலும் நாடக அரங்குகளுக்கு மக்கள் திரளை வரச் செய்தன. இறுதியாக, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியில், இந்தியாவின் காவியமான கடந்த காலத்தைச் சித்தரித்ததன் மூலமாகவே நாடகவியலாளர்கள் தேசபக்தியைத் தட்டி எழுப்பினர்; கலாச்சார காலனியாக்கத்திற்கு மாற்று நடவடிக்கையாக இதை முன்வைத்தனர். இந்த வகையில் காலனியப் பொதுமக்கள் அரங்கு, தேசிய குணாம்சத்தை பிரதிபலிப்பதாக மாறி இருந்தது. ஒருவகையில் பார்த்தால், தேசிய நடத்தையை மாதிரியாக முன்வைக்கும் அமைப்பு ஒழுங்காகவும் அதையே நுகர்வாக மாற்றும் அமைப்பாகவும் இந்த பொதுமக்கள் அரங்கு இருந்தது. அரசியல், சமூகம் மற்றும் கலாச்சார அடையாளத்தின் ஒவ்வொரு புத்தாக்கச் செயல்பாட்டையும் சட்டரீதியானதாக்க "மரபு" என்பது முனைப்புக் கருத்தாகப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறாக வரலாறு என்பது விரும்பத்தக்க நட்புறவாக மாறியது. அரசியல் அல்லது பொருளாதார நலன்களுக்காக சமுதாயக் கண்ணோட்டத்தை தமக்கு ஏற்ற வகையில் மறுசீரமைக்க விரும்புபவர்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகவும் இது இருக்கிறது.

---

– டாக்டர் சுனித்ரா மித்ரா,
கொல்கத்தா, ஆர்.கே.எஸ்.எம். விவேகானந்தா வித்யாபவனில் வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர்.

# பெண்களின் சமகால எழுத்துக்கள்

- கரிமா ஸ்ரீவத்சவா


மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு சிறந்த வழி அவர்களோடு அவர்களின் மொழியில் தொடர்பு கொள்வதே என்று சமூக சீர்திருத்தவாதிகள் கருதுவார்கள். சுதந்திரப் போராட்ட இயக்கக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டில் 'பெண்கள் பிரச்சினை' பெரிதும் பேசப்பட்டது. பல நிலைகளில் அரசியலும், ஆண் பெண் நிலைமைகளும் கலந்தே பார்க்கப்பட்டன. காலனி ஆதிக்க மக்கள் மற்றும் மேற்கத்திய மக்களின் வாழ்க்கை முறைக்கும் இந்திய பெண்களின் வாழ்க்கை முறைக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அதுவே பல எழுத்தாளர்களின் கருத்து மோதல்களுக்கும், போராட்டங்களுக்கும் அடிப்படையாக இருந்தன.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், பெண்களுக்குத் தேவையான அளவு கல்வி கிடைப்பதில்லை என்று அப்போதைய அறிவு ஜீவிகள் கருதினார்கள். இந்த நிலைமையில் சில வேறுபாடுகளும் இருந்தன. உதாரணமாக, பாங்கியே மகிளா என்ற படைப்பின் முன்னுரையில் தாரகாந்த் விஷ்வாஸ் இப்படி குறிப்பிட்டார். 'பெண்கள் படிப்பதற்கோ, கணவர்கள் தங்கள் மனைவிகளுக்குப் படிக்கக் கொடுப்பதற்கோ சில புத்தகங்களே உள்ளன'. இந்து மகளிரின் வாழ்க்கை என்ற புத்தகத்தில் ரமாபாய் அமெரிக்க வாசிப்பாளர்களுக்கு ஒரு அழைப்பை விடுத்தார், 'இந்தப் புத்தகத்தைப் படிக்கும் எல்லோரும் இந்திய மகளிரைப் பற்றி சற்றே யோசியுங்கள், விழித்தெழுங்கள், வாழ்க்கை முழுவதுமான அடிமைத்தனத்திலிருந்தும், அரக்கத்தனமான கொடுமையிலிருந்தும் அவர்களை விடுவிக்க வாருங்கள். நீங்கள் வருவீர்கள் அல்லவா? நண்பர்களே நல்லெண்ணம் கொண்டவர்களே, கற்றவர்களே, கருணை உள்ளம் கொண்டவர்களே. இதில் பற்றுள்ளவர்களும், சகோதர, சகோதரிகள் மீது பரிவு உள்ளவர்களும், இந்திய மகளின் அழுகுரலைக் கேளுங்கள், அது எவ்வளவு மெல்லியதாக இருந்தாலும்.

பெண்களின் சுயசரிதங்களை ஆராயும் போது, அதில் முன்னிலையில் நாம் காண்பது அவர்களின் சமூகம், உறவுகள், கவலைகள், வேதனைகள். பாலினப் பாகுபாடுகள் மற்றும் உளவியல் சார்ந்த மொழி வெளிப்பாடுகள். சமீப காலங்களில் பெண்களின் எழுத்துக்கள் ஆழ்ந்த ஆய்வுக்கு உட்பட வேண்டிய அவசியம் தென்படுகிறது. நம்முடைய பண்பாட்டுச் சரித்திரத்தில் உள்ள இடைவெளிகளையும் அது காட்டுகிறது.

1920களில் இந்தியாவில் படித்தக் குடும்பத்து இஸ்லாமியப் பெண்கள் ஆங்கிலம் படிக்கத் துவங்கினர். இந்தப் புதிய கல்வி சகாப்தத்தால் முகமது பேகம், நஜர் சாஜத் ஹைதர் மற்றும் அபாசி பேகம் போன்ற கல்வி அறிவு பெற்ற பெண்கள் தோன்றி, அவர்களுடைய எழுத்துப் படைப்புக்களை இதழ்களில் பதிப்பித்தார்கள். அவர்களின் கட்டுரைகள், கடிதங்கள், நாட்குறிப்புகள், கவிதைகள் மற்றும் பயணக் கட்டுரைகளைப் படிக்கும் போது, இதுவரை கவனிப்பாரற்ற மகளிரின், அவர்கள் கால நிகழ்வுகள் மற்றும் சமுதாயத்தின் பார்வைகளையும் தனிப்பட்ட அனுபவங்களையும் நம்மால் பார்க்க முடிந்தது.

போபால் நகரின் பேகம் சுல்தான் ஜஹானின் சுயசரிதை உருது மொழியிலும், ஆங்கிலத்திலும் மூன்று தொகுப்புகளாக வெளியிடப்பட்டன. அதைப் படிக்கும் போது, அப்போதிருந்த காலனி ஆதிக்கம், தேசிய சிந்தனையின் வளர்ச்சி மற்றும் சமூகஆன்மீக சீர்திருத்த இயக்கங்கள் பற்றிய கருத்துக்களுக்கும் இவர்களுடைய கருத்துக்களுக்கு மிடையே இருந்த முரண்பாடுகளைக் காண முடிந்தது. பேகம் ஜஹான் போபால் மாநிலத்தின் சுல்தானாக 1901 முதல் 1926 வரை ஆட்சி செய்தார். மேற்கத்திய நாகரிகத் திற்கு பதிலாக அவர் இஸ்லாமிய பழக்க வழக்கங்களை அறிமுகப் படுத்தினார். குறிப்பாக அப்போதைய போபால் மாநிலத்தில் ஆண் பெண்கள் தங்கள் சுயசரிதைகளை எழுதினார்கள். இந்தப் படித்



பெண்கள் தங்கள் நிலைகளைப் பலவகையாக வெளிப்படுத்தினர். 1838 முதல் 1901 வரை வாழ்ந்த ஷாஜகான் பேகம் தேசிக்-உன் -நிஸ்வானோ -தர்பியத்-உல் -இன்சான் என்ற புத்தகத்தில் பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று போதித்தார். பாகிஸ்தான் உருவானதற்குப் பிறகு, துடிப்பாக சுயசரிதைகள் எழுதிய பெண்களின் கருத்துக் களை நாம் பல நிலைகளில் காணலாம், அதாவது, நாட்டின் பிரிவினைக்குப் பிறகான காலகட்ட சரித்திரம் மற்றும் பண்பாட்டுச் சூழ்நிலை பற்றி அவர்களின் கருத்துக்கள் என்ன? பாலின நிலைமைகளில் அவர்களுடைய எண்ணங்களும், ஈடுபாடும் எப்படிப் பட்டவை என்பனவாகும்.

பேகம், அனீஸ்கித்வாய் (1906 –1982) அவர்களின் படைப்பான குபர்ஏகர்வான் 1983இல் தில்லியின் மத்தப்ஏஜாமியா பதிப்பகத்தால் உருது மொழியில் வெளியிடப்பட்டது. உத்திரப்பிரதேச மாநிலத்தின் பாராபாங்கியில் வசித்த அனீஸ் விடுதலையின் நிழல்கள் என்ற தலைப்பில் எழுதிய நினைவுக் கட்டுரையில் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்டக் கலவரங்களைப் பற்றிய நிகழ்வு களையும், அகதிகளின் பிரச்சினை களைப் பற்றிய தன்னுடைய நேரடி அனுபவங்களையும் விவரித்தார். குபர்ஏகர்வான் மற்றும் விடுதலை யின் நிழல்கள் என்ற படைப்புகள் பெண்களின் படைப்பாற்றலின் ஒரு மாதிரியாக நாம் கருதலாம். இந்தியாவின் பிரிவினை ஏற்பட்ட கால அரசியல் சூழலில் ஏற்பட்ட பல மாற்றங்களை அவர் குறிப் பிடுகிறார். பிரிவினை ஏற்படுவதற்கு முன்பும், பிறகும் காணப்பட்ட சமூக அரசியல் நிலைமைகளை அனீஸ் ஆராய்கிறார். அதே சமயம் தான் ஒரு இஸ்லாமியராக இருப்பதால் கல்வி கற்கவும், தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், அவர் தம் குடும்பத்தை நம்பியிருப்பதாக கூறுகிறார். அவர், பெண்ணாக இருப்பதால் ஏற்பட்ட சமூக மற்றும் குடும்ப அழுத்தங்கள் மட்டுமல்லாமல், அரசியல் மற்றும் தணிக்கை முறைகள் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தியா விடுதலை அடைந்த காலகட்டத்தில் இந்திய பாகிஸ்தான் நிலைமைகளின் ஒரு பெண்ணின் முதன்முதலான கண்ணோட்டமாக அவரின் படைப்பை நாம் காணலாம்.

பர்தாவிலிருந்து நாடாளு மன்றம் வரை என்ற புத்தகத்தில் பேகம் குட்சியாஅய்சாஸ் ரசூல் (பிறப்பு 1908) எழுதிய சுயசரிதையில் அரசியல் ஆர்வமிக்க இவர், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் அதிகாரங் களை தன் அனுபவங்களாகக் குறிப்பிட்டிருக்கிறார். குட்சியா

இந்திய அரசியலமைப்பு சபையில் இடம் பெற்ற ஒரு இஸ்லாமியப் பெண் உறுப்பினர் ஆவார். அந்த உயரிய பதவியை வகித்த முதலாவது இஸ்லாமியப் பெண்ணாக அவர் கருதப்படுகிறார். அவருடைய சுயசரிதை மிகவும் மகத்தானது. ஏனெனில் ஆண் வர்க்க சமுதாயத்தில் அறிவாற்றல் மிகுந்த பெண்களின் அனுபவத்தை சமூகம் பயன்படுத்துவதும் அவர்களுக்கு தலைமைப் பொறுப்புக்களைக் கொடுப்பதும் மிகவும் குறைவே.

இந்தியா விடுதலை பெற்றதற்குப் பின் வெளியிடப்பட்ட பெண்களின் சுயசரிதைகள் அவர்களுடைய எழுத்தாற்றலைப் பிரதிபலிக்கின்றன. சமூகம் பெண்களை எப்படிக் கருதுகிறது? சமூகத்தை பெண்கள் எப்படிப் பார்க்கிறார்கள், அவர்களைச் சுற்றி நிகழும் சமூக அரசியல் மாற்றங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவை விவரிக்கின்றன. பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்த பெண்களின் சுயசரிதைகளில் சமூக மறுமலர்ச்சியும், பெண்களின் விடுதலை வேட்கையும் தெரிகின்றன. அவர்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ளும் முயற்சியிலும், சமுதாயத்தில் தங்களுக்கான ஒரு அடையாளத்தைக் காணவும் விழைந்தனர். இவர்களின் சுய அனுபவங்களை நாம் பார்க்கும் போது, மகளிருக்குள்ளே இருந்த பலவகையான முரண்பாட்டுப் போராட்டங்களைக் காண முடிகிறது. சமுதாயத்தில் அவர்களுடைய நிலைமை, குடும்பத்தில் அவர்களுடைய நிலைமை, அவர்களுடைய பார்வையிலேயே அவர்களுடைய நிலைமை மற்றும் அவர்களுடைய தனித்தன்மையிலுள்ள முரண்பாடுகள் ஆகியன. ஒரு பெண் ஏன் சுயசரிதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? இவர்களின் சுயசரிதைகளைப் படிக்கும் போது, அவர்களின் இலக்கிய வெளிப்பாட்டை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது தனிப்பட்ட வாழ்க்கையையும், பொது வாழ்க்கையையும், சுய அனுபவங்களையும் கலந்தளிக்கும் பாங்கு. இந்தச் சுயசரிதைகள் காலனி ஆதிக்கக் காலத்தையும், அதற்குப் பிந்தைய காலத்தையும் நாம் சரித்திரப்பூர்வமாகக் காண உதவி செய்யும். நாட்டின் பிரிவினையும், அதன் பிறகு ஏற்பட்ட பெருமளவிலான இடமாற்றங்களும் அவர்களுக்கு ஒரு முதிர்ச்சியைத் தந்துள்ளன. அவர்களுடைய அனுபவங்களை வைத்து, கதாபாத்திரங்களை உருவாக்க முடிந்து. அவர்களுடைய சுயசரிதை எழுத்துக்களை நாம் ஆராயும் போது, அவர்கள் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் கலப்பதற்கு செய்யும் முயற்சிகளையும் சரித்திரத்தில் பங்கு பெறும் முக்கிய பாத்திரங்களாக திகழ்கிறார்கள்.

**– டாக்டர். கரிமா ஸ்ரீவத்சவா,**
புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகளுக்கான மையத்தில் பேராசிரியர்.

## விடுதலை வீரர்கள்



**விஸ்வநாத் தாஸ்**



**என்.ஜி.இராமசாமி**



**சர்தார் வேதரத்னம்**



**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்**

# கிராமசபை: கோட்பாடும் களமும்

- க.பழனித்துரை

‘கிராமசபை’ என்பது அரசமைப்புச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மக்கள் ஆளுகை மன்றமாகும். பிரதிநிதித்துவ மக்களாட்சியிலிருந்து பங்கேற்பு மக்களாட்சி என்ற நிலைக்கு இந்திய மக்களாட்சியின் தன்மையை மாற்றியமைக்க வந்த ஒரு அற்புதமான வாய்ப்பு இது. மக்களாட்சியை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்ய வந்த ஒரு அமைப்பு இந்த கிராமசபை. சமூக சமத்துவம் பழக கிராமசபை ஒரு மிகப்பெரிய கருவி. கிராமசபை பற்றிய இந்தப் புரிதல்தான் மிகப்பெரிய மாற்றங்களை சமூகத்தில் கொண்டுவரும். உலகில் மக்கள் மேம்பட வாய்ப்புக்கள் வந்த வண்ணம் தான் இருக்கின்றன. ஆனால் அந்த வாய்ப்புக்களை பயன்படுத்தும் திறனில், தன்மையில் ஆகச் சிறந்தவர்களாக மக்கள் செயல்பட்டால் மிகச்சிறந்த பயன்களைப் பெற்றிட முடியும்.

புதிதாக உருவாகும் வாய்ப்பின் ஆழ அகலங்கள் என்னவென்று அறிந்து அவற்றை பயன்படுத்தும் முறைமைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு விட்டால், அந்த வாய்ப்பு எதற்காக உருவாக்கப்பட்டதோ அதனை சாதித்து வரலாறு படைத்து விடலாம். மிகப்பெரிய மாற்றங்களை மக்களின் சிந்தனையிலும், நடத்தையிலும், செயல்பாடுகளிலும் கொண்டுவரும் ஆற்றல்படைத்த புதிய வாய்ப்புத் தான் இந்த கிராமசபை. இதை எந்த அளவுக்கு விசாலமாகப் புரிந்துகொண்டு செயல்படுகிறோமோ அந்த அளவுக்கு அது நல்ல விளைவுகளை சமூகத்திற்கு தந்திடும்.



சுதந்திரம் அடைந்த பிறகு நடந்த ஆட்சிகளினால் கொண்டு வரப்பட்ட சட்டங்களாலும் திட்டங்களாலும் பயன்களை பெறமுடியாமல், விளிம்பு நிலையில் நின்ற மக்களுக்கு வாழ்க்கையில் அவர்கள் மேம்படுவதற்கு ஒளிகாட்டுவதற்காக 73ஆவது அரசியல் சாசனச் சட்டத்திருத்தத்தின் மூலம் இந்திய அரசு ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது இது வரை தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு வீதியில் நின்று கூக்குரல் எழுப்பியவர்களும், அதிகாரிகளிடம் மனு கொடுத்து விட்டுக் காத்து நின்றவர்களும் அதிகாரம் மிக்கவர்களாக மாறியது இந்த புதிய பஞ்சாயத்து அரசாங்கம் மூலம் தான். அரசியல்சாசனச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட மக்கள் ஆளுகை மன்றமான கிராமசபையில் எந்தத் தேர்தலிலும் போட்டியின்றி உறுப்பினராகி ஆளுகை மற்றும் நிர்வாகத்திற்கு சம்பந்தப்பட்டவர்களை கேள்வி கேட்டு அரசுத்துறைகளை தங்களுக்கான பணிகளைச் செய்ய வைக்கும் நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது இந்த புதிய அரசியல்சாசனச் திருத்தச் சட்டம். இந்தச் சட்டத்திருத்தம் மிகப் பெரிய கனவைத் தாங்கி உருவாக்கப்பட்டது. புதுதில்லி நாடாளுமன்றத்தில் உருவானது இந்தக் கனவு. எதற்காக அந்தக் கனவு உருவாக்கப்பட்டதோ, அது நிறைவேறும் வண்ணம் செயல்பட வேண்டுமேயானால், அதற்கான புரிதலும், தெளிவும், ஆற்றலும் அந்தக் கனவை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ள கடைக்கோடிக் கிராம மக்களிடம் உருவாக்கிட வேண்டும். இந்த வாய்ப்பு என்பது கடையனுக்கும் கடைத்தேற்றம்

உங்கள் உரிமைகளை மீட்டெடுக்க

# கிராம சபை



செய்ய வந்தது. எனவே அடித்தட்டு மக்களுக்காக அர்பணிப்போடு செயல்படும் அனைவரும் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டிய களம் என்பது கிராமப்புற உள்ளாட்சி. அதிலும் கிராமசபையை வலுப்படுத்துவதில் பணி செய்வது மிகவும் அத்தியாவசியமான செயல் பாடாகும். காரணம், அதுதான் மக்களை அதிகாரப்படுத்துகிறது.

**வலுப்பெற்ற கிராமப் பஞ்சாயத்து**

மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட 73ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை உள்வாங்கிக் கொண்டு 1994ஆம் ஆண்டு அன்றைய மாநில அரசு தமிழகத் திலும் ஓர் உள்ளாட்சியை உருவாக்கியது. தமிழகத்தைப் பொறுத்தவரை எந்தக் கட்சி ஆண்டாலும் இந்த மூன்றடுக்குப் பஞ்சாயத்தில், கிராமப் பஞ்சாயத்தை வலுப்படுத்தி பணி செய்வதில்தான் அவை கவனம் செலுத்தி வந்தன. காரணம் கிராமப் பஞ்சாயத்துதான் மக்களுடன் நேரடித் தொடர்பில் இருந்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வல்லமை உள்ளதாக இருப்பது தான். புதிய உள்ளாட்சியை வடிவமைக்கும் போது, தலைவரை மையப்படுத்திடாமல் மக்களை

**குறைவெண் வரம்பு (கோரம்)**

| வ.எண் | மக்கள் தொகை | குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 பேர் |
| 2 | 501 முதல் 3000 வரை | 100 பேர் |
| 3 | 3001 முதல் 10,000 வரை | 200 பேர் |
| 4 | 10001 க்கு மேல் | 300 பேர் |

மையப்படுத்தி அது உருவாக்கப் பட்டுள்ளது. கிராமத்தில் பஞ்சாயத்து என்பதை செயற்குழுவாகத் தான் உருவாக்கியுள்ளனர். காரணம் முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் கிராமசபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படை நோக்கமே மக்களை பங்கேற்புக்கு தயார்படுத்திட வேண்டும் என்பது தான். அடுத்து கிராம சபையை வலுப்படுத்தும் நோக்கில், கிராமசபைக் கூட்டங்கள் ஆண்டுக்கு நான்கு முறைகளுக்குப் பதிலாக ஆறு முறை கூட வேண்டும் என முடிவெடுத்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதைவிட மிக முக்கியமாக கிராமசபையைத் தேவைக்கு ஏற்ப எத்தனை முறை வேண்டுமானாலும் கூட்டலாம், அதற்கு அரசின் அனுமதி தேவையில்லை என்பதை சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு கிராமசபைக் கூட்டத் திலும் குறைந்தபட்சம் பெண்கள் எத்தனைபேர் இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்டோர் (பட்டியலினத் தவர்) எத்தனை பேர் இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்டவர்களில் பெண்கள் எவ்வளவு பேர் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப் பட்டு கிராமசபை நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராமசபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் மகளிர் இடம் பெற வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் அவர்களின் மக்கள்தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் பங்கு பெற வேண்டும்.

சட்டப்படி அனைவரையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பு தான் கிராமசபை. இந்த கிராமசபை தான் கிராமப் பஞ்சாயத்தின் நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதே போல்



மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, திட்டப் பயனாளிகளையும், திட்டச் செயல்பாடுகளையும் தேர்வு செய்யும் அதிகாரம் கிராமசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. கிராமசபை என்பது மக்கள் குறை கேட்கும் மன்றம் அல்ல. மக்கள் பிரச்சினை களுக்கு விடைதேடும் மாமன்றம். அங்கு விவாதம் செய்யலாம், கருத்துப் பரிமாறலாம். இந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு அனைத்துத் தரப்பினருக்கும் சேவை செய்திட முடியும். எவரையும் புறக்கணிக்க முடியாது, ஒதுக்க முடியாது. இதற்குத் தேவை தலைமைக்கு ஒரு புரிதல். அதே போல் மக்களுக்கும் தேவை ஓர் விழிப்புணர்வு. இந்தப் புரிதலை உள்ளாட்சியில் செயல்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கும், பொது மக்களுக்கும் சமூக ஆர்வலர்களும் ஊடகங்களும் உருவாக்க வேண்டும்.

**பயனாளியிலிருந்து பங்கேற் பாளராக**

இந்த அமைப்பை சரிவரப் புரிந்து கொண்டால், இதுவரை கிராம மேம்பாடு என்பது அரசாங் கத்தின் பொறுப்பு, மக்களாகிய நாம் பயனாளிகள் தான் என்ற நிலையை மாற்றி "நம் கிராமம் நம் பொறுப்பு" என்ற சிந்தனைக்கு மக்களைக் கொண்டுவரமுடியும். இந்த மாமன்றம் தனது செயல் பாடுகளால் கிராம மேம்பாடுகளை சாதிக்க முடியும். சாலைபோடுவதால், கட்டிடம் கட்டுவதால், மட்டுமே மேம்பாடு நடைபெறுவது இல்லை. பயனாளி என்ற நிலையிலிருந்து பொறுப்புமிக்க குடிமகன், குடிமகள் என்ற பார்வைக்கு வந்து மேம் பாட்டுப் பங்குதாரர்களாக மாறி மக்கள் செயல்பட்டு எங்கள் மேம்பாடு எங்கள் பொறுப்பு என்ற சூழலுக்கு வருவது தான் கிராமப்புற நல்லாட்சியாகும். இந்த வாய்ப்பு க்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்தி விட்டால் மிகப் பெரிய மாற்றம் சமூகத்தில் வந்துவிடும். கிராமசபை எதற்காக உருவாக்கப்பட்டது? அதை எப்படி நடத்துவது? அதற்கு பொருள் பட்டியல் யார் தயார் செய்வது? அவற்றை கிராமசபையில் விவாதிப்பது எப்படி? கிராமசபையில் விவாதத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் என்னென்ன? எவைகளையெல்லாம் செய்யக்கூடாது? என ஒரு விளக்கக் கையேடு தயார் செய்து, பஞ்சாயத்துத் தலைவர்கள் பயிற்சி க்கு வரும் போது அளிக்கப்படுகிறது. அதைப் படித்துப் பார்த்து அந்தக் கையேட்டில் உள்ள விபரங்களைப் பின்பற்றி கிராமசபையை நடத்தி னாலே மிகப் பெரிய மாற்றங்கள் சமூகத்தில் வந்துவிடும். அப்படி நடைபெறுகிறதா? என்பதுதான் கேள்வி.

**களம் கூறும் செய்தி**

கள அளவில் கிராமசபை எப்படிச் செயல்படுகிறது என்பதை நாம் தொடர்ந்து ஆய்வு செய்ததில், கிடைத்த செய்திகளை இனி பார்ப்போம்.

1. எங்கெல்லாம் சமூகம் விழிப் புணர்வுடன் செயல்படுகிறதோ, அங்கெல்லாம் கிராமசபைக்குக் கூட்டம் கூடுகிறது.
2. அதேபோல் எங்கெல்லாம் நல்ல தலைமைப் பண்பு மிக்கவர் களும், திறன் கூட்டப்பட்ட தலைவர்களும் பொறுப்பில் இருக்கின்றார்களோ




அங்கெல்லாம் கிராமசபை முறையாக நடக்கிறது.

3. எங்கெல்லாம் தன்னார்வலர்கள் பஞ்சாயத்துக்களுடன் இணைந்து செயல்படுகிறார்களோ அங்கெல்லாம் கிராமசபை சிறப்பாகச் செயல்படுகிறது.

4. கிராமசபையின் அதிகாரங்களை நன்கு கவனித்துப் பார்த்துப் புரிந்துகொண்டு செயல்படும் தலைவர்கள் உள்ள கிராமசபை என்பது எதிர்பார்த்ததை விட பல்வேறு புதிய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

5. பல கிராமசபைகள் மக்களுக்கு சமத்துவம் பழகுவதற்கான பயிற்சி முகாமாகவே இயங்குகின்றன.

6. கிராமிய மேம்பாட்டுக்கான ஒரு மக்கள் இயக்கத்தைக் கட்டுவதற்கான ஒரு உன்னத வாய்ப்பை இந்த கிராமசபை வழங்கியுள்ளது என்ற புரிதலுடன் கிராமத்து இளைஞர்கள் செயல்படும் கிராமங்களில் சமூக மாற்றத்திற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

25 ஆண்டு காலத்தில் கிராம சபையால் என்ன நன்மை விளைந்தது? என்ற பொதுக் கேள்விக்கும் ஆய்வுகள் பல செய்திகளைத் தருகின்றன.

1. பெரும்பாலான கிராம சபைகளில் ஆதிதிராவிடர்கள் தங்களுடைய பிரச்சினைகளை விவாதப்பொருளாக கிராம சபைக்குக் கொண்டுவந்து விட்டனர். அவை அனைத்தும் விவாதிக்கப்பட்டன. பல இடங்களில் அரசுத்திட்டங்களைப் பயன்படுத்தி அந்தத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2. பெண்களின் பிரச்சினைகள் கிராமசபைகளில் மையப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளன. விவாதிக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு மத்திய மாநில அரசுகளின் திட்டங்களின் மூலம். தீர்வு கண்டுள்ளனர்.

3. கிராமசபை மூலம் மக்களாட்சியின் அடிப்படையான சமத்துவம் என்பது, அனைவரும் சமமாக உட்கார்ந்து விவாதிப்பது ஆகும்., பட்டியலின மக்கள் கேட்கும் கேள்விகளுக்கும், பெண்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர் பதில் கூறக் கடமைப் பட்டவர், கேள்வி கேட்பது மக்களின் உரிமை என்ற பார்வையை தலைவர்களுக்கு கிராமசபை தந்துள்ளது.

4. கிராமப் பஞ்சாயத்தில் திறமை கூட்டப்பட்ட, சரியான பார்வை உருவாக்கப்பட்ட பட்டியலினத் தலைவர்களும், பெண் தலைவர்களும் கிராமசபையில் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதன் விளைவாக அதிக அளவில் தாழ்த்தப்பட்டவர்களையும்,

பெண்களையும் கிராமசபைக் கூட்டங்களுக்கு ஈர்த்துள்ளனர்.

5. கிராமசபைக்குச் சென்றால் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்ற பார்வையை பஞ்சாயத்துத் தலைவர்கள் சாதாரண மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர். பெரும்பாலான கிராமசபைகளில் சுயஉதவிக் குழுப் பெண்கள், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் பணி புரியும் பெண்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் பங்கேற்று வருகின்றனர்.

## முயன்றால் முடியும்

இந்த மாற்றங்கள் எப்படி நடைபெறுகின்றன என்பதை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள ஒரு சில முன்னுதாரணங்களைப் பார்க்க வேண்டும். கிராமத்தை மேம்படுத்த வேண்டும் என்ற சங்கல்பத்துடன் பணியைத் துறந்துவிட்டு தன் சொந்த ஊரான கம்பூருக்கு (மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியம்) வந்த இளைஞர் செல்வராஜ், தன்னுடன் ஒருசில இளைஞர்களை (ஆண்களும், பெண்களும்) இணைத்துக் கொண்டு கிராமசபையை வலுப்படுத்தத் தேவையான விழிப்புணர்வை சாதாரண ஏழைப் பெண்களிடம் முதலில் உருவாக்கினார். அதன் விளைவாக அவரது ஊரில் கிராம மேம்பாட்டிற்கு பல இலட்ச ரூபாய் செலவு செய்திருப்பதாக மத்தியப் பஞ்சாயத்துத் துறையின் இணையதளத்தில் இருந்த செய்தியைப் பதிவிறக்கம் செய்து, மக்கள் பணம் எப்படியெல்லாம் விரயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பொதுமக்களிடம் காண்பித்து, அவைகளுக்குத் தீர்வுகாண மக்களை கிராமசபைக்குத் திரட்டி, கேள்வி கேட்கவைத்து, அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் ஒரு விசாரணைக்குழு போடப்பட்டு விசாரணை நடத்த வைத்து விட்டனர். தங்களது பெயரில் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படும் போது, தாங்கள் கவனமாகக் கண்காணிக்காத தவறியதால் அந்தப்பணம் எப்படிக் களவாடப்பட்டுள்ளது என்பதைக் கண்ட பின்னர் தான் மக்களுக்குப் புரிதல் வருகிறது. தங்கள் பங்கேற்பின் முக்கியத்துவம் பற்றி அந்த கிராமசபை அனைவருக்கும் விழிப்புணர்வைக் கொடுத்தது. அது தான் "நம் பணம் நம் பொறுப்பு" என்று மக்களைச் செயல்படும்படிச் செய்துவிட்டது. அரசாங்கத்திடம் இருக்கும் நிதி நம் நிதி, அதை மக்களுக்குத் திட்டமாக உருவாக்கி செயல்படுத்தும் போது மக்களாகிய நாம் பார்க்கவில்லை என்றால் அந்த நிதியை எவராவது எடுத்துக் கொள்ள முனைவார்கள் என்ற புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தி விட்டது. எனவே கிராமசபைக்கு வருவது கிராமத்தில் உள்ள ஒவ்வொரு கிராமசபை உறுப்பினரின் கடமையும் பொறுப்புமாகும் என்பதை இந்த இளைஞர்கள் மக்கள் மனதில் பதிய வைத்து விட்டார்கள். இன்று வரை எந்த கிராமசபைக் கூட்டமானாலும் 700 அல்லது 800 கிராமசபை உறுப்பினர்கள் இங்கு கூடுகிறார்கள். இந்த நிலை தமிழகத்தில் எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் உருவானால் மக்களுக்கு வரக்கூடிய நிதியிலிருந்து ஒரு பைசாவைக் கூட எவராலும் எடுக்க முடியாது. இது தான் இன்று கிராமங்களுக்குத் தேவை.


இந்த கம்பூர் கிராமசபையைப் பற்றி எழுதாத பத்திரிக்கைகள் கிடையாது. அந்த ஊருக்குச் செலவு செய்யும் எந்தத் திட்டத்திலும் எவரும் ஒரு பைசா கூட கை வைக்க முடியாது. அந்த அளவுக்கு விழிப்புணர்வைப் பெற்ற கிராமமாக கம்பூர் மாறிவிட்டது. அது மட்டுமல்ல அந்த ஊரில் உள்ள ஏழைகள் எந்தவிதமான அச்சமுமற்று அரசு அதிகாரிகளைக் கேள்வி கேட்கப் பழகிக் கொண்டார்கள். பழகிக்கொண்டது மட்டுமல்ல அரசு அலுவலர்கள் தங்களுக்குப் பணி செய்யும்படியும் வைத்துவிட்டார்கள். அந்த ஊர் இன்று ஊழலில்லாத கிராமமாக மாறியிருக்கிறது. அது மட்டுமல்ல அந்த ஊரில் பொது விநியோகக் கடையில் விலையில்லா அரிசி குறைந்த எடையுடன் அனைவருக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. அதை எதிர்த்து அந்த ஊர் மக்கள் போராடினர். அரசு தருவது இனாம் அல்ல. அது எங்கள் உரிமை, எனவே 20 கிலோ அரிசி தந்தால் தான் வாங்குவோம் என்று போராடி அத்தனை பேருக்கும் தர வேண்டிய அரிசியை பெற்றுக் கொண்டனர். இந்தப் போராட்டப் பயிற்சியை கிராமசபை தான் தந்தது. இந்த ஊரைப் பற்றி, கிராமசபையைப் பற்றி ஒரு ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது. இந்த கிராமசபைக் கூட்ட அனுபவங்களை புதுமைக் காந்தியர்கள் என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகமாக வெளியிட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் துடிப்புமிக்க இளைஞர் ஒருவர் தியாக உணர்வுடன் செயல்படத் துணிந்தது களத்தில் இறங்கினால் மாற்றம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே.

## பங்கேற்பு ஆய்வுச் செய்தி

இதே போல் காந்தி கிராமப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் நடைபெற்ற ஒரு கிராமசபைக் கூட்டத்திற்கு ஆய்வு நிமித்தமாகச் சென்றிருந்தோம். பெருந்தொற்றுக்

காலத்திற்கு முன்பு நடந்த கிராம சபையாகும் அது. ஏராளமான பெண்கள் அந்தக் கிராமசபையில் கூடி இருந்தனர். மிகக் குறைந்த அளவில் தான் ஆண்கள் அங்கு இருந்தனர். அதாவது பத்து சதவீதத்திற்கு குறைவாகத்தான் ஆண்கள் இருந்தனர். அந்தப் பெண்கள் கூட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டியலினப் பெண்கள் இருந்தனர். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் 100 நாள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களும், சுயஉதவிக்குழுப் பெண்களும், முதியோர் உதவித் தொகை பெறும் பெண்களும் ஆண்களும் மட்டுமே இருந்தது போல் காட்சியளித்தது அந்த கிராமசபை. கிராமசபை என்பது எனக்கு அந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் ஏழைகள் சபையாகவே காட்சியளித்தது. கிராமசபை நடந்த இடத்தில் அதிக அளவில் ஏழைகள் தான் வசித்து வருகின்றனர். அந்த இடத்தில் உள்ள நடுத்தரக் குடும்பத்தினர் யாரும் வந்ததாகத் தெரியவில்லை. சரியாக 11 மணி யளவில் கிராமசபைக் கூட்டத்தைப் பஞ்சாயத்துத் தலைவர் ஆரம்பித் தார். ஆரம்பித்த உடனேயே பஞ்சாயத்துத் தலைவர் விவாதப் பொருளை விவாதத்திற்கு எடுக்கும் முன் சில பெண்கள் எழுந்து பஞ் சாயத்துத் தலைவரிடம் கேள்வி களைக் கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

கிராமசபைக் கூட்டம் முடி கின்றவரை பெண்கள் தொடர்ச்சி யாகக் கேள்விகள் கேட்ட வண்ணம் இருந்தனர். அந்தப் பெண்கள் எழுப்பிய கேள்விகளும், கேள்விகளை அவர்கள் எழுப்பிய விதமும் மக்களாட்சிக்கு வலுச் சேர்ப்பதாகவே இருந்தன. பெரும் கூச்சல் போடாமல் ஒருவர் பின் ஒருவராக கேள்வியைக் கேட்டது மட்டுமின்றி கேள்விக்கான பதிலை பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து பெற்றது அந்த சபையின் முக்கியத் துவத்தை மட்டும் உயர்த்தவில்லை, அதற்கு மேலாக கண்ணியத்தையும் உயர்த்தியது. அங்கு வந்த ஆண் கள் பேசியது மிகக்குறைவுதான். அவர்கள் வேடிக்கைப் பார்க்க வந்தவர்களைப் போலத்தான் அமர்ந்திருந்தனர். பஞ்சாயத்துத் தலைவரும் கோபப்படாமல் பொறுமையாக, நிதானத்துடன், கேள்விகளைப் புரிந்துகொண்டு, அவற்றிற்குத் தீர்வுகாணும் விதமாக தெளிவாக பதில் அளித்துக்



கொண்டிருந்தார். அந்த நேரத்தில் எனக்குத் தெரிய வந்தது ஒன்று தான். அங்கு கூடி இருந்த பெண்களும் தாங்கள் சந்திக்கின்ற பல கடினமான பிரச்சினைகளைக் கொண்டு வந்ததிருந்தனர், அதே போல் பஞ்சாயத்துத் தலைவரும் தனக்கென அரசு தந்த பொருள் பட்டியலை நிறைவேற்றுவதற்காக தன் கையில் வைத்திருந்தார். இதில் யார் கூறுவது பிரதானப் படுத்தப்படுகிறது என்பதுதான் கேள்வி. இதில் கிராமசபையில் பெண்கள் கொண்டு வந்த பிரச்சினைகள், எழுப்பிய கேள்வி கள் பிரதானப்படுத்தப்பட்டன என்பது தான் இந்த கிராமசபையின் சிறப்பாகத் தெரிந்தது. இதற்கு மிக முக்கியக் காரணம் கிராமசபையில் கூடியிருந்த பெண்கள் மட்டுமல்ல, அந்தப் பஞ்சாயத்துத் தலைவரும் தான். ஒரு முறையான விவாத ஜனநாயகத்தை அந்த கிராம சபையில் பார்க்க முடிந்தது.

கிராமசபையில் முதலில் தண்ணீர்ப் பிரச்சனைப் பற்றி பேச ஆரம்பித்தனர். உடனே ஒரு சில பெண்கள் தங்கள் பகுதிக்குக் குறைவாக தண்ணீர் வருகிறது என்று குறை கூறினர். உடனே அதன் காரணத்தை விளக்குங்கள் என்று குறை கூறியவர்களிடமே பஞ்சாயத்துத் தலைவர் கேட்டார். எந்தவிதமான தயக்கமும் இன்றி ஒரு வீட்டின் பெயரைச் சொல்லி அந்த வீட்டினர் குடிநீர் இணைப்பில் மோட்டாரைப் பொருத்தி இணைப்புக் குழாயிலிருந்து தண்ணீரை உறிஞ்சு கின்றார்கள் என்று விளக்க மளித்தனர். நீங்கள் வசிக்கின்ற பகுதியில் நடக்கின்ற தவறு இது, இதை ஏன் நீங்கள் தட்டிக் கேட்கக் கூடாது என்று பஞ்சாயத்துத் தலைவர் அவர்களைப் பார்த்துக் கேட்டார். அதற்கும் சளைக்காமல் உடனே அவர்கள் பதில் அளித்தனர். அதிகாரம் எங்களிடம் கிடையாது, அது உங்களிடம் தான் உள்ளது. நாங்கள் அவர்களைக் கேள்வி கேட்டால், நீ யார் எங்களைக் கேட்பதற்கு என்று அவர்கள் எங்கள் மீது கோபப்படக்கூடும், இருந்த போதிலும் நாங்கள் அந்த வீட்டிற்குச் சென்று கேள்வி கேட்டோம், அதற்கு அந்த வீட்டுக்காரர் "என்னுடைய வீட்டு இணைப்பில் தானே மோட்டாரைப் பொருத்தி நான் பிடிக்கின்றேன்" என்று கூறிவிட்டார் என்று கூறி னார்கள். கிராமசபைத் தலைவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னது மட்டுமல்ல பல கூடுதலான தகவல் களையும் தந்ததனர். ஒன்று, வீட்டு இணைப்பிற்கு தரக்கூடிய குழாயின் அளவு என்பது சிறியது, அதை அந்த வீட்டுக்காரர் எடுத்துவிட்டு பெரியகுழாய் ஒன்று பொருத்தி அதிலிருந்து தண்ணீரை மோட்டார் போட்டு எடுக்கிறார். அதையும் தாண்டி மாடு குளிப்பாட்டவும் செடிகளுக்குப் பாய்ச்சவும் என மற்ற உபயோகங்களுக்கும் குடி தண்ணீரைப் பயன்படுத்துகின்றார். இவற்றை நெறிப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

உடனே அந்தப் பகுதிக்குத் தண்ணீர் திறந்துவிடும் பஞ் சாயத்துப் பணியாளரிடம் இது உண்மையா என தலைவர் கேட்டார். அவர் ஒரு பெண்மணி, உடனே அவர் "எப்பொழுதெல்லாம் தண்ணீர் வருகிறதோ அப்பொழு தெல்லாம் அப்படித்தான் அந்த வீட்டில் செய்கிறார்கள். நானும் பல முறை நீங்கள் செய்வது தவறு என்று கூறிவிட்டேன்ம் அதை அவர்கள் கேட்பதாக இல்லை" என்று பதில் சொன்னார். இவற்றைக் கேட்ட தலைவர் நாளையிலிருந்து அந்த வீட்டிற்கு தண்ணீர் நிறுத்தப்படும் அத்துடன் உங்கள் பகுதிக்குக் குறைவின்றி தண்ணீர் கிடைக்க நானே நேரில் வந்து பார்த்து ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி அதை முடித்து வைத்தார். அதற்கு மேல் வேறு யாரும் அந்தப் பிரச்சினைப் பற்றிப் பேசவில்லை.

அடுத்து ஏழைகளுக்கான வாழ்வாதாரத்திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு ஏழ்மையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என ஆராய்ச்சியாளர்கள் புள்ளி விபரம் சேகரித்து கிராமத்தில் உண்மையிலேயே பாதிப்புக்கு உள்ளாகியிருப்போரைப் பட்டிய லிட்டிருந்தனர். இதனை அறிந்து அந்தத் திட்டத்தில் யார் யாருக்குப் பயன் கிடைக்கப் போகிறது என்பதை விளக்கமாகச் சொல்லு ங்கள் எனப் பஞ்சாயத்துத் தலை வரை பல பெண்கள் கேட்டனர். எங்கள் பெயர்கள் அதிலிருக்கிறதா? என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டனர். உடனே பஞ்சாயத்துத் தலைவர் இந்தத் திட்டத்திற்கான பயிற்சிக்குச் சென்று வந்திருந்த மூன்று பெண் களை இந்தத் திட்டம் பற்றிய முழு விபரத்தையும் தெரிவிக்கும்படி பஞ்சாயத்துத் தலைவர் வேண்டி னார். அந்தப் பெண்கள் இதற்கான பதிலைத் தந்தனர். அதாவது "இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு நம் கிராமத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலை இதுவரை எடுக்கவில்லை, மாறாக தேனி மாவட்டத்திலிருந்து ஆராய்ச்சியாளர்கள் வந்து குடும்பப் புள்ளிவிபரங்களைச் சேகரித்து அதில் குடும்பங்களைத் தரப்படுத்தி

மிகவும் ஏழ்மையில் இருக்கும் குடும்பங்கள், ஏழ்மையில் உள்ள குடும்பங்கள் எனப் பிரித்துக் கொடுத்துள்ளனர்" என்று கூறினார்கள். அந்தப் பட்டியலை படிக்கும்படி பல பெண்கள் வேண்டினார்கள்.

உடனே பஞ்சாயத்துத் தலைவர் அந்தப் பட்டியலை படிக்கச் செய்தார். படித்ததை அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். பஞ்சாயத்துத் தலைவர் கூடியிருப் பவர்களைப் பார்த்து இப்பொழுது பெயர்கள் வாசிக்கப் பட்ட நபர்கள் உண்மையிலேயே வறுமையில் இருக்கின்றார்களா, இல்லையா என்று கேட்டார். அனைவரும் கூறினார்கள் அந்தக் குடும்பங்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்று. ஒரு சில பெண்கள் நாங்களும் ஏழைகள் தானே என கேள்வியைக் கேட்டனர். இந்தப் பட்டியலில் உள்ளவரை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அவர்களை விட உங்கள் குடும்பச் சூழல் தாழ்வாக உள்ளதா எனப் பஞ்சாயத்துத் தலைவர் கேட்டார். அதற்கு அவர்களால் பதில் கூற இயலவில்லை.

அடுத்து ஒரு பெண், நம்மிடம் இருக்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் என்ற பழைய பட்டியல் என்னாகும் என்று கேட்டார். உடனே அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் அவரிடமே கேட்டார். நீங்களே சொல்லுங்கள் அது உண்மையான பட்டியலா? என்று. அந்தப் பெண் சிரித்துக் கொண்டு அது ஒரு பொய்ப் பட்டியல் என்றார். கடைசியாக பஞ்சாயத்துத் தலைவர் வாழ்வாதாரத் திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பட்டியல் போலி என்று யாராவது கூறமுடியுமா என்று கேட்டார். ஆராய்ச்சியாளர்களால் தற்போது புதிதாகத் தயாரிக்கப் பட்டுள்ள பட்டியல் தான் உண்மையாக இருக்கிறது என்று அனைவரும் பதில் கூறினார்கள். அந்த அளவுக்குத் துல்லியமாக புள்ளி விபரங்களைச் சேகரித்து குடும்பங்களை வகைப்படுத்தி இருக்கிறார்கள் என்று தலைவர் பாராட்டினார்.

அடுத்து மூன்று பெண்கள் எழுந்து நின்று, "எங்கள் வீடுகளுக்கு மின்சார இணைப்பு வேண்டி மின்வாரிய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டோம். இந்த வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் சிக்கல் இருக்கிறது, முதலில் உங்கள் விண்ணப்பத்தில் பஞ்சாயத்துத் தலைவரின் கையொப்பம் பெற்று வாருங்கள் என அந்த அலுவலக அதிகாரி எங்களைத் திருப்பி அனுப்பிவிட்டார் என்று கூறினர். பஞ்சாயத்துத் தலைவராகிய உங்களைத் தொடர்பு கொள்ள தொலைபேசியில் நாங்கள் அழைத்தோம். ஆனால் நீங்கள் தொலைபேசியை எடுக்கவில்லை, இதற்கென்ன தீர்வு" எனக் கேட்டனர். உடனே பஞ்சாயத்துத் தலைவர் அந்த மின்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவரிடம் கைபேசியில் பேசினார்.

அப்பொழுது மூன்று நபர்களின் வீடுகளுக்கும் பட்டா கிடையாது. ஆகையால் பொறியாளர் நிறுத்தி வைத்துவிட்டார் என்று அந்த அலுவலர் பதில் கூறினார். உடனே அதற்குப் பஞ்சாயத்து தலைவர் கூறினார், "அவர்களுக்குப் பட்டா கிடையாது, அவர்கள் புறம்போக்கு நிலத்தில் வீடுகட்டிக் குடியிருக் கின்றனர். அந்த வீடுகளுக்கு பட்டா கிடையாது தான், இருந்த போதிலும் நாங்கள் வீட்டிற்கு வரிவசூல் செய்து ரசீது போட்டிருக்கின்றோம் அதை வைத்துக் கொண்டு நீங்கள் இணைப்பு கொடுக்க வேண்டும், இதே போல் பல வீடுகளுக்கு இப்பஞ்சாயத்தில் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன" என்று அந்த அலுவலரிடம் தலைவர் கூறினார்.

உடனே மின்வாரிய ஊழியர், தலைவர் என்ற முறையில் நீங்களே வந்து இந்த விளக்கத்தைப் பொறியாளரிடம் சொல்லுங்கள் என்று கேட்டார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண்கள் தாங்களும் மறுநாள் பஞ்சாயத்துத் தலைவருடன் மின்வாரிய அலுவலகத்திற்கு வருவதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர் தானே பொறுப்பேற்றுக் கொண்டு மின் இணைப்பு வாங்கித் தருவதாக உறுதி கூறினார். அத்துடன் அந்த விவாதத்தை முடித்துக் கொண்டனர்.

அடுத்து பல வயதான பெண்கள், ஒரு சில வயதான ஆண்கள் எங்களுக்கு முதியோர் உதவித்தொகை பல மாதங்களாக வரவில்லை. எங்களுக்கு இந்த ஊரை விட்டு வெளியில் செல்ல இயலவில்லை. யாரைப் பார்ப்பது என்பது கூடத் தெரியவில்லை, எனவே பஞ்சாயத்துத் தலைவர் அதற்கு ஆவண செய்ய வேண்டும் எனக் கேட்டனர். எந்தவிதமான மறுப்பும் இன்றி யார் யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்களில் ஒரு சிலராவது என்னுடன் வாருங்கள். முதியோர் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரியைச் சந்தித்து முறையிட்டு விபரம் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறினார். இவை அனைத்தையும் பேசிய பிறகு தான், பஞ்சாயத்துத் தலைவர் கையில் வைத்திருந்த விவாதப்பொருளை எடுத்து விவாதிக்க மக்கள் அனுமதித்தனர்.

அதன் பின் அரசு தந்த கிராமசபைக்கான விவாதப்பட்டியல் ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து விளக்கம் தந்து தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு கலைவதற்கு முன் தேநீரும் ஒரு ரொட்டி பொட்டலமும் அனைவருக்கும் தரப் பட்டது. இந்த நேரத்தில் கிராம சபைப் பதிவேட்டில் அனைவரிடமும் கையெழுத்துப் பெற்றுக் கொண்டி ருந்தார், பஞ்சாயத்து உதவியாளர். தந்த தேநீரை அருந்தி விட்டு ரொட்டிப் பொட்டலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அனைவரும் கலைந்தனர். இந்தக் கிராமசபை பல கேள்விகளுக்குப் பதில் தந்தது. கிராமசபைக்கு ஏழைகள் மட்டும் ஏன் வருகிறார்கள் என்றால், அவர்களுடைய பிரச்சினைகளுக்குப் பஞ்சாயத்தில் தீர்வு இருக்கிறது என எண்ணுகின்ற காரணத்தால் தான். அத்துடன் விபரம் தெரிந்த ஒரு மனிதர் தலைவராக இருந்து கேள்விகளுக்குப் பதில் தருகிறர் என்பதை மக்கள் உணர்ந்ததால் தான் கிராமசபைக்கு வருகின்றனர். பஞ்சாயத்திற்கு தலைவராக வந்துவிட்டால், மக்களின் மேல் நம்பிக்கையுள்ளவராக செயல்பட்டு பல சேவைகளை ஏழைகளுக்காகச் செய்து, ஏழைகளின் பங்கேற்புடன் பஞ்சாயத்தை வலுப்படுத்த அவரால் முடியும்.

இந்தக் கிராமசபையின் மேல் ஒரு நம்பிக்கையை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். அந்தப் பணி என்பது கிராமப் பஞ் சாயத்துத் தலைவர் கையில் தான் உள்ளது. அவர் ஆற்றுகின்ற பணிகள் தான் பஞ்சாயத்தின் மீதும் கிராமசபையின் மீதும் மக்களை நம்பிக்கை கொள்ள வைக்கிறது. இன்றைய சூழலில் இந்தப் பெண்கள் குறிப்பாக ஏழைகள் சங்கமித்து வாழ்வதால் கூச்சமும் அச்சமும் இன்றி பிரச்சினைகளைப் பேசுகின்றனர். எண்ணற்ற அரசுத் திட்டங்களைத் தங்களுக்கு பெற்றுத் தருவதற்குப் பஞ்சாயத்துகள் உதவி செய்ய வேண்டும், உதவிசெய்யும் என்ற நம்பிக்கையில் தான் ஏழைகள் கிராமசபைக்கு வருகின்றனர். இதற்கு மேலாக பெண்கள் சுயஉதவிக் குழுக்களில் பேசப் பழகிக்கொண்டனர். எனவே பொது இடங்களில் பேசுவதற்கு அவர்கள் கூச்சப்படுவதே கிடையாது.

இதற்கு ஓர் உதாரணம், பஞ்சாயத்துத் தலைவர் மின்சார வாரிய அலுவலகத்திற்கு மின் இணைப்பு வாங்க உங்கள் குடும்பத் திலிருந்து யாராவது ஓர் ஆண் இருந்தால் அனுப்புங்கள் என்றார். உடனே ஒரு பெண்மணி எங்கள் வீட்டில் ஆண் இல்லை, பக்கத்தில் எங்கள் அண்ணன் இருக்கிறார். எனக்குத் தெரிந்த விபரம் கூட அவருக்கு தெரியாது. எனவே நானே உங்களுடன் வருகிறேன் என்றார். பஞ்சாயத்துத் தலைவர் ஆண், எனவே தான் அவர் உங்கள் வீட்டில் யாராவது ஆண் இருந்தால் அனுப்புங்கள் என்றார். பயனாளி ஒரு பெண்; அவர் ஆண் துணை யின்றி வாழ்பவர். ஆனால் அதற்காக அவர் கூச்சப்படவில்லை. நான் உங்களுடன் வருகிறேன் என்று எதார்த்தமாக சொல்லும் அளவுக்கு இந்தப் பெண்கள் மனதளவில் வளர்ந்திருக்கிறார்கள்.

கிராமசபை உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு நிதான மாக பொறுமையாக புரிந்து கொண்டு தீர்வுக்கான பதிலைத் தரும் நிலையில் பஞ்சாயத்திற்கு ஒரு தலைவர் கிடைத்துவிட்டால் பஞ்சாயத்துகள் மூலமாக பெரு மளவில் ஏழைகளுக்கு உதவிகள் கிடைத்துவிடும். ஏழைகள் இந்தப் பஞ்சாயத்தை வலுப்படுத்தி விடு வார்கள். அந்தக் கிராமசபையைப் பார்த்த போது எனக்குப் புரிந்தது ஒன்று தான். புரிதலுடன் பயமின்றி பஞ்சாயத்துகளை ஏழைகள் பயன் படுத்த ஆரம்பித்துவிட்டால் பஞ்சாயத்து என்பது ஏழைகளின் வசமாகிவிடும். அதற்குத் தேவை விபரம் தெரிந்த ஒரு பஞ்சாயத்துத் தலைவர். நான் பார்த்த கிராம சபையில் அப்படி ஒரு தலைவர் இருந்தார். அத்துடன் விபரம் அறிந்த ஏழைப் பெண்களும் இருந்தனர். இவர்கள்தான் இந்திய மக்களாட்சியைச் சுழற்றும் அச்சாணி. அதைத் தான் இன்று இந்தியக் கிராமங்களில் வலுவாக்க வேண்டும்.

இந்தக் கட்டுரைத் தயாரிப்புக்கு உதவிய நூல்களும் கட்டுரைகளும்:


G.Palanithurai, (2015) Deliberative Democracy New Delhi: MJP Publishers.

Malini Nambiar, (2001), “Making Gram Sabha work” Economic and Political Weekly 18, August.


க.பழனித்துரை, (2022) புரிந்து கொள்வோம் புதிய பஞ்சாயத்து அரசாங்கத்தை சென்னை: கோரல் பதிப்பகம்.

G.Palanithurai and V. Ragupathy, (2006) Functional Efficiency of Gram Sabha in Tamil Nadu New Delhi: Concept Publications.


---


**– க.பழனித்துரை,** அரசியல் அறிவியல் மற்றும் வளர்ச்சி நிர்வாகத்துறைப் பேராசிரியர், காந்தி கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.

# தமிழ்நாட்டில் சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள்



44ஆவது பன்னாட்டு சதுரங்க ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகள் 2022, ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 10 வரை மாமல்ல புரம் பூஞ்சேரி கிராமத்தில் உள்ள நட்சத்திர விடுதி வளாகத்தில் நடைபெறுகின்றன. இப்போட்டியில் சுமார் 190 உலக நாடுகளில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை ஜூலை 28ஆம் தேதி பிரதமர் நரேந்திரமோடி ஜவகர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடக்க விழாவில், தமிழ்ப் பண்பாட்டினை உலகறியச் செய்யும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாக்கூர், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளத்துறை இணை அமைச்சர் எல் முருகன் ஆகியோர் இணைந்து மாமல்லபுரத்தில் 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டின் முதல் போட்டியைத் துவக்கி வைத்தனர்.






ஒலிம்பியாட் முதலில் ரஷ்யாவில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், ரஷ்யாஉக்ரைன் போர் காரணமாக, Fédération Internationale des Échecs எனப்படும் பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு (International Chess Federation - FIDE) இந்தப் போட்டியை முதல் முறையாக இந்தியாவில் நடத்தத் திட்டமிட்டது. உலகின் மிகப்பெரிய சதுரங்கப் போட்டியை நடத்தும் வாய்ப்பினை மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியது. தமிழக அரசு இந்த நிகழ்விற்கு என ரூ.92 கோடியை ஒதுக்குகிறது. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற வீரர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சர்வதேச சதுரங்க கூட்டமைப்பினர் மற்றும் விருந்தினர்கள் தங்குவதற்காக நவீன வசதிகளுடன் கூடிய நட்சத்திர விடுதிகளில் 2,000 அறைகளும், வாகன வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்று, பன்னாட்டு சதுரங்க ஒலிம்பியாட் போட்டிக்கான முதல் தீப ஓட்டத்தை பிரதமர் மோடி கடந்த ஜூன் 19 கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். நாட்டிலுள்ள 75 நகரங்களுக்கு இந்த தீபம் கொண்டு செல்லப்பட்டு இறுதியாக மாமல்லபுரத்தை வந்தடையும்.

இந்த மாபெரும் நிகழ்வினைப் பற்றிய செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் ஏற்கனவே தொடங்கியுள்ளன. தமிழ்ப் பாரம்பரிய வேட்டி சட்டை அணிந்த சதுரங்கக் குதிரையின் வடிவமான 'தம்பி' மற்றும் சின்னமும் வெளியிடப்பட்டது.

'நம்ம சதுரங்கம், நம் பெருமை' என்ற விளம்பர வாசகங்கள் அடங்கிய பேருந்துகளை நகரம் முழுவதும் பயணிப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கான விளம்பரப் படம் சென்னை மெரினா கடற்கரைக்கு அருகில் உள்ள நேப்பியர் பாலத்திலும், மாமல்லபுரத்தில் உள்ள புராதன நினைவுச்





சின்னங்களிலும் படமாக்கப்பட்டது. தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் ஏ.ஆர். ரஹ்மான் ஆகியோர் இடம்பெற்றுள்ள வீடியோ சதுரங்கப் பலகையைப் போன்ற பின்னணியில் அமைக்கப் பட்டுள்ளது.

**ஒலிம்பியாட் போட்டிக்கு நுழைவுச் சீட்டு முன்பதிவு செய்வது எப்படி?**

இரண்டு விளையாட்டு அரங்குகளில் போட்டிகள் நடைபெறுகின்றன. <https://tickets.aicf.in./> என்கிற இணையதளத்தில் போட்டிகளைக் காண்பதற்கான நுழைவுச் சீட்டுகளை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

**பார்வையாளர்களுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறை**

பார்வையாளர்கள் முழுமை யான பாதுகாப்பு சோதனைக்கு பிறகே, போட்டி நடக்கும் இடத் திற்குள் அனுமதிக்கப்படுவார்கள். போட்டி அரங்கிற்குள் அலைபேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் அனுமதிக்கப்படாது.

**ஒலிம்பியாட் போட்டிக்கு இலவச பேருந்துகளை இயக்கும் தமிழக சுற்றுலாத்துறை**

பேருந்துகள் மத்திய கைலாஷில் இருந்து புறப்பட்டுராஜீவ் காந்தி சாலை வழியாக சோழிங்க நல்லூர் சந்திப்புக்கு இயக்கப்பட்டு கிழக்குக் கடற்கரை சாலை வழியாக மகாபலிபுரத்திற்குச் செல்லும். 19 நிறுத்தங்களில் நின்று செல்லும் இந்தப் பேருந்துகள் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை இயக்கப்படும். பேருந்துப் பயணம் முற்றிலும் இலவசம்.

## மாலத்தீவுகளின் நீதிச்சேவைகள் ஆணையத்திற்கும், இந்தியாவுக்கும் இடையே நீதி ஒத்துழைப்புத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாலத்தீவு குடியரசின் நீதிச்சேவை ஆணையத்திற்கும், இந்தியாவுக்கும் இடையே நீதி ஒத்துழைப்புத் துறையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இது நீதி ஒத்துழைப்புத் துறையில் இந்தியாவுக்கும், இதர நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான எட்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்.

நீதிமன்ற டிஜிட்டல்மயத்திற்கு தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டைக் கண்டறிவதற்கான தளத்தை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழங்கும். இரு நாடுகளிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், புதிய தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஆற்றலையும் இது உருவாக்கும்.


சமீப ஆண்டுகளில் இந்தியா மாலத்தீவுகள் இடையே நெருக்கமான உறவு பல நிலைகளில் அதிகரித்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே நீதித்துறை அறிவு, தொழில்நுட்பம், இதர சட்டத்துறைகளில் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு உதவுவதோடு மட்டுமின்றி “அண்டை நாடுகளுக்கு முதன்மை” என்ற கொள்கையின் நோக்கங்களை அதிகரிக்கவும் செய்யும்.

# வங்கித் துறையில் தொழில்நுட்பப் புதுமை

- மஞ்சுளா வாத்வா

வாடிக்கையாளர்கள் தங்களின் சொத்துக்களை கவர்ச்சிகரமான வங்கித்திட்டங்களில் முதலீடு செய்யும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்காக வங்கித்துறை புதிய தொழில்நுட்பங்ள் பலவற்றை வேகமாக அறிமுகப்படுத்தி வருகிறது. செயற்கை நுண்ணறிவுத் திறன் (Artificial Intelligence), பெருந்தரவு (Big Data), நுட்பமான எந்திரக்கற்றல் (Deep Machine Learning), ரோபோடிக்ஸ் (Robotics) போன்ற அதிநவீனத் தொழில்நுட்பங்கள் வாடிக்கையாளர்களையும், அவர்களின் தேவைகளையும் நன்கு புரிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் 252 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட வங்கி அமைப்பு அதன் பாரம்பரியமான செயல்பாட்டு முறையைக் கைவிட்டு, நவீனத் தொழில்நுட்பங்களின் உதவியுடன் புதிய அவதாரத்தை எடுத்திருக்கிறது.

10 ஆண்டுகளுக்கு முன்பு வங்கிச் சேவையில் புதுமைகளைப் புகுத்துவதில் இந்திய வங்கிகள், பன்னாட்டு வங்கிகளையே பெரும் பாலும் பின்பற்றி வந்தன. ஆனால், இன்று ஒட்டுமொத்தச் சூழலும் மாறிவிட்டது. இன்றைய நிலையில் வங்கித்துறை சார்பில் அனைத்து மாநிலங்களிலும் நடத்தப்படும் மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டங்களில் இயல்பாக விவாதிக்கப்படும் ஒரு செயல் திட்டம் என்னவென்றால், நவீன தொழில்நுட்பங்களின் மூலமாக வங்கிச் சேவைகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஒருங்கிணைக்கப் பட்ட முறையிலும், சிறப்பான வகையிலும் இந்திய மக்களுக்கு எவ்வாறு வழங்க முடியும்? என்பது தான். இத்தகைய ஒருங்கிணைக்கப் பட்ட நடவடிக்கைகளின் காரண மாக இந்திய வங்கித்துறையில் மின்னணுமயமாக்கல் மிக அதிக வேகத்தில் நடைபெற்று வருகிறது. இந்தியாவில் செயல்பாட்டில் உள்ள யுபிஐ எனப்படும் ஒருங்கிணைந்த பணம் வழங்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பணம் செலுத்து




வதும், ஆதார் மூலமான பணம் வழங்கல் அமைப்புகளும் வெளி நாடுகளில் கடைபிடிக்கப்பட்டு வரும் தொழில்நுட்பங்களை விட மிகவும் சிறப்பானவையாகும். இந்தத் தொழில்நுட்பங்களை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்குடன் வெளிநாடு களுக்குப் பணம் செலுத்துதல், கூட்டமைப்புக் கடன்கள், வாடிக்கை யாளர் விவரங்கள் போன்றவற்றுக்கு பிளாக்செயின் தொழில்நுட்பம்

சார்ந்த தீர்வுகளைக் கண்டுபிடிக்கும் பணியில் இந்திய வங்கிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

**மின்னணு முறைக்கு மாற்றம்: முக்கிய மைல் கற்கள்**


இந்தியாவில் 252 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட வங்கி அமைப்பு அதன் பாரம் பரியமான செயல்பாட்டு முறையைக் கைவிட்டு, நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் புதிய அவதாரத்தை எடுத்து இருக்கிறது. வங்கிகளில் நீண்ட வரிசையில் வாடிக்கையாளர்கள் நிற்பது கடந்த கால நிகழ்வுகளாக ஆகிவிட்டன; இப்போதெல்லாம் மக்கள் வங்கிகளை தங்களின் சட்டைப் பைகளில் கொண்டு சென்று, மின்னணு முறையில் ஒரு சில நிமிடங்களில் பணப்பரிமாற்றத்தை மேற்கொள்கின்றனர். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், வங்கித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் குடிமக்களை தற்சார்பு கொண்டவர்களாக மாற்றி இருக்கின்றன.

1969ஆம் ஆண்டில் இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகும், குறிப்பாக 1991ஆம் ஆண்டில் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும் வங்கிகளிடையே போட்டித் தன்மை அதிகரித்தது. அதன் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்கும் வழக்கம் வங்கித்துறையில் தொடங்கியது. அத்துடன் இணையதளத்தின் பயணமும் இணைந்து தொடங்கியது. அக்காலத்தில் இணையதளம் மிகவும் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டது என்றாலும் கூட, உலக அளவில் இணையதளத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் வங்கித் துறையை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்ல பெருமளவில் உதவியாக இருக்கும் என்பது அப்போதே கணிக்கப்பட்டது. உலக அளவில் வணிக அடிப்படையிலான முதல் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ஏடிஎம்) அமெரிக்காவில் 1969ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்றாலும் கூட, இந்தியாவில் முதன் முதலில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு வங்கியான ஹெச்.எஸ்.பி.சி. (HSBC) அதன் முதல் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தை 1987ஆம் ஆண்டில் மும்பையில் திறந்தது. இந்தியாவில் முதன் முதலில் இணையதள வங்கிச்சேவையை அறிமுகப் படுத்தியது ஐசிஐசிஐ (ICICI) வங்கி ஆகும். அதே நேரத்தில் இந்தியாவில் முதன் முதலில் கிரெடிட் கார்டு சேவையை தொடங்கிய பொதுத்துறை வங்கி சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஆகும்.

**எளிமையான பணப்பரிமாற்றங்கள்**

முந்தைய காலத்தில் வங்கியில் பணம் எடுப்பதற்கும், வங்கி மூலமாக பணம் வழங்குவதற்கும் ஏராளமான நேரம் வீணடிக்கப்பட்டது. ஆனால், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் இணைய தள வங்கிச் சேவை, கடன் அட்டைகள் போன்ற தொழில்நுட்பங்கள் பணம் எடுப்பதையும், அனுப்புவதையும் மிகவும் எளிதானவையாக மாற்றி விட்டன. ஒரு காலத்தில் வங்கிச் சேவையில் கணினிகள் அறிமுகப் படுத்தப்படுவதைக் கண்டித்து வங்கிப் பணியாளர் சங்கங்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டன. ஆனால், இன்று இந்தியாவின் பெரும்பான்மையான வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களின் அனைத்து வங்கிச்சேவைகளையும் கைபேசி மூலமாகவே வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்பத் தென்றல் வீசத் தொடங்கியதை அடுத்து, காகிதம் இல்லாமலேயே வங்கிச்சேவைகளை வழங்கும் முறை உருவானது. அதன் பின் இன்றைய சூழல் என்னவென்றால், மின்னணு பணப் பரிமாற்றம் என்ற தொழில்நுட்பம் காகிதம் சார்ந்த பணம் அனுப்பும் முறையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, வங்கிச்சேவைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சகத்திடம் உள்ள தகவல்களின் படி, 2020 21ஆம் ஆண்டில் ரூ.5,554 கோடி மின்னணு முறையில் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில், 2021–22ஆம் ஆண்டில் வங்கிகள் மூலம் ரூ.7,422 கோடி மின்னணு முறையில் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியர்களை புதுமையானவர்களாகவும், இந்திய வங்கி அமைப்பை எளிமையானதாகவும் மாற்றும் நோக்கத்துடன் வங்கித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த இந்திய அரசு அண்மைக் காலங்களில் ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இந்திய அரசின் இலட்சியம் மிக்கத் திட்டங்களான டிஜிட்டல் இந்தியா இயக்கம், பணம் வழங்கல் இயக்கம் ஆகியவை இந்தியாவின் மின்னணு பொருளாதாரத்திற்கான அடித் தளத்தை அமைத்துக் கொடுத்தன. ரூபே, விவசாயக் கடன் அட்டை ஆகியவை உழவர்கள் பணம் இல்லாமல் நிதிப் பரிமாற்றங்களை செய்ய ஒருபுறம் வகை செய்தன என்றால், மற்றொருபுறம் விவசாயம் அல்லாத பிற தொழில்களில்




## டிஜிட்டல் வங்கிகள்

ஈடுபட்டுள்ள மக்கள் பணம் அல்லாத நிதிப்பரிமாற்றங்களை மேற்கொள்ள பொதுக்கடன் அட்டைகள் வகை செய்தன என்பது குறிப்பிடத்தக்கது. நபார்டு எனப்படும் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தொடங்கப்பட்ட நாளில் இருந்தே கூட்டுறவு வங்கிகளும், மண்டல கிராமப்புற வங்கிகளும் இஎம்வி சிப் (EMV Chip) பொருத்தப்பட்ட விவசாயக் கடன் அட்டைகளை வழங்குவதற்குத் தேவையான நிதி உதவியை அளித்து வந்தது. விவசாயிகள் வங்கியில் இருந்து பணம் எடுப்பதற்காக மட்டும் அல்லாமல், பெரும்பான்மையான மின்னணுப் பரிமாற்றங்களுக்கு உழவர்கள் கடன் அட்டையைப் பயன்படுத்தும் வகையில் ஊரக இந்தியாவில் ஒரு புதிய முறையை ஏற்படுத்த வேண்டிய தேவை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. அதைக் கருத்தில் கொண்டு இந்தியா முழுவதும் உள்ள கிராமங்களில் மின்னணு முறையில் பணப்பரிமாற்றம் செய்வதற்கான கருவிகளை (Point of Sale Terminals - POST) வாங்குவதற்காக கூட்டுறவு வங்கிகளுக்கும், மண்டல ஊரக வங்கிகளுக்கும் நபார்டு வங்கி தொடர்ந்து மானியங்களை வழங்கி வந்தது.

முறை சார்ந்த வங்கிச்சேவை பெற முடியாத மக்களையும் நிதி சார்ந்து உள்ளடக்கிக் கொள்வதில் ஆதார் மூலமான பணம் வழங்கும் அமைப்பு முக்கியமான பங்கினை வகிக்கிறது. ஆதார் மூலமான பணப்பரிமாற்றம் செய்யும் கருவிகள் மூலம் ரூ.2000 வரை பணப்பரிமாற்றம் செய்யும் போது, அதிகபட்சமாக 10 ரூபாய் வரை, 0.5 சதவீதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் படி வழங்கப்படும் உதவிகளை, எந்தவிதமான கசிவும் இல்லாமல் பொதுமக்களின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்தும் நோக்குடன் 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிமுகம் செய்யப்பட்ட நேரடிப் பணப்பயன் பரிமாற்றத் திட்டமும் மிகவும் சிறப்பானதாக அமைந்தது. மின்னணுப் பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை இந்திய ரிசர்வ் வங்கி மூலம் ஏற்படுத்தப்பட்ட பணம் வழங்கல் (Payment Bank) ஆகும். சிறு வணிகர்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், புலம் பெயரும் தொழிலாளர்கள் போன்றவர்கள் பாதுகாப்பான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பணம் செலுத்துதல், பணம் பெறுதல், பிற நிதிச்சேவைகளைப் பெறுதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்பது தான் பணம் வழங்கல் வங்கி உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும். கிரீன் சேனல் வங்கிச்சேவை என்ற தொழில் நுட்பத்தின்படி, யாருடைய வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்ப விரும்புகிறீர்களோ, அந்தக் கணக்கின் எண்ணையும், எவ்வளவு பணம் அனுப்ப விரும்புகிறீர்கள் என்ற விவரத்தையும் பணப்பரிமாற்ற எந்திரத்தில் பதிவு செய்துவிட்டு,

வங்கியில் பணத்தைச் செலுத்தி விட்டால், அது குறிப்பிட்ட வங்கிக் கணக்கிற்குச் சென்று சேர்ந்து விடும்.

**தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் (ஏடிஎம்)**

தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் அதிலிருந்து பணத்தை எடுக்க மட்டுமே முடியும். ஆனால், இப்போது தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் மூலம் எவர் ஒருவரின் வங்கிக் கணக்கிற்கும் பணம் அனுப்பவும் முடியும். இதற்கான ஒரே நிபந்தனை பணம் அனுப்புபவரும், பணம் பெறுபவரும் ஒரே வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்பது தான். பல வங்கிகள் ஏடிஎம் எந்திரங்கள் மூலம் பணம் செலுத்தும் வசதி யையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

**வங்கித் தொடர்பாளர்கள் முதல் கைபேசி வங்கிச் சேவை வரை**

ஊரகப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் வாழும் பயிற்சி பெறாத தொழிலாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் குறைந்த அளவு படித்த மக்களுக்கு வங்கித் தொடர்பாளர்களின் சேவை மிகவும் அவசியமாகும். அவர்களுக்கு வங்கிக்கணக்குத் தொடங்கித் தருதல், அவர்களின் பணத்தை வங்கியில் செலுத்துதல், அவர் களுக்கு வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுத்துத் தருதல் உள்ளிட்ட பல சேவைகளை மக்களுக்கு வங்கித் தொடர்பாளர்கள் வழங்குகின்றனர். ஒரு மளிகைக் கடையோ, அல்லது சில்லறை விற்பனை நிலையமோ வங்கித் தொடர்பாளராகப் பணியாற்ற முடியும். புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அதிகரித்து வரும் போட்டி காரணமாக, தொழில்நுட்ப அறிவு பெற்ற மக்கள் தங்களின் வங்கிச் சேவைகளுக்காக செல்பேசிகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். அதே போல், தொலைபேசி மூலம் வங்கிச்சேவை பெறுவதை மிகவும் எளிமையாக்கும் நோக்குடன் வங்கிகளும் தொழில்நுட்பங்களை மேம்படுத்திக் கொண்டே வருகின்றன.

**புதிய செல்பேசி வங்கிச் செயலிகள்**

பொதுமக்களுக்கு செல்பேசி மூலம் வங்கிச்சேவையை வழங்கு வதற்காக வங்கிகள் ஐஓஎஸ் (iPhone Operating System) தொழில் நுட்பம் கொண்ட செல்பேசிகள் மற்றும் ஆன்ட்ராய்டு தொழில்நுட்பம் கொண்ட செல்பேசிகள் ஆகிய வற்றுக்கு ஏற்ற செயலிகளை வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ளன. செல்பேசி வழியான வங்கிச்சேவை செயலிகளைப் பயன்படுத்தி, பணம் அனுப்புதல், வங்கி பணப் பரிமாற்ற அறிக்கைகளை பெறுதல், செல்பேசி களுக்கு ரீசார்ஜ் செய்தல், தங்கும் விடுதி அறை முன் பதிவு முதல், தொடர்வண்டிப் பயணச்சீட்டு முன் பதிவு வரை அனைத்து வகையான முன்பதிவுகளையும் செய்தல் போன்றவற்றைச் செய்ய முடியும்.

**நெஃப்ட் மற்றும் ஆர்டிஜிஎஸ் சேவைகள்**

தேசிய மின்னணுப் பணப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer - NEFT) எனப்படும் பணம் அனுப்புதல் முறை, நிகழ்நேர பெருந்தொகைத் தீர்வு (Real Time Gross Settlement, - RTGS) எனப்படும் அதிகப் பணத்தை உடனடியாகச் செலுத்துதல் ஆகியவை ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக் கணக்கிற்கு எளிதாக பணம் அனுப்புவதற்கான தொழில்நுட்பங்களாகும். தனிநபர்கள், நிறுவனங்கள், கம்பெனிகள் ஆகியவற்றுக்கு இந்தத் தொழில்நுட்பங்கள் பெருமளவில் உதவும். இந்தியாவில் உள்ள பல வங்கிகள் பன்னாட்டு நிதிப்பரிமாற்றங்களுக்கான முகவர் களாக உள்ளன. அவற்றின் மூலம் கைபேசியைப் பயன்படுத்தியே பணப்பரிமாற்றம் செய்ய முடியும்.

**தேசிய தானியங்கி பணப்பரிமாற்ற இல்லம்**

தேசிய தானியங்கி பணப் பரிமாற்ற இல்லம் என்ற சேவையை இந்திய தேசிய பணம் வழங்கல் கழகம் கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிமுகம் செய்தது. பணப்பரிமாற்றத்தில் தரவு மேலாண்மை, வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தச் சேவை முக்கியமான பங்கு வகிக்கிறது.

**மையப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகள்**

இந்தியா முழுவதும் உள்ள வணிக வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் மையப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையை இப்போது வழங்குகின்றன. இதைப் பயன் படுத்தி வாடிக்கையாளர்கள் எந்த நேரமும், எந்த இடத்திலும் வங்கிச் சேவையைப் பெறலாம். இது சாதாரண மனிதர்களின் வாழ்க்கையை மிகவும் எளிதாக்கியிருக்கிறது. கைபேசி வங்கிச்சேவையைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இத்தகைய மின்னணு வசதிகளும் பெருகி வருகின்றன என்பதையே இந்தப் போக்கு காட்டுகிறது.

இந்தியாவில் இப்போது செயல் பாட்டில் உள்ள தொழில்நுட்பங்

களைக் கடந்து, அதிநவீன புதுமையான வங்கித் தொழில்நுட்பங்கள் ஆய்வு நிலையிலும், சோதனை அடிப்படையிலான பயன்பாட்டு நிலையிலும் உள்ளன. இவை செயல்பாட்டுக்கு வரும் போது அடுத்த ஐந்து ஆண்டுகளில் நமது வாடிக்கையாளர்கள் குரல், சைகை, மெய்நிகர், கண் கருவிழிகளை உருட்டிப் பார்த்தல் ஆகியவற்றின் மூலமாகவும், விரல்களைப் பயன்படுத்தியும், உரையாடும் முப்பரிமாணப் படங்கள் (Holograms) மூலமாகவும் வங்கிச் சேவைகளைப் பெற முடியும்.

**புதிய கண்டுபிடிப்புகள்**

**தானியங்கி ரோபோடிக் நடைமுறை:**

மின்னணுஜீ பொருளாதாரம் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், வங்கிகளால் கையாளப்படும் வகைப்படுத்தப் படாத தரவுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகிறது. அவற்றை வெறும் வங்கிப் பணப்பரிமாற்றமீலீ தரவுகளாக மட்டும் கருத முடியாது. அவை வாடிக்கையாளர்கள் எத்தகைய பணப்பரிமாற்றங்களை செய்கிறார்கள்? எதற்காகச் செய்கிறார்கள்? என்பதை ஆய்வு செய்வதற்கான தரவுகள் ஆகும். அவற்றைக் கொண்டு வங்கிகள் தங்களின் வாடிக்கையாளர்களை புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி வழிநடத்திச் செல்லமுடியும். புரிந்து கொள்ளவும், தானாக இயங்கவும் ஏற்ற பல்வேறு தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் வாடிக்கையாளர்களின் செயல்பாடுகளை முன்கூட்டியே கணித்து விரைவான, பெருமளவிலான, தரமான முடிவுகளை வங்கிகள் எடுக்க முடியும். வங்கிப் பரிமாற்றங்களைக் கையாளுதல், அவை சார்ந்த தகவல்களை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் திறன்மிகு மெய்நிகர் உதவியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவுகின்றனர். மனிதக் குறுக்கீடு இல்லாமல் ஒரே மாதிரியான செயல்பாடுகளை மீண்டும் மீண்டும் திறமையான முறையில் செய்வதற்குத் தானியங்கி ரோபோட்டிக் நடைமுறை தானியங்கிக் கருவிகளைப் பயன்படுத்தப்படுகிறது.

**தரவுப் பகுப்பாய்வு**

இன்றைய சூழலில் வங்கிகள் வாடிக்கையாளர்களின் வணிகத் தரவுகளை ஆய்வு செய்து, அவர்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றுகின்றனர். தொழில் நுட்ப வளர்ச்சி, மின்னணு மயமாக்கல் ஆகியவை அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், சந்தைப் போட்டிகளை எதிர்கொள்ளுதல், எதிர்காலத்தில் அறிமுகப் படுத்தப்பட வேண்டிய தயாரிப்புகள், வாடிக்கையாளர்களின் திருப்தியை உறுதிசெய்தல் ஆகியவை சார்ந்த அறிவார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு வங்கித்துறைக்கு உதவுகின்றன.

**ஏபிஐ தளம்**

பயன்பாட்டு நிரலாக்க இடைமுகம் (Application application> Programming Interface - API) எனப்படும் ஏபிஐ தளத்தின் மூலமாக வங்கிகள் தற்போது நிதித்தொழில்நுட்பத்தில் ஈடுபட்டுள்ளன. இதன் மூலம் மூன்றாம் நிலை சேவை வழங்குவோரும், வங்கி வாடிக்கையாளரும் தொடர்பு கொள்ளவும், அவர்கள் மனநிறைவு அடையும் வகையில் பல்வேறு சேவைகளை வழங்கவும் இந்தத் தளம் உதவுகிறது. ஏபிஐ வங்கியின் தளம் பயன்பாட்டு நிரலாக்க இடைமுகம் வாயிலாகச் செயல்படுகிறது. வங்கி நிரலாக்க இடைமுகம் என்பது ஒரு வகையான மென்பொருள் ஆகும். இரு வகையான செயலிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ள ஏற்பாடு செய்யும் இடைத்தரகராக இந்த மென்பொருள் செயல்படுகிறது. வங்கிகள் முற்றிலும் புதிய வணிக மாதிரிகளை ஏற்றுக்கொள்வதற்கும், பிளாக்செயின் போன்ற புதிய தொழில்நுட்பங்களைக் குறைந்த செலவில் பயன்படுத்துவதற்கும் இந்த மென்பொருள் உதவுகிறது. வங்கிகள் அவற்றின் கட்டமைப்பை எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு நவீனப்படுத்துவதற்கும் இந்த மென்பொருள் உதவுகிறது.

**சைபர் பாதுகாப்பு**

வாடிக்கையாளர்களின் தனிநபர் விவரங்களை வங்கித்துறை கையாளுகிறது. அத்தகைய தகவல்களைக் கைப்பற்றுவதற்காக சைபர் குற்றவாளிகள் தாக்குதல் தொடுக்கின்றனர். வங்கித் துறையில் தொழில்நுட்பப் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சைபர் ஆபத்துகளும் அதிகரித்து வருகின்றன. சைபர் பாதுகாப்பைப் பொறுத்தவரை வங்கிகள் மிகவும் விழிப்பாக இருந்து வருகின்றன. வங்கி அமைப்பு முறையில் தாக்குதல் நடத்துவதற்கு நடைபெறும் முயற்சிகளைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்காக, அதிநவீனப் பகுப்பாய்வு, நிகழ்நேரக் கண்காணிப்பு, பயோமெட்ரிக் மற்றும் நடத்தைப் பகுப்பாய்வு மென்பொருள் ஆகியவற்றை வங்கிகள் பயன்படுத்துகின்றன. கணினிகளை ஊடுருவுவதற்கான (Hacking) கருவிகளையும் வங்கிகள் பயன்படுத்துகின்றன. இந்தக் கருவிகள் வங்கியின்

வலைப்பின்னலுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

**மேகக் கணினி**

மேகக் கணினி என்பது வங்கித் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் மற்றொரு தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகும். சேவை வழங்கும் மாதிரிக் கான மிக முக்கியமான கருவி மேகக் கணினியாகும். வங்கிகள் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிவதற்காகவும், புதிய விநியோக வாய்ப்புகளை அணுகு வதற்கும் இது உதவுகிறது. இது சார்ந்த சேவைகளை வலுப்படுத்து வதன் மூலம் வங்கிகள் வாடிக்கை யாளர் சார்ந்த தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வது மட்டுமின்றி, அவற்றை சேமித்து வைப்பதற்கான செலவுகளையும் குறைக்க முடியும். இதன் மூலம் வங்கிகளின் மூலதன மற்றும் இயக்கச் செலவுகள் குறையும். அதுமட்டுமின்றி, ஆன்லைன் பணப்பரிமாற்றம், மின்னணுப் பணப்பரிமாற்றம், பணப்பைகள் (Vallets) மூலமான பணப்பரிமாற்றம் ஆகியவற்றின் பாதுகாப்பையும் மேகக் கணினி வலுப்படுத்துகிறது.

**பயோமேட்ரிக்ஸ்**

காகிதப் பணத்தைச் சார்ந்தி ருப்பது படிப்படியாகக் குறைந்து வருவதால், புதிய பணம் வழங்கல் முறைகளைக் கண்டுபிடிப்பதற்காக பல நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றன. அவற்றுக்குப் பெருமளவில் பயன்படுவது பயோமேட்ரிக்ஸ் ஆகும். இதன் மூலம் வாடிக்கை யாளர்கள் தங்களின் கை விரல்கள் அல்லது முகத்தைக் கொண்டு தங்களின் அடையாளத்தை எளிதாகச் சரிபார்த்து ஒரு சில விநாடிகளில் பணத்தைச் செலுத்த முடியும்.

**உரையாட மென்பொருள்**

குரல் மூலம் வாடிக்கையாளர்கள் மூலம் உரையாடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், வங்கிகள் புதிய நிதிச்சேவை சார்ந்து உரையாடுபவர்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. ஒரு பரிமாற்றத்திற்கான நேரத்தை 4 நிமிடங்கள் வரை இவை மிச்சப் படுத்தும். அதுமட்டுமின்றி, இந்தப் பரிமாற்றம் குறித்த வாடிக்கை யாளரின் கருத்தையும் வங்கிகள் குறைந்த செலவில் மிக எளிதாகப் பெற முடியும்.

**கைகளில் அணியக்கூடிய திறன்மிகு கடிகாரங்கள்**

கைகளில் கட்டிக்கொள்ளக் கூடிய திறன்மிகு கைக் கடிகாரங்கள் (Smart Watch) வாடிக்கை யாளர்களுக்கு தனித்துவமான மின்னணுப் பணப்பரிமாற்ற அனுபவத்தை வழங்குகின்றன. 1981 முதல் 2012 வரை பிறந்த புதிய தலைமுறையினரிடையே இத்தகைய திறன்மிகு கைக்கடி காரங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், அது மின்னணுப் பணப் பரிமாற்றத்தில் கண்டிப்பாகப் புரட்சியை ஏற்படுத்தும்.

**ஜீரோ டிரஸ்ட் பாதுகாப்பு மாதிரி**

பழைய தகவல் தொழில்நுட்ப மாதிரிகள் மீது வங்கிகளும், வாடிக்கையாளர்களும் நம்பிக்கை இழந்து வருகின்றனர். அதிகரித்து வரும் சைபர் ஆபத்துகளை சமாளிக்க ஜீரோ டிரஸ்ட் பாதுகாப்பு மாதிரி தான் (Zero-Trust Security Model) ஒரே வழி ஆகும். இந்தத் தொழில்நுட்பத்தில் ஜீரோ டிரஸ்ட் என்பது மறைமுக நம்பிக்கை எதையும் சார்ந்திராது இருப்பதாகும். மறைமுக நம்பிக்கைகளைச் சார்ந்திருக்காமல், பயனாளர் மற்றும் கருவி சரிபார்ப்பை மிகவும் தீவிரமாகக் கடைபிடிப்பதை ஜீரோ டிரஸ்ட் மாதிரி உறுதி செய்கிறது.

**எதிர்காலம்**

இன்றைய காலத்தில், குறிப் பாகப் பெருந்தொற்று நோய்கள் அதிகம் ஏற்பட்டு வரும் காலத்தில், வங்கிச் சேவைகளை மின்னணு மயமாக்குவதன் முக்கியத்து வத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, அரசுத்துறை, தனியார் துறை உள்ளிட்ட அனைத்து இந்திய வங்கிகளும் பணம் வழங்கல் முறையை மின்னணுமயமாக்கிய பிறகு கடன் திட்டங்களையும், மின்னணு மயமாக்குவதில் கவனம் செலுத்தி வருகின்றன. இந்தியாவின் மத்திய வங்கியாகக் கருதப்படும் இந்திய ரிசர்வ் வங்கி, இதற்காக 04.01.2022 முதல் நிதித் தொழில்நுட்பத் துறையைத் தொடங்கி செயல் படுத்தி வருகிறது. இது வங்கித் துறையில் புதுமை கண்டுபிடிப்பை ஊக்குவிப்பது மட்டுமின்றி, இனி வரும் காலங்களில் நிகழ்த்தப்பட விருக்கும் புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் சவால்கள், வாய்ப்புகள் மீதும் கவனம் செலுத்தும். அதுமட்டுமின்றி, வங்கித் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளுக்காக இந்த அமைப்பு தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடும்.

---

– **மஞ்சுளா வாத்வா**, துணைப் பொது மேலாளர், தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு).

# 1857

ஆயிரத்துத் எண்ணூற்று ஐம்பத்து ஏழு!
அது ஒரு எண்ணம்... புரட்சி பற்றிய தாகம்!
ஒரு குமைச்சல்! ஒரு வலி! அக்கினிக் கங்கு! அது வெடித்தது,
150 ஆண்டுகள் கடந்து போயின.
தீப்பொறிகள் ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுத்தோம்
ஒளிபடைத்தோம்,
எத்தனை முறைகள் எத்தனை இடங்கள்!

தீப்பொறிகளை நாங்கள் விதைத்தோம்,
ஒளி உமிழும் அந்தச் செடியை நாங்கள் உருவாக்கினோம்!!
வன்முறையாலும் அகிம்சையாலும்
நாங்கள் மூட்டிய தீ ஏராளம்.

கான்பூர், ஜான்சி, லக்னௌ, மேரட், ரூட்கி, பட்னா.
சுதந்திரத்தின் முதல் போர் தன் தீவிர முகம் காட்டியது
முதல் போர் தன் தீவிர முகம் காட்டியது.
பரஸ்பர வலியை அனைவரும் உணர்ந்தார்கள் முதன்முறையாக!
கரங்கள் இணையவில்லை,
ஆனால் யாரோ ஒருவரின் விரல் பிடித்திருக்கிறார்கள்.
உதிரம் கொதித்தால் உளமும் கொதிக்கும் என்றானது.
முதன்முறையாக இந்திய மாந்தர்
தம் உடல்களில் தேசத்தின் குரலங்கே ஒலித்தது.

முதன்முறையாக இப்படி இது நடந்தது...
கிராமங்கள் தோறும் வறண்ட ரொட்டிகளைப் பகிர்ந்தார்கள்
அணைந்த அடுப்புகளில் திடீரென அக்கினி பிறந்தது!
அங்குமிங்கும் பறந்த எளிய தீப்பொறிகள் கூட
ஆதவனைப் புரட்டிப் போட சவால் விடுத்தன.
அதுதான் புரட்சியின் முதல் அறைகூவல்!!

உயிர்ப்புடன் உலவினர் அப்போது,
பாலையின் பறவைக்கூடுகள் போல
மரங்களில் சவங்களாய்த் தொங்குகின்றனர் இப்போது,
பயங்கரத்தில் ஆழ்ந்த மஹ்ரௌலிவாசிகள் தப்பிப் பிழைக்க
வழி எதிர்பார்த்து தில்லியிடத்தில் ஏங்கி இருக்கிறார்கள்.

இம்முறை நடந்ததோ வேறு
வழிகாட்ட யாரும் இல்லையே
சாகச வீரர்கள் பலர் வந்தாலும்
சமாளித்துச் செலுத்தவோர் மனிதன் இல்லை
இப்படியும் கூட நடந்தது அங்கே...
சிலரோ தாமதமாக துயில் விழித்தார்கள்
மேலும் சிலரோ காலணி அழகைப் பார்த்திருந்தார்கள்
உணரும் முன்னே அவத் பூமியும் அழிந்து போனது.
கயமை நிறைந்தவன் தலைவனைக் கூட
தொலைவான பர்மாவில் சிறை வைத்தானே.
கல்லறைச் சிறையில் சிக்கி இருக்கும் அவனை
நம்முடை நாட்டில் அடக்கம் செய்வார் உண்டோ.

இப்போது நாம் சுதந்திரமானவர்கள்...
நம்நாடும் சுதந்திரம் அடைந்துவிட்டது
இப்போது அனைத்தும் நமதுடைமை
இந்த தேசத்தின் நதிகளனைத்தும்
நம்முடையவை ஆனால்
தாகம் மட்டும் இன்னும் தீர்ந்தபாடில்லை

வானில் மேகங்கள் நிறைந்திருந்தாலும்
யாரோ அவற்றைக் களவாடுகிறார்கள்
ஆதவன் அனுதினம் உதித்தாலும் கூட
வயல்களுக்கு விடியல் இன்னும் வரவில்லை

இப்போது என்தேசம் சுதந்திரமானது...
தீப்பொறி தருவாய்... அவற்றை மீண்டும்...
நிலத்தில் விதைப்பேன் ஒளிஉமிழ்
செடியை உருவாக்கியெந்தன்
நாட்டுமக்கள் வாழ்வினை பிரகாசிக்கச் செய்வேன்...
இணைந்து அனைவரும் குரல் கொடுப்போமே...

புரட்சி
புரட்சி
புரட்சி!!

Gulzar

- குல்ஜார்



(2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் யோஜனா இதழில் வெளியான கவிதை)

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)


Published on: **1st Week of Every Month**
Posted on : **8th August 2022**
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023

## எமது வெளியீடுகள்


**INDIA 2022**


**YEAR BOOK**




**PRINTED VERSION Rs.330/-**
**E BOOK Rs.248/-**

## ECONOMIC SURVEY 2021 – 2022 Two Volumes




**Rs.495/-**

புத்தக வெளியீட்டுப் பிரிவு (Publications Division) வெளியிட்டுள்ள இந்த ஆங்கிலப் பதிப்புகள் தேவைப்படுவோர் அணுகுங்கள்:

தொலைபேசி எண்கள்: 044 24465382, 044 24917673

மின்னஞ்சல்: bsmechennai@gmail.com <mailto:bsmechennai@gmail.com>அமேசானிலும் கிடைக்கிறது.

Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.